DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1365 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 3, 2022

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# Ontario's Premier wins another majority

# நேற்றைய ஒன்றாரியோ மாகாணத் தேர்தலில் அதிபெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி மீண்டும் முதல்வரானார் டக் போர்ட்


நேற்று 2ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற ஒன்றாரியோ மாகாணத் தேர்தலில் அதிபெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி கொன்சர்வேர்ட்டிவ் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கவுள்ளதோடு கட்சியின் தலைவர் டக் போர்ட் அவர்கள் முதல்வராகத் தெரிவானார்.


இந்த செய்தி இன்று அதிகாலை எழுதப்படும் போது முதல்வர் டக் போட் அவர்களின் கொன்சர்வேட்டிவ் கட்சி மொத்த 124 ஆசனங்களில் 83 ஆசனங்களையும், புதிய ஜனநாயகக் கட்சி 31 ஆசனங்களையும். லிபரல் கட்சி 8 ஆசனங்களையும் ஒன்றாரியோ பசுமைக் கட்சி ஒரு ஆசனத்தையும் சுயேச்சை வேட்பாளர் ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டனர்.









மேலும் இந்த தேர்தலில் போட்டியிட்ட கொன்சர்வேர்ட்டிவ் கடசியின் தமிழ் பேசும் இரு தமிழ் பேசும் வேட்பாளர்களான லோகன் கணபதி (மார்க்கம்-தோர்ன்ஹில்), விஜய் தணிகாசலம் (ஸ்காபுறோ-ரூஜ் பார்க்.) ஆகியோர் மீண்டும் வெற்றியை ஈட்டிக் கொண்டனர்.


அத்துடன், தமிழ் பேசும் மக்களின் ஆதரவை அதிக-ளவில் பெற்றவர்களான இருவர் இந்தத் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டியுள்ளனர். ஸ்காபுறோ-அஜின்கோர்ட் தொகுதியில் அரிஸ் பாபிகியன் அவர்களும். ஸ்காபுறோ-வடக்கும் தொகுதியில் அமைச்சர் ரேமன்ட் சோ அவர்களும் வெற்றிவாகை சூடியுள்ளனர்.

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

## புதிய ஜனநாயகக் கட்சி அன்றியா ஹார்வர்த் மற்றும் லிபரல் கட்சித் தலைவர் ஸ்டீபன் டெல் டுக்கா ஆகியோர் தங்கள் தலைமைப் பதவிகளைத் முறையே துறந்தனர்





நேற்றைய தேர்தல் முடிவுகள் வெளியான சில மணிநேரங்களின் பின்னர் எதிர்பாராத அறிவிப்புக்களை இரண்டு எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் விடுத்தனர்.

ஒன்றாரியோ தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கவுள்ள புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவி அன்றியா ஹார்வர்த் அவர்களும் படுதோல்வியைத் தழுவியுள்ள லிபரல் கட்சியின் தலைவர் ஸ்டீபன் டெல் டுக்கா ஆகியோர் தங்கள் தலைமைப் பதவியைத் துறந்துள்ளனர்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# LOOKING FOR YOUR Dream House?



**Call SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Manufacturing Workers & General Labour Needed

உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை

Manufacturing Workers and General Labour Needed
for Full-time Morning Shifts
Looking for Workers to add to our team.
We are looking for hard-working and dedicated people for long-term positions.
Located in Scarborough near Markham and Ellesmere.
Salary starting from $16.00 + with benefits.

**Contact - Essan : 647-993-2872**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Walkout Basement வாடகைக்கு உண்டு

ஏஜெக்ஸ் நகரில் **Taunton/New Seaton** சந்திப்புக்கு அருகில் உள்ள புதிய வீடொன்றில் **Walk-out Basement** உடனடியாக வாடகைக்கு உண்டு. இரண்டு அறை-கள் ஒரு குளியல் அறை மற்றும் **Washer-Dryer** தனியாக உண்டு. அத்துடன் ஒரு வாகனத் தரிப்பிடமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்குத் **416 879 0966**

### Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.

Responsibilities:
-Present and sell company products to potential customers
-Find and cold-call new prospects in existing and in new markets
-Prospect and contact potential customers while generating quality leads
-Must be result-driven and reach agreed sales targets by the deadline
-Resolve customer inquiries and complaints about the products
-Strong organization, and communication skills and be goal-oriented
-Ability to work in B2B corporate sales environment
-Must have a professional appearance and manner

Qualifications:
-Must have 2 or more years of outside sales experience
-Great written and verbal communications skills
-Good Microsoft Office abilities
-Ability to build a great and strong rapport with clients
-Strong negotiation skills
-Deadline and detail-oriented
-Exceptional Time Management skills and Organizational Skills Required
-Must have a valid driver's license and reliable transportation
-Bonus: has experience in the pallet industry

Benefits:
-Competitive base salary + Uncapped commission
-On-going training and development to ensure your success
-Health Benefits option available

**Contact - Essan : 647-993-2872**

### ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### முழு நேரப் பராமரிப்பாளர் ஒருவர் தேவை

ஸ்காபுறோவில் வசிப்பவரும் நடமாடக்கூடியவருமான முதியவர் ஒருவரை அதே வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கக் கூடிய ஆள் ஒருவர் உடனடியாகத் தேவை. அனுபவம் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: 647-540-9520**

### CLEANERS WANTED

Location :Kennedy & Denison Condominium
Time & Days:
MON TO FRI (7.30AM -3.30PM)
2 PERSONS NEEDED
Saturday & Sunday (8AM-4PM)
Pay rate - $16/hr
Previous condominium cleaning experience required.

Location : Victoria Park & Kingston Road
Time & Days: 10PM -2AM
Monday to Sunday Pay rate : $17/HR
Previous cleaning experience required.

**Please contact - MANO @ 416-722-2914**

### உணவகத்தில் உடனடி வேலை வாய்ப்பு

**Line Cooks** மற்றும் **Dishwashers** ஆகியோர் தேவை.
**150 Water Street, Port Perry ON L9L 1C4** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **Anchor Point Grill House & Bar** உணவகத்தில் அமைந்துள்ள இடம் **intersection of Water Street and Mary Street**

**உடன் அழைக்கவும்**
**647-680-4785**

உதயன் கதிரோட்டம்

# ஆசிரிய பீடத்திலிருந்து மற்றுமொரு திறந்த மடல்...

கடந்த வாரம் எம்மில் பலரை நாம் விழாக்கள் நிறைந்த மண்டபம் ஒன்றில் சந்தித்தோம் என்பதை எண்ணுகின்ற போது, மனது குதூகலிக்கின்றது. குறைந்த தொகையில் இந்த மண்ணில் குடியேறத் தொடங்கிய எமது சமூகத்தின் அடையாளமாக விளங்கும் ஊடக நிறுவனம் என்ற வகையில் பல படிகளைக் தாண்டி வந்த நாம் ஒரு மேடையில் நின்ற வண்ணம் நாம் சந்தித்த தமிழ் உள்ளங்களோடு உரையாடப் போகின்றோம் என்பதும் அதிலும் பார்க்க சில மைல்க் கற்களை கடந்து வருவதற்கு இந்த தேசமும் அரசாங்கங்களும் எமது தமிழ்ச் சமூகமும் பாலமாக விளங்கியிருக்கின்றனவே என்பது நிதர்சனமாகத் தெரிகின்றபோது, யாவர்க்கும் நன்றி சொல்வதற்காக எம் நாக்குகள் அசைகின்றன.

தாய் மண்ணை விட்டு நீங்கி, நாம் கால் பதித்த கனடிய மண் எம்மைத் தாங்கிக் கொண்டாலும் மீண்டும் அதே தாய் மண்ணை எண்ணி ஏங்கிய நாட்கள் இன்னும் ஞாபகத்திற்கு வருகின்றன.

எம் சொந்தங்களான உறவுகள் தொடர்ந்து ஆபத்துக்கள் நிறைந்த அந்த மண்ணில் அனுபவித்த துன்பங்களும் மண் மீட்புக்காக தம்மை அர்ப்பணித்தவர்களின் தியாகங்கள். அவ்வாறான தியாக சீலர்களை காட்டிக் கொடுக்கப் புறப்பட்டவர்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியும் இவை போன்ற பல விடயங்கள், பறந்து வந்த வான் வழிப் பாதையை அண்ணாந்து பார்க்கத்தான் செய்தன.

எமது கனடா உதயன் பத்திரிகையின் முக்கியமான மூன்று நிகழ்வுகள் கடந்த 29-05-2022 அன்று ஞாயிற்றுக்கிழமை கனடாவின் ஸ்காபுறோ நகரில் இடம்பெற்றமை தொடர்பாக பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். இந்த விழா பற்றிய செய்தி உலகத் தமிழர்களின் செவிகளிலும் பார்வையிலும் பட்டு தெறித்த விடயங்கள் எவ்விதத் தடைகளுமின்றி எம் காதுகளுக்கும் பார்வைக்கும் முன்னாள் நின்று சந்தோசச் சத்தம் எழுப்புகின்றன.

தாயகத்தில் படைப்பிலக்கியத் துறையில் இளம் வயதிலேயே கால் பதித்ததனால் இன்று 50வது ஆண்டை எட்டிப் பிடிக்க வகை செய்துள்ளது காலம். ஆமாம்! கால ஓட்டத்தோடும் எதிர் வந்த சவால்களோடும் நாம் இத்தனை ஆண்டுகள் பயணித்துள்ளோம் என்பதை நினைக்கையில் ஆச்சரியமாகவே இருக்கிறது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர படைப்பிலக்கியத் துறையின் மீது பரவசத்தோடு கால்பதிக்கையில் புன்னகை பூத்த முகத்தோடு எம்மை வரவேற்று களம் தந்த பல சஞ்சிகையாளர்களுக்கு நன்றி சொல்வதற்காக அவர்களது இருப்பைத் தேட முனைகின்றோம். ஆனாலும் வெளிச்சமாகத் தெரிகின்றது, அவர்கள் எமக்கு களத்தைத தந்து விட்டு அவர்களில் பலர் 'காலம்' சென்று விட்டார்கள் என்று.

எனினும் அந்த சஞ்சிகைப் போராளிகளின் அயராக உழைப்பையும் படைப்பாளர்கள் மீது அன்பு பாராட்டும் அதிசயத்தையும் அனுபவித்தவர்கள் என்ற வகையில் எங்கள் இதயங்களில் இன்னும் அவர்களுக்கு இடமுண்டு என்பதை பதிவு செய்யும் காலப் பகுதி இதுவொன்றே.

படிப்பதும் எழுதுவதும் பின்னர் எழுதுவதும் என்ற பழக்கம் தொடர்ச்சியாக எம்மை இயங்கச் செய்தது என்றால், அது மிகையாகாது. காலச் சக்கரம் சுழன்று செல்ல நாம் சந்தித்த அனைத்து விடயங்களிலும் எழுத்தும் சிந்தனையும் அவசியமாகி நின்றன. சமூகங்கள் பல இணைந்த ஒரு தேசத்தை ஒன்றுபட்டு வாழ்ந்து உயரச் செய்ய வேண்டிய நேரத்தில் அரசியல்வாதிகள் அதைச் செய்யாமல் தங்கள் பொருளாதார வளத்தை 'உயர்த்தி' நின்றார்கள். மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே அரசியலுக்கு வருகின்றார்கள் என்று எண்ணியிருந்த மக்களுக்கு ஏமாற்றமே பரிசாகக் கிட்டின.

இனரீதியாகவும் சமூகங்களின அடிப்படையிலும் நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தினால் மோசமான ஆட்சி செய்பவர்களின் எண்ணங்கள் இடையூறு எதுவும் இன்றி என்பதை தெரிந்து கொண்டவர்கள் அதையே தொடர்ச்சியாகச் செய்து நின்றார்கள்.

இவ்வாறான பல்வேறு முரண்பாடுகள் கொண்ட சமூகமாக இருந்த நாம் பார்க்கையில். எம்மிடத்தில் படைப்பிலக்கியம் என்ற கருவியும் சிந்திக்கக் கூடிய சாதகமான சந்தர்ப்பங்களும் தாமாகவே கூடி வந்தன. இதனால் எமது எழுத்துக்கள் அரசியல் பக்கமும் ஆர்வத்தோடு படையெடுத்தன. சமூகத்தின் நலன் கருதி தலைவர்கள் செயற்படாத காரணத்தால் அவர்களைச் சாட வேண்டிய தேவைகள் குவிந்திருந்தன.

இன்னொரு பக்கத்தில் சமூகப் பிரச்சனைகளை ஆராய்ந்து பார்க்க முற்படுகையில் அதற்கு தத்துவார்தத் ரீதியான அறிவுத் தேடல் வேண்டும் என்பதற்காக அவற்றுள் முனைந்தோம்.

இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுடன் இருந்த எமக்கு முன்பாக இனம் சார்ந்த விடுதலைப் போராடத்திற்கான முனைப்புகள் முளைவிடத் தொடங்க. அந்தப் பக்கமும் நாம் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருந்தன. இன விடுதலைக்கான நம்பிக்கைகள் சார்ந்த தலைமைகளுக்கு பின்னால் அடிவைக்க வேண்டிய தேவையும் எமக்கிருந்தன என்பதையும் நாம் இங்கே உணர்ந்து கொண்ட காலப்பகுதியை கடந்த வசந்தோம்.

புலம் பெயர வேண்டிய நாட்கள் வந்தபோது தாய் மண்ணிலிருந்து நாம் கொண்டு வந்தவை படைப்புக்கள் மீது ஆர்வம் கொண்டதும் அதனால் அரசியல் சமூகம் சார்ந்து சிந்திக்க வேண்டும் என்ற வேட்கையும் எம்மிடத்தில் தோன்றியது.

அதன் விளைவே, நாம் தொடர்ச்சியாக கனடிய மண்ணிலே ஏறக் குறைய முப்பது வருடங்கள் கலை இலக்கிய ஊடகப் பணிக்குள் மூழ்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆதனோடு இணைந்து 50 ஆண்டுகளை நாம் இரு பெரும் துறைக்குள் கடந்து வந்துள்ளோம்.

சமூகம் என்ற கோட்டுக்குள் உள்ளவர்கள் அனைவருமே ஓரே நோக்கம் கொண்டவர்களாக இல்லை என்பதையும் அனுபவ ரீதியாகத் தெரிந்து கொண்டோம். எனினும் மிகவும் சிரமங்கள் நிறைந்த அனுபவத்தோடு எமது பணிகளைத் நாம் தொடர்ந்து வருகின்றோம். இந்த வேளையிலே கனடாவில் மட்டுமல்ல தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோடு அங்கெல்லாம் நமது அக்கறையும் கவனிப்பும் இருக்க வேண்டும் என்ற எமது எண்ணத்தை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மன்னாரில் 20 வருடங்களாக ஏழை சிறுவர்களின் எதிர்காலத்திற்காக பணியாற்றும் 'அன்பு சகோதரர் இல்லம்'




நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு சிக்கல்களை மக்கள் தொடர்சியாக சந்தித்த வண்ணம் உள்ளனர்.

பொருட்களின் விலைவாசி உணவு தட்டுப்பாடும் நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளது.

இவ்வாறான நிலையிலும் மன்னார் மாவட்டத்தில் கீரி கிராம சேவகர் பிரிவில் உள்ள அன்பு சகோதரர் இல்லமானது ஏழை பிள்ளைகள் மற்றும் தாய் தந்தையை இழந்த அல்லது அவர்களில் ஒருவரை இழந்து வறுமை-யில் வாடும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான கல்வி மற்றும் உணவு, உடை உறைவிடம், போன்ற தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

அதே நேரம் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்விக்கும் கைகொடுத்து வருகின்றது இந்த அன்பு சகோதரர் இல்லம்.

மன்னாரை சேர்ந்த தருமன், வீமன் எனும் இரு சகோதரர்களால், ஏழைகளின் நல்வாழ்வுக்காக உதவ எண்ணிய சில நல் உள்ளங்களுடன் இணைந்து 2001 ஆண்டு இந்த இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் இல்லமானது வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்திலும், மன்னார் பிரதேச செயலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 20 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வரும் இவ் இல்லம் பிள்ளைகளின் கல்வி மாத்திரம் இல்லாமல் ஒழுக்கம், சுயதொழில் பயிற்சி,விளையாட்டு போன்ற பல்வேறு விடயங்களை அவர்களின் கல்வி திட்டத்தின் ஊடாக கற்பித்து வருகின்றனர்.

பெரும்பாலும் மன்னார் மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களை சேர்ந்த அதிகளவான பிள்ளைகள் இங்கு தங்கி தங்கள் கற்றல் நடவடிக்கைகளை இலவசமாக பெற்றுக் கொள்கிறார்கள்.

மேலும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், அதே நேரம் தாய் தந்தை விவாகரத்து காரணமாக பிரிந்து வாழும் கல்வியை தொடர முடியாது கஸ்ரப்படும் பிள்ளைகளும் அன்பு சகோதரர் இல்லத்தின் ஊடாக பயன் அடைந்து வருகின்றனர்.

குறிப்பாக இங்கு பராமரிக்கப் பட்டவர்கள் தற்போது அரச வேலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலை செய்வதோடு, சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் சிலர் பல்கலை கழகங்களிற்கும் தெரிவாகியுள்ளமை பாராட்டுக்குரியதாகும் .

சிலர் இல்லத்தில் கல்வி கற்று இவ் இல்லத்திலேயே பணியாற்றியும் வருகின்றனர். இவ்வாறன பணிகளை செய்து வருகின்ற இவ் இல்லத்திற்கு உங்களின் அன்பான ஆதரவு அவர்களின் செயற்பாட்டையும் சேவையையும் என்னும் விரிவுபடுத்த உதவலாம்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை சமாளிக்க உதவக்கூடிய, ஏழைச் சிறுவர்களின் கல்வியில் ஆர்வம் கொண்ட நன்கொடையாளர்கள் உதவ முடிந்தால் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உங்களால் முடிந்த உதவியை செய்யுங்கள்.

அதேவேளையில், எவ்வளவு நெருக்கடி வந்தாலும் இந்த சேவையை நாங்கள் நிறுத்த போவதில்லை என தெரிவித்துள்ள நிர்வாகத்தினர், குடும்ப வறுமை மற்றும் தாய் தந்தையை இழந்த, கல்வியை தொடர முடியாத பிள்ளைகள் யாராக இருந்தாலும் தங்களுடன் இணைந்து கொள்ளுமாற்றும் எத்தகைய பொருளாதார பிரச்சினையாக இருந்தாலும் தங்கள் முடிந்த சேவையை அவர்களுக்கு வழங்கி அவர்களை சமூகத்தில் நல்ல பிரஜைகளாக்க அனைத்து முயற்சிகளையும் செய்வதாக அன்பு சகோதரர் இல்ல நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுயநலமாக வாழும் இவ் உலகத்தில் 20 வருடங்களுக்கு மேலாக ஏழை பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக செயற்படும் இவ்வாறான இல்லங்கள் தொடர்ந்து இயங்குவதே எமது சமூகத்தின் தேவை.

எனவே எங்களால் ஆன உதவிகளை செய்வோம். அது பணமாக இருக்கலாம் பொருளாக இருக்கலாம் ஏன் ஒரு வேளை உணவாக இருக்கலாம். அதுவும் அந்த ஏழை சிறுவர்களின் எதிர்காலத்தை மாற்றும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இரண்டரை வயது இலங்கைச் சிறுமி உலக சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதித்தார்




அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை அல்மினன் வீதி ஸர்ஜுன் அக்மல் பாத்திமா நுஸ்ஹா தம்பதிகளின் புதல்வியான மின்ஹத் லமி தனது இரண்டரை வயதில் 120 உலக நாடுகளின் தலைநகரங்களை இரண்டு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனைப் புத்தகத்தில் (international book of world record) தனது பெயரை பதிவு செய்தமை பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

உலக சாதனை புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. இவருக்கான இலச்சினை, பதக்கம், மற்றும் சான்றிதழ் என்பவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தனது இரண்டு வயதில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த மின்ஹத் லமி மருதமுனை வரலாற்றில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த முதலாவது சாதனை சிறுமியாவார். இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்திய சிறுமியை பிரதேச மக்கள் பலரும் பாராட்டி வருகின்றார்கள்.

இவர் 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவராவார். இவரது தாய் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இறுதி வருடத்தில் கல்வி கற்று வருகின்றார்.

இவரது தந்தை தனது குழந்தையின் திறமையையும், அதீத நினைவாற்றலை பற்றித் தெரிவிக்கும் போது, "பிறந்த குழந்தைகளின் கைகளில் விளையாட்டுப் பொருட்களுக்குப் பதிலாக ஸ்மார்ட் போன்களை திணித்து மகிழும் பெற்றோருக்கு மத்தியில் நான் எனது குழந்தைக்கு நிறங்கள், பழங்கள், இலக்கங்கள், வடிவங்கள், எழுத்துக்கள் மற்றும் பொதுஅறிவுத் தகவல்களையும், அது தொடர்பான எளிய செயல்முறைகளையும் கற்றுக் கொடுத்ததுடன் குழந்தையுடன் அதிக நேரத்தை செலவிட்டு இன்று எனது குழந்தையை ஒரு சாதனை குழந்தையாக மாற்றியுள்ளேன்" என்றார்.

இச்சிறுமி தனது பெற்றோர் சொல்லிக் கொடுப்பதை கவனமாகச் செவிமடுத்து மனனம் செய்வதுடன், ஞாபகத்திலும் வைத்துக் கொள்வார். இவர் எதாவது ஒரு பொருளையோ, ஒரு இடத்தையோ அவதானித்தவுடன் அது பற்றி அறிந்து கொள்ள அதிக ஆர்வம் காட்டக் கூடியவர். அதனை அறிந்து கொண்டு சில நாட்களுக்கு பின்னர் அப்பொருள் பற்றியோ அவ்விடம் பற்றியோ தானாகவே சொல்லக் கூடிய திறமை அவரிடம் உண்டு. இவர் 300 இற்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை தெளிவாக சொல்லக் கூடிய திறமையுள்ளவர். தமிழ் அகரவரிசையிலுள்ள 247 எழுத்துகளையும் மிக வேகமாக சொல்லக் கூடியவர். அத்துடன் மாதங்கள், வாரங்கள், நிறங்கள், பழங்கள், வடிவங்கள், உடல் உறுப்புகளின் பகுதிகள், பறவைகள், இலக்கங்கள், ஆங்கில எழுத்துக்கள் மற்றும் அதற்கான சொற்களையும் ஒழுங்குவரிசையாகவும், வரிசை இல்லாமலும் மிக வேகமாக சொல்லக் கூடிய திறமை இவரிடம் உண்டு. இவை தவிர பொதுஅறிவு உள்ளிட்ட விடயங்கள், 100 இஸ்லாமிய கேள்விகளுக்கான பதில்களை சொல்லக் கூடியவர். தற்போது அல்குர்ஆனின் பல சூறாக்களையும் மனனம் செய்து வருகிறார்.

இச்சிறுமி எதிர்காலத்தில் கல்வித் துறையிலும், ஏனைய துறைகளிலும் மென்மேலும் பல சாதனைகளைப் பெற்று எதிர்காலத்தில் நாட்டிற்கு பெருமையை தேடித் தரக் கூடிய ஒருவராக மிளிர வேண்டும் என்று பலரும் வாழ்த்துகின்றனர்.

# வவுனியாவில் தனியார் வகுப்புக்குச் சென்ற சிறுமி கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



வவுனியா கணேசபுரம் 8ஆம் ஒழுங்கைப் பகுதியில் கிணற்றிலிருந்து திங்கட்கிழமை (30) இரவு 7.30 மணியளவில் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

16 வயதுடைய ராசேந்திரன் யதுசி என்ற சிறுமி தாய், தந்தையை இழந்த நிலையில் மாமனாரின் அரவணைப்பில் வசித்து வந்துள்ளார். தனியார் கல்வி நிலையம் சென்ற நிலையில் அன்று மாலை 5.30 மணி வரை வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து குறித்த சிறுமியைத் தேடிய உறவினர்கள் அவரைக் கண்டுபிடிக்க முடியாமையால் நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டிற்கு அமைவாக நெளுக்குளம் பொலிஸார் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் துணையுடன் குறித்த சிறுமியை தேடும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது அப் பகுதியிலுள்ள ஆள் நடமாட்டம் அற்ற பகுதி ஒன்றில் உள்ள கிணற்றில் இரவு 7.30 மணியளவில் குறித்த சிறுமி சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார்.





உறவினர்களால் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர், வவுனியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து அப்பகுதியில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது கிணற்றிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மரத்தின் கீழ்ப்பகுதியில் சிறுமியின் காலணி மற்றும் புத்தகங்கள் மீட்கபட்டதுடன் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மோப்ப நாய் கிணறு அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள காணியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் தஞ்சமடைந்திருந்தது. குறித்த பாவனையற்ற வர்த்தக நிலையத்தில் மதுபான போத்தல்களுடன் கயிறும் காணப்பட்டது.

அதன் பின்னர் குறித்த வர்த்தக நிலையத்தின் வீட்டாரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டதுடன் இரவு 11.45 மணியளவில் கிணற்றில் காணப்பட்ட சிறுமியின் சடலத்தை மீட்டெடுக்கும் பணியில் தடயவியல் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் இணைந்திருந்ததுடன் பொதுமக்களின் உதவியுடன் சிறுமியின் சடலத்தை கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர்.

குறித்த பகுதியில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டமையால் அவ்விடத்தில் சற்று பதற்ற நிலை காணப்பட்டதுடன் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் மரண விசாரணைகளின் பின்னரே மரணத்துக்கான காரணம் தொடர்பில் தெரிவிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்தமையுடன் மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸாருடன் இணைந்து தடயவியல் பொலிஸர் முன்னெடுத்துள்ளனர்.

# மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் நினைவேந்தலை ஒட்டி இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டி

## மன்னார் கழகம் யாழ் கழகத்தை வென்றது



மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மன்னார் மாவட்ட சிரேஷ்ட உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மன்னார் விளையாட்டு கழகம் 2-0 என்ற கோல் அடிப்படையில் யாழ்ப்பாணம் விளையாட்டு கழகத்தை வெற்றியீட்டியுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட உதை பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த சுற்றுபோட்டியானது கடந்த சனிக்கிழமை (28) காலை ஆரம்பமாகி முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (29) மாலை இறுதி சுற்றுடன் நிறைவடைந்தது.

வட மாகாண ரீதியாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையே நடைபெற்ற இப்போட்டியில் வட மாகாணத்தில் இருந்து 10 கழகங்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இவ் சுற்றும் போட்டியானது மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்ற போது இறுதி போட்டியில் மன்னார் மாவட்ட "யு" அணியினருக்கும் யாழ் மாவட்ட விளையாட்டு கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற போது மன்னார் கழகம் 2-0 கோல்களால் யாழ் கழகத்தை வெற்றி பெற்றது.





இதில் மூன்றாவது இடத்தை மன்னார் மாவட்ட "டீ" கழகம் வெற்றியீட்டிருந்தது.

இவ் விளையாட்டில் வெற்றியீட்டிய கழகங்கள் மூன்றுக்கும் முதலாவது வெற்றியீட்டிய கழகத்துக்கு வெற்றி கேடயமும் ஒரு லட்சம் ரூபா பணமும், இரண்டாவது இடத்தை பெற்ற கழகத்துக்கு வெற்றி கேடயமும் 50 ஆயிரம் ரூபா பணமும், மூன்றாவது இடத்தை பெற்ற கழகத்துக்கு வெற்றி கேடயமும் 25 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், கௌரவ விருந்தினராக மன்னார் அரச அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவருமான எஸ்.டுல்சன் நாகவத்த, விருந்தினர்களாக கொழும்பு சொர்க்கோ மாஸ்ரர் அசோசியேஷன் உப தலைவர் டெஸ்மன் ஜோசப், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப பொருளாளர் ஏ.நாகராஜன், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன செயலாளர் ரி.வரதரராஜன், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவர் ஈ.அர்னால்ட் என பலரும் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**

## Saravanaa Bhavan Restaurant, hosted today, MP Shaun Chens' 'COVID-19 HUMANITARIAN SERVICE MEDAL CEREMONY at Scarborough Location

கனடிய செய்திகள் Canadian News

# COVID-19 தாக்கத்திலிருந்து, மக்களைக் காப்பாற்ற உழைத்த சேவையாளர்களுக்கு வழங்கப்பெற்ற தொண்டர் சேவைப் பதக்கங்கள்



COVID-19 வைரஸின் தாக்கம் அதிகமாக இருந்தபோது, மக்களைக் காப்பாற்ற உழைத்த வைத்தியசாலைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் முதியோர் இல்லங்களின் சேவையாளர்கள் ஆகியோரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி நடத்தப்பெற்ற வைபவத்தில் ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் MP Shaun Chen அவர்கள் அரசாங்கம் சார்பான தொண்டர் சேவைப் பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தார்.

பல தொண்டர்கள் மற்றும் வைத்தியர்கள் தாதிகள் பொதுச் சேவையாளர்கள் ஆகியோர் இந்த கௌரவங்களைப் பெற்றனர்.

இந்த கோவிட்-19 தீவிரமாக இருந்த காலத்தில் உணவுப் பொதிகளை வைத்தியசாலைகளுக்கு வழங்கிய ஸ்காபுறோ சரவணா பவன் உணவகத்தின் தலைவர் திரு கணேசன் சுகுமார் மற்றும் முகாமையாளர் முஜா ஆகியோருக்கும் பதக்கங்கள் வழங்கப்பெற்றன. இவர்களுடன் அங்கு பணியாற்றும் சமையல் வல்லுனர்கள் மற்றும் உதவியாளர் ஆகியோருக்கும் பதக்கங்கள் வழங்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





















MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# சோமாலியா போன்று ஆகிறதா இலங்கை?

**- சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**

மருத்துவர் ஹவா அப்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த போது உலகெங்குமுள்ள லட்சக்கணக்கானவர்கள் கண்கலங்கியது போல நானும் மனம் வருந்தினேன். அவர் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும், அவரைப் போன்றோர் 73 வயதில் மரணமடைவது மிகவும் வருந்தத்தக்கது. சமாதானத்திற்கான நோபல் பரிசு பெறுவதற்கு அனைத்து தகுதிகள் மற்றும் அர்ப்பணிப்புகள் அவரிடம் இருந்தன. அந்தப் பரிசிற்காக அவர் பரிந்துரைக்கவும் பட்டார். அந்த அம்மையார் மருத்துவர் மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதும் மனித உரிமைகள் போராளியாக வாழ்ந்தவர். சிறு வயதில் பெரியவர் ஒருவருடன் கட்டாய திருமணம். சில ஆண்டுகளில் அந்த திருமணம் முறிவடைய மருத்துவம் படிப்பதற்காக ரஷ்யா மற்றும் உக்ரைனுக்குச் சென்றார். அங்கு சக சோமாலிய மாணவரைக் காதலித்து மணம்புரிந்துகொண்டு மீண்டும் நாடு திரும்பி சட்டம் படித்தார். காலையில் மருத்துவமனை மாலையில் சட்டப்படிப்பு என்று சென்றது அவரது வாழ்க்கை.

அங்கு உள்நாட்டு யுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்த போது, ஆயுதக் குழுக்கள் இராணுவ நிலைகள், அரச கட்டடங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள், பொது இடங்கள் என அனைத்து இடங்கள் மீது தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தன. எங்கும் பாதுகாப்பில்லாத சூழல் இருந்த காலம் அது. இத்துடன் பல ஆண்டுகளாக மழை பொய்த்ததால் நாட்டில் பஞ்சம் தலைவிரித்து ஆடியது. பெண்கள், குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்கள் மற்றும் போஷாக்கின்மை காரணமாக நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவம் செய்வது கடும் சவாலான ஒன்றாக இருந்தது. மோதல்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து ஆயுதக் குழுக்களும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் ஊறிதிளைத்திருந்தன. அதனால் பெண்களுக்கு பெண்களே மருத்துவம் செய்ய வேண்டும் போன்ற "தாலிபானிஸம்".

இப்படியான இக்கட்டான ஒரு நிலையில், மருத்துவர் ஹவா அப்தி தனக்குச் சொந்தமான பெரிய காணியில், சிறிய மருத்துவமனை ஒன்றை தொடங்கினார். அதை மருத்துவமனை என்று சொல்வதைவிட வைத்தியம் பார்ப்பதற்கான ஒரு குடிசை என்றுதான் அவர் கூறினார். அவரது வேண்டுகோளை ஏற்று அனைத்து ஆயுதக் குழுக்களும் அந்த இ-லக்கு-அதாவது- மருத்துவமனை மீது தாக்குதல் நடத்துவதில்லை என்று உடன்பட்டனர். அதன் காரணமாக பல கர்ப்பிணிப் பெண்கள் உயிர் தப்பினர். அந்த மருத்துவமனை சிறிது சிறிதாக வளர்ந்து இன்று சோமாலியாவிலேயே 400 படுக்கைகளைக் கொண்ட மிகப்பெரிய மருத்துவமனையாகத் திகழ்கிறது.



சோமாலியா இன்றளவும் தோல்வியடைந்த ஒரு நாடாகவே கருதப்படுகிறது. அங்கு பல ஆண்டுகளாக நிலையான அரசாங்கம் இல்லை. இன மோதல் நாட்டை ஆட்டிப்படைக்கிறது. ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் சர்வசாதாரணம். கண்டவுடன் சுடுவது, கப்பம் கேட்டு ஆட்களைக் கடத்துவது, காணாமல் போவது, அப்படிக் காணாமல் போனவர்கள் அடுத்த நாள் சாலையோரம் அல்லது கடற்கரை அருகில் சடலமாகக் கண்டெடுக்கப்படுவது என்பதெல்லாம் மக்களுக்குப் பழகிப்போன ஒன்று. சோமாலியாவில் உள்நாட்டு யுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டம் அது. அதாவது 1980 களின் பிற்பகுதியில் தொடங்கி இன்றுவரை நடைபெறும் அந்த மோதலுக்கு அடிப்படையாக இன முரண்பாடுகள், ஆயுதக் குழுக்களிடையே சகோதரப் படுகொலைகள், நாட்டை காப்பாற்ற வேண்டும், மக்களின் இன்னல்களை போக்க வேண்டும் என்று இதய சுத்தியோடு செயல்பட்ட கல்விமான்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் படுகொலை செய்யப்பட்டு, ஸ்திரமற்ற அரசுகள் போன்றவையே காரணங்கள் அடுக்கிக்கொண்டே போகலாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் சோமாலியாவின் நிலையைப் புரிந்துகொள்வதற்கு இலங்கையின் உள்நாட்டு யுத்தம் மற்றும் அதற்கு முன்னரும் பின்னருமான சம்பவங்கள் ஆகியவற்றை புரிந்துகொண்டாலே போதும்.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் சோமாலியாவின் தலைவிரித்து ஆடிய பஞ்சம் மற்றும் பட்டினிச் சாவுகளை இன்னும் உலகம் மறக்கவில்லை. அப்போது வெளியான புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் உலகம் முழுவதும் பேசு பொருளாயின. அதிலும் குறிப்பாக கருப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மனதை உருக்கின. அந்த அவல சூழ்நிலையிலும் தம்மை வருத்திக்கொண்டு, அதே பசி பட்டினியின் ஊடே பயணித்து புகைப்படச் செய்தியாளர்கள் எடுத்த படங்கள் மற்றும் செய்திச்சுருள் துண்டுகள்மிகவும் பிரபலமடைந்தன.

உலகில் உணவுப் பாதுகாப்பு இல்லாத ஒரு தேசமாக சோமாலியா மாறி இன்றளவும் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறது. ஸ்திரமான ஒரு ஆட்சி இல்லாமையும், வெளிநாடுகளிலிருந்து உணவு மற்றும் இதர பொருட்களை இறக்குமதி செய்துகொள்ள போதிய டாலர்கள் இல்லாத நிலையிலும், அங்கு உணவை இறக்குமதி செய்ய இயலாத நிலை இன்றளவும் காணப்படுகிறது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற பல பன்னாட்டு அமைப்புகள் சோமாலியாவிற்கு நிதியுதவி அளிக்கத் தயங்குகின்றன. சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பான International Federation of Red Cross and Red Crescent Societies (IFRC) நாடுகளில் நிலவும் உணவு நெருக்கடி குறித்து ஆண்டுதோறும் வெளியிடும் பட்டியல் பல நாடுகளுக்கு எச்சரிக்கை மணியாக உள்ளது. தற்போது வெளியாகியுள்ள அறிக்கையில் இந்த ஆண்டு (2022-2023) சோமாலியாவில் இயற்கை பேரிடர்களுக்கு அப்பாற்பட்டு தொடரும் ஸ்திரத்தன்மையற்ற அரசியல் நிலை, உணவு பாதுகாப்பின்மை, மோசமான அரசு நிர்வாகம் போன்ற பல காரணிகளால் நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளது.



இந்த அறிக்கையை வாசித்தவுடன் இலங்கை குறித்த எனது கவலை மேலும் பன்மடங்காகியது. சோமாலியா குறித்துக் கூறப்பட்டிருக்கும் அனைத்து "கல்யாண குணங்களும்" இலங்கைக்கும் பொருந்தும் என்று நான் ஆழமாக நம்புகிறேன்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் முதியவர் ஒருவர் இயலாத நிலையில் இரண்டு ராத்தல் பான் பெற்றுக்கொண்டு அதை அவரிடமிருந்து பறித்துச்சென்ற அவல நிலை அரங்கேறியது. இது சாதாரணமானதொரு வழிப்பறி சம்பவமல்ல. இது பெரிய செய்தியைக் கூறுகிறது. நாட்டின் உணவுப் பற்றாக்குறையும், உணவு பாதுகாப்பின்மையும் எந்தளவுக்கு மோசமாகவுள்ளது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

நாட்டில் நிலவும் நெருக்கடி குறித்து தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கட்சி பேதமின்றி பொது விஷயங்களில் அரசியல் செய்யாமல் குரல்கொடுத்து வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஒரு கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதம் சில முக்கியப் பிரச்சனைகளை எழுப்பி சில தீர்வுகளையும் முன்வைக்கிறது. அந்த கடிதத்தில் பல யதார்த்தங்கள் உள்ளன.

இன்றளவும் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்படும் இந்திய வம்சாவளி தமிழர்கள் மட்டுமின்றி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தரிசு காணிகளைப் பிரித்தளிப்பது பயனளிக்கும் என்று மனோ கணேசனின் கடிதம் கூறுகிறது. கோமாளித்தனமாக கோத்தாபய ராஜபக்ச அரசு செய்த பல குழப்பங்களில் ஒன்று விவசாயத்திற்கான மிக முக்கிய உள்ளீடான உரத்தின் இறக்குமதியை தடை செய்தது. இதனால் நாட்டில் நெல் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு, அரிசி இல்லாததால் மக்கள் சோற்றிற்கு அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளது. உரப்பிரச்சனை தேயிலை உற்பத்தியையும் பாதித்துள்ளது. "அதன் காரணமாக தோட்டங்களில் வேலையில்லை, ஆகவே வருமானம் இல்லை. உணவுக்காக, மக்களிடையே அரிசி, கோதுமை வாங்க கையில் காசுமில்லை, கடைகளில் பொருளுமில்லை" என்று சுட்டிக்காட்டுகிறது மனோ கணேசனின் கடிதம்.



"இதனால் ஏற்கனவே வாழ்வாதாரம் இல்லாமல் மிகவும் நலிவடைந்த நிலையில் இருக்கும் தோட்டங்களில் வாழும் மக்கள் மத்தியில் உணவுப் பஞ்சம் ஏற்படலாம். இன்னமும் சில மாதங்களில் பட்டினி சாவு வரலாம். இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்" என்கிறது அவரது கடிதம். இதற்குத் தீர்வாகத் தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத தரிசு நிலங்களைப் பிரித்து, அங்கு நிரந்தரமாக உழைக்கும் மக்களுக்கு வழங்கும்படி அவர் பிரதமரிடம் கோரியுள்ளார். விவசாய அமைச்சின் அனுசரணை மூலம் அவர்கள் அந்த நிலங்களில் குறுகிய காலத்தில் பயன் தரும் விளைபயிர்களைப் பயிரிட்டு தமது வீட்டுத் தேவைகளைப் பெற்றுக்கொள்வார்கள். அதேபோன்று நாட்டின் உணவுத் தேவைக்கு இந்த பயிரிடல் ஓரளவுக்கு வழி செய்யும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் மலையகப் பகுதியில் வேலை செய்யும் லட்சக்கணக்கான மக்கள் தொடர்ச்சியாக அரை வயிறு அளவிற்கே உண்டு வாழ்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. ஒப்பீட்டளவில் மலையகப் பகுதியிலேயே வறுமை அதிகம் நிலவுகிறது என்று அரச தரவுகள் கூறுகின்றன. அதே போல் அங்குதான் அதிகளவிலான மதுக்கடைகளும் உள்ளன. மிகவும் வறிய நிலையில் முதுகு முறிய உழைக்கும் தொழிலாளிகள் பணம் இந்த மதுக்கடை உரிமையாளர்களின் பைகளை நிரப்புகிறது.

வடக்கு கிழக்கு பகுதிகளிலும் நிலைமை பெருமளவில் இதேபோன்றே உள்ளது. அங்கு இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படாமல் இன்னும் இராணுவத்தின் பிடியிலேயே உள்ளது. அந்த நிலங்கள் உரிமையாளர்களுக்கு கிடைத்தால், அது அவர்களுக்கான உணவுத் தேவையை ஓரளவிற்கு நிறைவு செய்வதோடு, நாட்டின் உணவு பற்றாக்குறையைச் சமாளிக்கவும் உதவக் கூடும்.

"நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியினால், இன்னும் சில மாதங்களில் உண்ண உணவின்றி நம் நாட்டில் பட்டினிச் சாவை சந்திக்கக் கூடியவர்களில் முதன்மை நிலையில் இவர்களே இருப்பார்கள்". இலங்கையில் இன்று மாவுக்கும் மண்ணெண்ணெய்க்கும் மக்கள் அல்லாடுவது அன்றாட நடவடிக்கையாகிவிட்டது. மக்கள் மீண்டும் விறகு அடுப்பிற்குத் திரும்பியுள்ளனர். இந்தியாவிடமிருந்து கிடைத்த உதவி நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. பௌத்தத்தைப் பேணும் இலங்கை அரசு பிக்குமார்கள் தானம் கேட்பதுபோல் பௌத்த நாடுகளான தாய்லாந்து, பர்மா, வியட்நாம், கம்போடியா போன்று அரிசி உற்பத்தியின் முன்னணியில் உள்ள நாடுகளிடமிருந்து அவர்களின் மிக நெருங்கிய கூட்டாளிகளான சீனா மற்றும் பாகிஸ்தானிடமிருந்தும், இயன்றதை உதவ முன்வரும் வங்கதேசத்திடமிருந்தும் தானத்தைப் பெற முன்வர வேண்டும். நாட்டில் அனைத்திற்கும் மகாநாயக்கர்களை ஆலோசனை கேட்கும் ஆட்சியாளர்கள் ஏன் இதுவரை நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டைத் தீர்க்க ஆலோசனை கேட்கவில்லை?



இன்று இலங்கை இருக்கும் நிலை அதற்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணியாகும். ராஜபக்சக்களும் ரணிலும் விழித்துக் கொண்டு உடனடியாக பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு உலகை வலம் வந்தால் மட்டுமே மக்களின் வயிற்றுப்பசியைத் தீர்க்க முடியும். தமது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதையே குறியாகக் கொண்டிருந்தால் "ஆசியாவின் அதிசயமான" இலங்கை ஆசியாவின் சோமாலியாவாக மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை.

லண்டனில் சில ஆண்டுகளுக்கு முன் சோமாலிய நாட்டைச் சேர்ந்த நண்பர்களுடன் ஹவா அப்தியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்த போது அது வாழ்க்கையில் மறக்க முடியாத தருணமாக இருந்தது. அவருக்கு போர் மற்றும் அதன் பாதிப்பு குறித்து ஆழமான புரிதல் இருந்தது. நான் இலங்கையைச் சேர்ந்தவர் என்று கருதி என்னிடம் கூறினார்:

"தம்பி சிவா, உங்கள் நாடும் எமது நாடு போல ஆகிவிடக் கூடாது என்கிற கவலை மட்டுமல்ல அச்சமும் எனக்குள்ளது. அங்கு நடந்தவற்றை நான் கேள்விப்பட்டுள்ளேன், அங்கு உணவின்றி யாரும் அல்லாடும் நிலை வரக் கூடாது, இதை உங்கள் ஆட்சியாளர்கள் காதில் போட்டு வையுங்கள்".

# கச்சதீவு உடன்படிக்கை இரண்டு நாடுகளுக்கு இடையே எழுதப்பட்ட உடன்படிக்கை அதனை முறித்துக் கொள்ள பன்னாட்டு சட்டம் இடம் கொடுக்காது!

- கனடா நக்கீரன்

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது என்பார்கள். பொதுவாக பிடிவாதக்காரர்களுக்கு இந்தப் பழமொழியைக் கூறுவோம். கடந்த மே 27 இல் தமிழ்நாட்டில் பல திட்டங்களைத் தொடக்கி வைக்க வருகை தந்த இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்ட தமிழகத்து மேடையிலும் ஒலித்தது, இது இலங்கை, இந்திய அரசியலை மேலும் பரபரப்பாக்கியுள்ளது.

இந்தியப் பிரதமர் முன்னிலையில் உரையாற்றிய தமிழக முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் "தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான சிக்கலுக்கு தீர்வு காண, கச்சத்தீவை மீட்க வேண்டும், தமிழக மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி வலயங்களில் தங்களின் உரிமைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க இதுவே சரியான தருணம். இதைப் பற்றிப் பிரதமருக்கு (மோடி) நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கச்சதீவு மீண்டும் இந்தியாவின் கட்டுப்பாட்டில் வருவதே இலங்கை - இந்திய மீனவர்களின் தொடர் சிக்கலுக்குத் தீர்வாக அமையும். இதுவே தமிழக மீனவ மக்களின் ஒன்றிய அரசிடமான கோரிக்கை" என பிரதமர் மோடியிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

தமிழக முதல்வரின் இந்தக் கோரிக்கைக்கு பிரதமர் மோடி எந்தப் பதிலும் அளிக்கா விட்டாலும் பிரதமர் தமிழகத்தை விட்டுச் சென்ற பின்னர் சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பாஜக தமிழ் மாநிலத் தலைவர் அண்ணாமலை தமிழகத்தின் திமுக அரசையும் முதல்வர் ஸ்டாலினையும் கடும் வார்த்தைகளால் விமர்சித்து கச்சதீவு மீட்பு விவகாரத்தை இலங்கை மக்களின் நலன் காக்கும் மத்திய பாஜக அரசே பார்த்துக் கொள்ளும் எனவும் இந்த விவகாரத்தில் தமிழக அரசு தலையிடும் தகுதி அதற்கு இல்லை எனப் பேசியது லிவகாரத்தை மேலும் சூடுபிடிக்க வைத்துள்ளார்.

கச்சதீவு இராமேசுவரத்திற்கு வட கிழக்கே, 12 மைல் தொலைவில் இருக்கிறது. முந்தைய காலத்தில் இராமநாதபுரம் சேதுபதி அரசின் கட்டுப்பாட்டில் இருந்த 8 தீவுகளில் கச்ச தீவும் ஒன்றாகும். ஜமீன் ஒழிப்புக்கு முன்னர், இராமநாதபுர அரசர் இத்தீவை தனி ஆட்களுக்கு குத்தகைக்கு விட்டுக் கொண்டிருந்தார். இந்தத் தீவின் பரப்பளவு 285.20 ஏக்கர் ஆகும். இந்தத் தீவு இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள தீவு என்று குத்தகை ஆவணம் குறிக்கிறது. இவையெல்லாம், கச்சத்தீவு மீது இந்தியாவுக்கு உள்ள உரிமைகளுக்குச் சான்றாக விளங்கின.

1956 இல் இந்திய அரசு, தன் கடல் ஆதிக்க எல்லைக் கோட்டை, 3 கடல் மைல்களிலிருந்து (ஒரு கடல் மைல் என்பது, 1.15 மைல் அல்லது 1.863 கிமீ) 6 கடல் மைல்களாக விரிவுபடுத்தியது. இது போன்ற போட்டி அறிவிப்பை இலங்கை அரசும் வெளியிட்டது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான சிக்கல் வலுவடைந்தது. 1973 இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி இலங்கை சென்றார். பின், இரு நாட்டு அதிகாரிகளும் கூடிப் பேசினர். 1974 இல், இலங்கைப் பிரதமர், சிறிமாவோ பண்டாரநாயகா இந்தியா சென்றார். கச்சதீவை இலங்கைக்குக் கையளிக்கும் ஒரு பன்னாட்டு உடன்பாடு பிரதமர் இந்திரா காந்தியும் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இடையில் கைச்சாத்தானது.

பலர் நினைப்பதைப்போல இலங்கை கேட்டவுடன் கச்சதீவு ஒன்றும் இலவசமாகக் கொடுக்கப்படவில்லை. இந்த உடன்பாட்டிற்குப் பின் மிகப்பெரிய இராசதந்திர நகர்வுள் உள்ளன. 1971 ஆம் ஆண்டு இந்தியா- பாகிஸ்தான் போரின் போது, இந்தியாவின் அண்டை நாடான இலங்கை பாகிஸ்தான் விமானங்கள் இலங்கையில் தரையிறங்கவும் எரிபொருள் நிரப்பிக்கொள்ள அனுமதித்தது.

அந்தப் போரில் இந்தியா பாகிஸ்தானைத் தோற்கடித்து வங்காளதேசம் தனிநாடாக உருவாக இந்திரா காந்தி வழிகோலினார். இருப்பினும் இலங்கையின் பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாடு இந்தியாவின் வெளிநாட்டு உறவில் மிகப்பெரிய அடியாக இருந்தது. ஏனெனில் நாட்டின் கிழக்கே சீனா, மேற்கே பாகிஸ்தான், தெற்கே இலங்கை, வடக்கே நேப்பாளம் என அனைத்து நாடுகளுமே எதிரிகளாக இருப்பது நல்லதல்ல என்பதை இந்தியா உணர்ந்திருந்தது. எனவே தான் இலங்கைக்கு கச்சதீவை இலவசமாக அளித்து இலங்கை உடனான உறவைப் புதுப்பித்துக்கொள்ள இந்தியா தயாரானது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் – இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவும் இணைந்து இந்த கச்சதீவு உடன்படிக்கையில் கையெழுத்திட்டதின் பின்னணி இதுதான்.

விடுதலைப் புலிகள் காலத்தில், இலங்கை அரசாங்கம் பாதுகாப்பைக் காரணம் காட்டி இலங்கை மீனவர்கள் கடலில் சுதந்திரமாக மீன் பிடிப்பதை வெகுவாகக் கட்டுப்படுத்தியது. ஆனால் மே 2009 குப் பின்னர், இலங்கை தனது பாக்கு நீரிணையைப் பாதுகாக்கத் தொடங்கியது. பாக்கு நீரிணை **(Palk Strait)** என்பது தமிழ்நாடு மாநிலத்தையும் இலங்கைத் தீவின் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பிரிக்கும் ஒரு நீரிணையாகும். இது வடகிழக்கே வங்காள விரிகுடாவை, தென்மேற்கே பாக்கு விரிகுடாவுடன் இணைக்கிறது. இந்நீரிணை 53 முதல் 82 கிலோமீட்டர்கள் (33 முதல் 51 மைல்கள்) அகலமானது.

மே 2009 இல் போர் முடிவடைந்ததையடுத்து, இலங்கை மீனவர்கள் மீண்டும் பாக்கு வளைகுடாவில் தங்கள் தொழிலைத் தொடங்கி இழந்த கடலை மீட்டனர்.இதுதான் தமிழக – வட இலங்கை மீனவர்களுக்கு இடையே சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. இலங்கைக்கு கச்சதீவை கையளித்ததில் இருந்தே தமிழக மீனவர்கள் நெருக்கடிகளை சந்திக்கத் தொடங்கினர். 1974 ஆம் ஆண்டு இரு நாடுகள் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்து 1976 இல் கொண்டுவரப்பட்ட கடல் எல்லை உடன்படிக்கை தமிழக மீனவர்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியது. இதில் நெருக்கடி இந்தியாவுக்குத்தான்.

பாக்கு நீரினை, மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவென சர்வதேச கடல் எல்லைகளாக பிரிக்கப்பட்ட பின்னர் தமிழக மீனவர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமம் பறிக்கப்பட்டதாக இலங்கை அறிவித்தது. அதில் இருந்து எல்லை தாண்டிய மீன்பிடி முழுமையாகத் தடுக்கப்பட்டது. இது தான் இன்றுவரை இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு ஒரு தீராத தலைவலியாக இருந்து வருகின்றது. போர்க் காலத்தில் தமிழக மீனவர்களுக்கு எந்தவித சிக்கலும் இருக்கவில்லை, இலங்கை மீனவர்கள் வடக்கு கடல் எல்லையில் மீன்பிடிக்கத் தடுக்கப்பட்ட போது இந்திய மீனவர்கள் சுதந்திரமாக செயற்பட்டனர்.

1983 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையின் மீன்பிடித்துறையில் முக்கிய மூன்று இடங்களில் வடக்கு மாகாணம் ஒன்றாகக் காணப்பட்டது, இந்தக் காலகட்டத்தில் ஆண்டொன்றிற்கு 48,000 மீட்ரிக் தொன் மீன்கள் பிடிக்கப்பட்ன. எனினும் 2002 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை வெறுமனே 2 ஆயிரம் மீட்ரிக் தொன் ஆகக் குறைந்து விட்டது.

தமிழக – வட இலங்கை மீனவர்கள் சிக்கலைத் தீர்த்து வைக்க 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் மொத்தமாக ஆறு கட்டமாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் மாத்திரம் ஐந்து கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன, ஆனால்பேச்சுவார்த்தைகள் அனைத்துமே அரச மட்டத்தில் வெற்றிகரமாக முடிந்தாலும் நடைமுறை யதார்த்தம் அவ்வாறான சாதகமான விளைவுகளை வெளிப்படுத்தவில்லை. இறுதியாக 2017 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் போதும் இரு நாடுகளின் அரச தரப்பில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டது, இதில் இந்திய மீனவர்களின் மீன்பிடி முறைமையில் மாற்றங்களை செய்வதாகவும் குறிப்பாக இழுவைப்படகுகள் மூலமாக மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். அதுமட்டுமல்ல, கடல் எல்லைப் பாதுகாப்பை இந்தியா வலுப்படுத்துவதாகவும், மீனவர்களின் படகுகளைக் கண்காணிக்க நவீன ரேடார் வகையான இயந்திரங்களை பொருத்துவதாகவும் இந்தியா கூறியது. எனினும் வாக்குறுதிகள் அரச மட்ட பேச்சுவார்த்தைகளுடன் நின்றுவிட்டது. மீனவர்கள் அதனை நடைமுறைப் படுத்தவில்லை.

2017 ஆம் ஆண்டு இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர் எல்லை தாண்டிய 450 மீளவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டனர், 2018 இல் 156, 2019 இல் 210, 2020 இல் 74, 2021 இல்159 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஓகஸ்ட் 2014 இல், மோடி அரசாங்கம் மத்தியில் பதவியேற்ற சில மாதங்களுக்குப் பிறகு, அப்போதைய சட்ட மா அதிபர் முகுல் உரோகத்கி உச்ச நீதிமன்றத்தில், போரின் மூலம் மட்டுமே கச்சத்தீவை இந்தியா திரும்பப் பெற முடியும் என்றும், அது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்றும் கூறினார். இரு நாடுகளும் **UNCLOS** (கடல் சட்டம் மீதான **UN** மாநாடு) 70 உடன்பாடுகளை அறிவித்ததால், ஒருதலைப்பட்சமாக திரும்பப் பெறுவது சாத்தியமில்லை. எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள எந்த அரசாங்கமும் இந்தியாவிற்குக் கச்சதீவை திருப்பிக் கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்றார்.

1960 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அனுமதி பெறாமல் இந்தியப் பகுதிகளை தாரைவார்ப்பது செல்லாது என்று அளிக்கப்பட்ட தீர்ப்பினை இந்த கச்சதீவு உடன்படிக்கை மீறுவதாகவும் எனவே கச்சதீவினை மீட்க வேண்டும் என அதிமுக சார்பில் அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

உச்சநீதிமன்றம் உத்தரவிட்டால் மத்திய அரசு கச்சதீவினை மீட்க முயலலாம். ஆனால் அது இன்றைய ஆபத்தான உலக சூழ்நிலையில் இந்தியாவின் அண்டை நாடுகளுடனான நட்புறவில் கடுமையான விரிசலை உண்டாக்கும். ஏற்கனவே சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையுடன் நெருங்கிவரும் இந்த நேரத்தில் கட்சதீவு மீட்பு என்பது பல சிக்கல்களை உண்டாக்கும். எனவே இந்திய ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தில் இந்தச் சிக்கல் வெளியுறவுக்கொள்கையில் சிக்கல்கனைகளை உண்டாக்கும் என்று தெரிவித்தால் அதை மீறி உச்சநீதிமன்றம் உத்தரவிட மறுக்கும் என்பதே உண்மையாகும். அதாவது இப்போதுள்ள சூழ்நிலையில் கச்சதீவை மீட்பது என்பது முடியாத காரியம் ஆகும். வேண்டுமென்றால் இலங்கையுடன் பேசி இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதை இனிமேலாவது தடுக்கலாம்.

கச்சதீவு உடன்படிக்கை இரண்டு நாடுகளுக்கு இடையே எழுதப்பட்ட பன்னாட்டு உடன்படிக்கை ஆகும். அதனை ஒரு தலைப்பட்சமாக இந்தியா முறித்துக் கொள்ளப் பன்னாட்டு சட்டம் இடம் கொடுக்காது.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# மன்னாரில் உயிரிழந்த இரு குடும்பஸ்தர்களின் மரணத்திற்கு மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன் படுத்தியமையே காரணம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



மன்னாரில் கடந்த திங்கட்கிழமை (30) இரவு காரினுல் மர்மமான முறை-யில் உயிரிழந்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களும் மதுபானம் மற்றும் போதைப் பொருள் பயன்படுத்திய நிலையில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் பயணித்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களின் பிரேதப் பரிசோதனை யாழ் வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

இதன் போதே மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்திய மையினால் ஏற்பட்ட ஒவ்வாமை உயிரிழந்தமைக்கான காரணம் என தெரிய வந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் நான்கு பேர் பயணித்துக் கொண்டிருந்த போது மன்னார் உயிலங்குளம் பகுதி-யில் ஒரே நேரத்தில் இருவர் திடீரென சுகவீனமடைந்துள்ளதாக பொ-லிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும் அதே வாகனத்தில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பேசாலை யைச் சேர்ந்த எம்.பிரதீப் (வயது-26) மற்றும் காட்டாஸ்பத்திரியை சேர்ந்த எம்.மசூர் (வயது-35) என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரு சடலங்கள் மன்னார் வைத்தியசாலையில் இருந்து செவ்வாய்க்கிழமை (31) சடலப் பரிசோதனைக்காக யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சடல பரிசோதனை இடம் பெற்றுள்ளது.

சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**

# சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி வடகிழக்கு பெண்கள் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் நீதிக்கான போராட்டம்



சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி செவ்வாய்க்கிழமை (31) காலை 10 மணிக்கு வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நீதிக்கான போராட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பெண்கள் வலையமைப்பினர், சமூக ஆர்வலர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றினைந்து தொடர்ச்சியாக நாட்டில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கவும் அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பெண்கள் சிறுவர்களுக்கு விரைவில் நீதி நிலை நாட்ட படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி 8 மாவட்டங்களில் நாளை போராட்டம் இடம்பெறவுள்ளது.

எனவே பொதுமக்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு சிறுவர்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றிணையுமாறு பெண்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**


**SENIOR TAMILS' SOCIETY OF PEEL**
**பீல் தமிழ் முதியோர் சங்கம்**
**Not profit Registration # 1406004 (Established in 2000)**

Dear Members of Senior Tamils Society of Peel    Date: May 25, 2022

**Call for nominations for Board of Directors**

We call for applications for vacant positions of the Board of Directors from the Members in good standing and preferably with the following criteria.

1. Basic computer literacy
2. With communication skills
3. Previous experience working with Nongovernmental organisations
4. Talented members

***Please apply in the application form below on or before 3:00 pm on June 15, 2022. The application must be in a sealed envelope and dropped in the box assigned in front of the secretary at 206-250 Dundas Street West, Mississauga***, L5B 1J2.

---

**Application form for Board of Director, STSP**

Full name of the Member:    Membership No.

Nominated by: ------------------------------------    Membership No.

Signature of the nominee: ------------------------------------    Date: ---------------

Basic Computer literacy of the member proposed: ------------------------------------------------------

Communication skills of the member proposed: ------------------------------------------------------

Signature of the applicant: ------------------------------------------    Date: -----------------

**SENIOR TAMILS' SOCIETY OF PEEL**
**பீல் தமிழ் முதியோர் சங்கம்**
**Not profit Registration # 1406004 (Established in 2000)**

Dear Members of Senior Tamils Society of Peel    Date: June 1, 2022

**Annual General Meeting 2021**

We cordially invite all the Members in good standing for the Annual General Meeting to be held on June 25,2022 at 9:30 am at ***Mississauga Valley Community Centre, 1275 Mississauga Valley Blvd, Mississauga, ON, L5A 3R8 at 9:30 am, in the Taylor Room on upper floor.***

***Also, we invite proposed resolutions from members in good standing on or before June 15, 2022. Please ensure the proposed resolutions are received by STSP office latest by 1:00 pm on or before June 15, 2022.***

Please refer the agenda below.

| | |
|---|---|
| 9:30 am | Registration of participants – Members in good standing only can attend |
| 10:00 am | National Anthem, STSP song, & Tamil Thai Vanakam |
| 10:15 am | One minute silence for National Heroes |
| 10:20 am | President's address |
| 10:45 am | Minutes of last AGM held on August 21, 2021 |
| 11:00 am | Annual report of the Secretary |
| 11:20 am | Presentation of Annual Financial Statement |
| 11:45 am | Introduction of new Board of directors |
| 12:00 pm | Discussion on newly proposed resolutions if any and approval by voting if required |
| 12:15 pm | STSP announcements |
| 12:30 pm | AOB |
| 01:00 pm | Lunch |

Please note that the meeting will be in person, however, zoom facilities will be available via the link below

**https://us02web.zoom.us/j/84053631785?pwd=cHh4cm5XRGUwem8vbW9CemZmSkkzQT09**

**Meeting ID: 840 5363 1785**
**Passcode: 018178**

Nadarajah Moorthy    Aru Moorthy
Secretary    President

**250 Dundas Street West, Unit 206, Mississauga, Ontario, L5B 1J2**
**☎: 905-290-3000 🖳: info@ peeltamilseniors.ca**
**Visit us at www.peeltamilseniors.ca**

# உயரத்தைத் தொட்ட "உதயன் நிகழ்வுகளின் சங்கமம்" விழா

## கனடா உதயனின் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளியீடும் பிரதம ஆசிரியரின் 50வது ஆண்டு படைப்பிலக்கிய பயண விழாவும் சிறப்பாக நடைபெற்றன







கடந்த 29-05-2022 ஞாயிற்றுக்கிழமையன்று கனடா-ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற கனடா உதயனின் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளியீடு, பத்திரிகையின் 26வத ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் நிகழ்வு மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரின் கலை இலக்கிய ஊடகப் பயணத்தின் 50வது ஆண்டு நிறைவின் பூரிப்பு ஆகியவற்றை ஒரே மண்டபத்தில் அனுபவிக்கும் நிகழ்வு சிறப்பான காட்சிகளாக விளங்கியது.

கனடாவின் ஸ்காபுறோ நகரில் உள்ள "மெற்றொபொலிட்டன்" மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த பல நிகழ்வுகளின் சங்கமம் சிறப்பாக நடைபெறவும் இலங்கைச் சிறப்பிதழ் அதிக பக்கங்களுடனும் வெளிவரவும் பல்வேறு வர்த்தகப் பிரமுகர்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர் என்பது பெருமையுடன் குறிப்பிட வேண்யதொன்றாகும்.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்த "உதயன் நிகழ்வுகளின் சங்கமம்" விழாவிற்கு பிரபல பேச்சாளர் திருமதி கோதை அமுதன் மற்றும் "வீணைமைந்தன்" சண்முகராஜா ஆகியோர் தலைமை வகித்தனர்.

"உதயன் நிகழ்வுகளின் சங்கமம்" விழாவிற்கு பிரதம விருந்தினராக ஈஸ்ட் எப்எம் 102.7 வானொலி நிலையத்தின் அதிபர் நடா ராஜ்குமார் அவர்களும் சிறப்பு விருந்தினராக தமிழ் நாட்டைச் சேர்ந்த கவிஞரும் எழுத்தாளருமான திருமதி அண்ணாமலை தமிழரசி அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

விசேட விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களும் ஒன்றாரியோ மாகாண அமைச்சர்களில் ஒருவரான ரேமன்ட் சோ அவர்களும் நகர சபை உறுப்பினர் திருமதி ஜெனிபர் மெக்கிலீ அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றிய பின்னர் பிரதம ஆசிரியரை கௌரவித்தனர்.

பல்வேறு சமூக.கலை இலக்கிய அமைப்புக்கள் பத்திரிகையின் பிரதம ஆசி-ரியரை மேடையில் கௌரவித்தன.சுமார் முப்பது அழைக்கப்பெற்ற பேச்சாளர்கள் அங்கு உரையாற்றினார்கள். இடையில் பாடல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கடந்த வார உதயன் இதழ் சிறப்பம்சங்களுடன் "இலங்கைச் சிறப்பிதழாக" வெளிவந்தது. இந்த விசேட இதழைப்பற்றிய விமர்சனத்தை வழங்கிய பின்னர் சமூகப் பிரமுகரும் அரசியல் ஆர்வலருமான குயின்றஸ் துரைசிங்கம் அவர்கள் முதற்பிரதியை பிரதம விருந்தினரிடம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து ஆதரவு வழங்கிய வர்த்தக பிரமுகர்களுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் "இலங்கைச் சிறப்பிதழின் பிர-திகள் வழங்கப்பெற்றன.

கனடாக் கவிஞர்கள் கழகத்தைச் சேர்ந்த முக்கிய கவிஞர்கள் இணைந்து கவிதைகளால் பிரதம ஆசிரியரையும் உதயன் பத்திரிகையையும் வாழ்த்திப் பாடினார்கள்.

இறுதியில் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் பதிலுரை வழங்கினார்.




















**- சத்தியன் மற்றும் கணேஸ்-ரொறன்ரொ-**
**படங்கள் கெங்கா-ஜிரிஏ ஊடகம்**

# தமிழ்மக்களுடைய கோரிக்கைகளை கோட்டாகோகம ஏற்றுக்கொள்ளுமா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

“**தே**சிய மீனவர் ஒத்துழைப்பு சங்கம், ஸ்டாலின் தலைமையிலான இலங்கை ஆசிரியர் சங்கம், மற்றும் பிரிட்டோ பெர்னாண்டோ தலைமையிலான தெற்கில் 1980களில் காணாமல் போன குடும்ப அங்கத்தவர் சங்கம், நிமல்கா பெர்னாண்டோ தலைமையிலான தெற்கின் அன்னையர் சங்கம் மற்றும் விக்கிரமபாகு, சிறிதுங்க போன்றோர் எப்போதுமே சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழரின் தேசிய சிக்கல்கள் மற்றும் காணாமல் போனோர், போர் குற்றங்கள் போன்றவை தொடர்பில் எப்போதுமே முற்போக்கு கருத்துகளை கொண்டவர்கள்தான். இவர்கள் எல்லோரும் எனக்கு பல ஆண்டுகளாக தெரியும். அந்த வெள்ளை வான் கடத்தல் கொலை காலத்திலிருந்து தெரியும். புதிய சிங்கள சமூகத்தை எப்படி உள்ளே கொண்டு வருவது என பார்க்க வேண்டும். காலிமுக போராட்டத்தில் கணிசமாக செல்வாக்கு செலுத்தும் குமார் குணரத்தினம் தலைமையிலான முன்னிலை சோஷலிச கட்சி, அனுரகுமார தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி ஆகியவை இன்னமும் இந்த மட்டத்துக்கும் வரவில்லை. முன்னிலை சோஷலிச கட்சியுடன் சமீபத்தில் நான் பேசிய போது, தமிழ் தேசிய நிலைபாடுகளை பற்றி, சமீப காலமாக நான் அதிகமாக பேசும் மதசார்பின்மை பற்றி குறிப்பாக பௌத்த தேரர்கள் பற்றி பேசிய போது, பதில் கூறாமல் புன்னகையுடன் என்னை பார்த்துக்கொண்டு இருந்தார்கள். எதிர் கருத்து கூறாமல் புன்னகை புரிய வைத்ததே எனது சாதனை என நினைத்துக்கொண்டேன்”.

இது நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எனது கடந்த வார கட்டுரைக்குப் அனுப்பிய பதில். அவருடைய சம்மதத்தோடு அவருடைய மின்னஞ்சலில் ஒரு பகுதி இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் போராடும் இளையோரின் பின்னணியில் முன்னிலை சோசலிசக் கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செயற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜேவிபியின் மறைமுக மாணவர், அமைப்பு ஒன்றும் சம்பிக்க ரணவக்கவின 43 ஆவது பிரிகேட் என்று அழைக்கப்படும் அமைப்பும் அங்கே பின்னணியில் இருப்பதாக தகவல்கள் உண்டு. இவைதவிர மத குருக்கள், செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், ஊடகவியலாளர்கள் போன்றோரும் அங்கே காணப்படுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட அமைப்பின் முழுமையான செல்வாக்கு அங்கே இல்லை என்பது உறுதியானது. அங்கு காணப்படும் வெவ்வேறு கருத்து நிலைகளைக் கொண்ட அமைப்புகளும் தனிநபர்களும் தங்களுக்கு இடையே ஏதோ ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயல்படுவதாக தெரிகிறது. அங்கு மைய அதிகாரம் என்று எதுவும் கிடையாது. ஆனால் அங்கே காணப்படும் செயற்பாட்டு அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு இடையே ஏதோ ஒரு செயல்பூர்வ இணைப்பு உண்டு.

இது கிட்டதட்ட இன்டர்நெற் வலைப்பின்னலோடு ஒப்பிடத்தக்கது. இன்டர் நெற் பற்றிக் கூறும்போது அது பேரரசரசன் இல்லாத பேரரசு என்று கூறுவார்கள். அதற்கு மைய அதி-காரம் இல்லை என்றும் கூறுவார்கள். சமூக வலைத்தளங்களின் எழுச்சிக்குப் பின் உலகம் முழுதும் இடம்பெறும் தன்னெழுச்சிப் போராட்டங்களில் போராடும் அமைப்புக்களுக்கிடையேயான பிணைப்பு ஏறக்குறைய இன்டர்நெற் பண்பு பொருந்தியதாக காணப்படுவது பொதுவாக அவதானிக்கப்பட்டிருக்கிறது. கோட்டா கோகமவிலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. அதில் முன்னிலை சோசலிசக் கட்சியின் பங்கு எந்தளவுக்கு உண்டு என்பது குறித்து சிங்கள மெயின் ஸ்ட்ரீம் ஊடகங்கள் அதிகளவு தகவல்களை ஏற்கனவே வெளியே கொண்டு வந்து விட்டன. ஆனால் தமிழ் ஊடகப் பரப்பில் மிகக் குறைந்த அளவே அது தொடர்பான விவரங்கள் வெளியே வந்திருக்கின்றன.

அண்மையில் வீரகேசரியின் செய்தியாளர் ராம் முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரத்தினத்தை பேட்டி கண்டார். அது ஒரு முக்கியமான பேட்டி.வீர-கேசரியின் சமகளம் நிகழ்ச்சிக்காக அந்த பேட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. கோட்டா கோகம போராட்டத்தின் பின்னணியில் இருப்பதாக சந்தேகிக்கப்படும் ஒரு கட்சியின் பொதுச் செயலாளரை தமிழில் பேட்டி கண்ட ஒரே ஒரு காணொளி அது. ஆனால் அக்காணொளியை 160க்கும் குறைவான தொகையினர்தான் இதுவரையிலும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இலங்கைத் தீவில் உல்லாசப்பயணிகள் சாப்பிடும் பாணை உள்ளூர் மக்கள் பறித்துக் கொண்டு செல்கிறார்கள் என்ற அர்த்தத்தில் ஒரு இந்திய யூடியூபர் வெளியிட்ட காணொளி கிட்டத்தட்ட ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது. இப்படித்தான் சவுக்கு சங்கர் ஒரு தமிழக ஊடகவியலாளரை நேர்கண்ட காணொளியும் இலட்சக்கணக்கில் பார்க்கப்பட்டிருக்கிறது. அக்காணொளி விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பானது.

இதுபோன்ற காணொளிகளில் ஓர் உண்மை பல பொய்களால் சோடிக்கப்படுகிறது. பார்வையாளர்களைக் கவர்வதற்காக,பரபரப்பிற்காக தகவல்கள் இட்டுக்கட்டப்படுகின்றன. ஆனால் அதிக தொகை பார்வையாளர்கள் அப்படிப்பட்ட காணொளிகளைத்தான் விரும்பி பார்க்கிறார்கள். சீரியசானதும் தேவையானதும் ஆகிய காணொ-ளிகள் குறைந்த அளவுக்கே பார்க்கப்படுகின்றன. தமிழில் புத்திசாலித்தனத்திற்கும் ஜனரஞ்சகத்திற்கும் இடையிலுள்ள பாரதூரமான தோல்விதரமான இடைவெளியை அது காட்டுகிறது.

சில வாரங்களுக்கு முன் பிபிசி தமிழோசையின் சென்னை நிருபர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.அவர் என்னை நேர்கண்ட பொழுது ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார் “நாங்கள் தமிழகத்திலிருந்து பெருந்தொகை பணத்தை செலவழித்து இங்கே வருகிறோம். ஆனால் இந்த காணொளியை ஒரு லட்சத்துக்கும் குறைவானவர்களே பார்க்கப்போகிறார்கள். ஆனால் தன் வீட்டின் அறையொன்றில் ஒரு கமராவின் முன் அமர்ந்திருந்து கற்பனை செய்பவரின் காணொளி பல லட்சம் பேர்களால் பார்க்கப்படுகிறது” என்று.

இப்படிப்பட்டதொரு தமிழ் யூடியூப் சூழலில், மீண்டும் குமார் குணரத்தினத்தின் காணொளிக்கு வருவோம். அந்த காணொளியில் அவர் இனப்பிரச்சினைக்கு இது தான் தீர்வு என்று தெளிவாக எதையும் கூறவில்லை. அவ்வாறு கூறுவதை அவர் தவிர்க்கிறார். மாறாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் இணைந்து ஒரு தீர்வுக்காக உழைக்க வேண்டும் என்று பொத்தாம் பொதுவாக கூறுகிறார். ஒற்றையாட்சிக்கு எதிராக கருத்து கூறுவதை தவிர்க்கிறார். சமஸ்டியை ஒரு தீர்வாகக் கூறுவதை தவிர்க்கிறார். அவர் தலைமை தாங்கும் ஒரு கட்சிதான் காலிமுகத்திடலில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது என்று எடுத்துக்கொண்டால் கோட்டா கோகம கிராமம் தொடர்பாக தமிழ் மக்கள் எப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுப்பது? இக்கட்டுரையின் தொடக்கத்தில் மேற்கோள் கட்டப்பட்ட மனோ கணேசனின் கருத்துக்களையும் இங்கே கவனிக்க வேண்டும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்னிலங்கையிலிருந்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தது.யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு சந்திப்பின்போது தமிழ் மக்கள் தரப்பிலிருந்து பலரும் கருத்து தெரிவித்தார்கள். குறிப்பாக தென்னிலங்கையில் இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பில் ஏன் தமிழ் மக்கள் விலகி நின்று பார்க்கிறார்கள் என்பதற்கு அங்கே விளக்கங்கள் கூறப்பட்டன. தென்னிலங்கையில் இருந்து வந்தவர்கள் எல்லாவற்றையும் ஆர்வத்தோடு கேட்டார்கள். தென்னிலங்கைக்கும் தமிழ்ப்பகுதிகளுக்கும் இடையே உரையாடல் நிகழ வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டார்கள். அதில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் தொழிற்சங்கங்களும் காணப்பட்டன. எனினும் தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொண்டு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் ஒருமித்த கருத்தை அடைவதற்கு மேலும் பயணிக்க வேண்டும் என்பதனை அச்சந்திப்பு உணர்த்தியது.

இது காலிமுகத்திடலுக்கும் பொருந்தும். ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டதும் அங்கே நடந்த ஊடகச் சந்திப்பில் எட்டு அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அந்த எட்டு அம்சங்களில் எதிலும் சிறிய தேசிய இனங்கள் தொடர்பான எந்த ஒரு கோரிக்கையும் காணப்படவில்லை. பொத்தாம் பொதுவாக அடிப்படை உரிமைகள் என்ற ஒரு கோரிக்கை காணப்பட்டது. வீரகேசரி யூடியூப்பிற்கு வழங்கிய நேர்காணலில் முன்னிலை சோசலிசக் கட்சியின் குமார் குணரத்தினமும் அப்படித்தான் அடிப்படை உரிமைகள் பற்றி பேசுகிறார்.

தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளை மட்டும் கேட்கவில்லை. தனி நபர் உரிமைகளை மட்டும் கேட்கவில்லை. கூட்டு உரிமைகளையும் கேட்கிறார்கள். ஒரு தேசிய இனமாக தங்களுடைய கூட்டு உரிமைகளை அதாவது அரசியல் உரிமைகளைக் கேட்கிறார்கள். தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொண்டு ஒரு தேச-ிய இனத்துக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். கோட்டா கோகமவில் இருப்பவர்கள் மத்தியில் ஒரு சிறு தொகையினர்தான் அவ்வாறான ஒரு தீர்வுக்கு தயாராக காணப்படுகிறார்கள். தமிழ்மக்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொள்வதற்கும் அந்த சிறிய பகுதியினர் தயார். பெரும்பான்மை தயாராக இல்லை.

கோட்டா கோகம கிராமம் எனப்படுவது சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் அரசுக்கு எதிரான உணர்வுகளின் வெளிப்பாட்டு மையமாக காணப்படுகிறது. அந்த அடிப்படையில் அது முற்போக்கானது. அதேசமயம் அக்கிராமத்தின் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடுகளோடு தமிழ்மக்கள் முழு அளவிற்கு உடன்பட முடியாது. கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வந்த தொழிற்சங்கங்கள் மத்தியிலும் அவ்வாறான கருத்து காணப்பட்டது. காலிமுகத்திடல் போராட்டத்தை தோற்க விடக்கூடாது என்ற ஒரு பொது உணர்வு அவர்கள் எல்லோர் மத்தியிலும் காணப்பட்டது. ஆனால் அதற்காக அக்கிராமத்தின் அரசியல் நிலைப்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த சனிக்கிழமை கோட்டா கோகம உருவாக்கப்பட்டு 50-ஆவது நாள் வந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்குப்பின் அக்கிராமத்தில் கூடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக ஒரு அவதானிப்பு உண்டு. கிராமத்தில் முன்பு காணப்பட்ட எழுச்சி இப்பொழுது இல்லை என்றும் ஒரு அவதானிப்பு உண்டு. கிராமத்தில் காணப்படும் செயற்பாட்டாளர்கள் மத்தியில் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகவும் அறியமுடிகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் கோட்டா கோ கம கிராமத்தின் 50வது நாளை முன்னிட்டு தொழிற்சங்கங்கள் அக்கிராமத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு படுத்தின. ஏனென்றால் அக்கிராமம் தோற்கவோ சோரவோகூடாது என்ற ஒரு கூட்டுணர்வு தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் அநேகர் மத்தியிலும் காணப்படுகிறது.

காலிமுகத்திடலில் ஊடக கவர்ச்சிமிக்க ஓரிடத்தில், வெளிநாட்டு ராஜதந்திரிகளின் வதிவிடங்கள், மற்றும் உல்லாசப்பயண விடுதிகளின் மத்தியில், காணப்படும் ஒரு போராட்டக் கிராமம் 50வது நாளைக் கடந்த பொழுது அது ஊடகங்களில் சமூக வலைத்தளங்களில் ஒரு பேசுபொருளாக காணப்பட்டது. ஆனால் தமிழ்ப்பகுதிகளில் முதிய அன்னையர்கள் ஆண்டுக்கணக்காக வீதியோரங்களில் அமர்ந்திருக்கிறார்கள். கோட்டா கோ கமவிற்கு கிடைக்கும் அளவுக்கு ஊடகக் கவனிப்பு இந்த அன்னையர்களுக்கு இல்லை. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் இந்த அன்னையர்கள் சிலரை சந்தித்தார். அந்த சந்திப்பை ருவிற்றரில் படத்துடன் பதிவிட்டார். சில மேற்கு நாடுகளின் தூதரகங்கள் எப்போதாவது இந்த அன்னையர்களை சந்திக்கின்றன. ஆனால் அவர்களுடைய போராட்டம் பெருமளவுக்கு உலகத்தின் கவனக்குவிப்புக்கு வெளியேதான் காணப்படுகிறது. அந்தப் போராட்டங்களில் அனேகமாக காணப்படாத தமிழ் செயற்பாட்டாளர்கள் சிலர் கோட்டா கோ கமவில் காணப்பட்டார்கள். தங்களை சமூகப் போராளிகளாக, முற்போக்கானவர்களாக, லிபரல்களாக காட்டிக்கொள்ள விரும்பும் தரப்புக்கள் யாவும் தங்களுடைய பிரசன்னத்தை பதிவு செய்யும் ஓரிடமாக அது மாறியிருக்கிறது. ஆனால் தங்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்கும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் முழுமையாக நம்பிக்கை வைக்கத் தயாரற்ற ஓரிடமாக அது தொடர்ந்தும் காணப்படுகிறது.

# தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளுக்கு – ஒரு திறந்த மடல்



- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

தமிழ்த் தலைமைகளை ஒன்றிணைப்பது என்பது கல்லில் நார் உரிப்பது போன்றது என்பது பொதுவான கருத்து. அது உண்மையும்கூட.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ்த் தலைமைகளில் ஒரு சிலரைத் தவிற பெரும்பாலானவர்களை ஒன்றிணைப்பது சாத்தியமாகியது. ஆனால் 2009 மே மாதத்தில் போர் மௌனித்ததன் பின் இந்த ஒற்றுமை சிதைவடையத் தொடங்கியது. அப்படியானால் 2009 மே மாதம் வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது ஒரு நெல்லிக்காய் மூட்டையாக இருந்துள்ளது என்பதுதான் உண்மை.

தமழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு போர் தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய வேளையில் கொழும்பில் உள்ள வெளி நாட்டுத் தூதரகத்தில் அரசியல்வாதிகள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட சந்திப்பொன்று நடைபெற்றது.

அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு தமிழ் கட்சியின் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரைப் பார்த்து தமிழீழ விடுதலைப் புலிகளைப்பற்றி காரசாரமான விமர்சனத்தை பெரிய சத்தத்துடன் முன்வைத்தார். சந்திப்பில் கலந்து கொண்ட அணைவரதும் கவனம் அந்த இருவரையும் நோக்கி திரும்பியது. விமர்சனத்தை முன் வைத்தவரின் ஆக்ரோசம் தணியவே கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஓடிவந்து அவரைக் கட்டி அணைத்து "நீ வெளிப்படையாகப் பேசுகின்றாய். நான் பேச முடியாது மௌனமாக உள்ளேன்" என்று கூறிவிட்டு கூட்டத்தைவிட்டு வெளியேறினார்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டு கூட்டமைப்பாக அன்றி "கட்டி வைக்கப்பட்ட அமைப்பாக" இருந்தது என்று கூறுவதே பொருந்தும். எனவேதான் விடுதலைப் புலிகள் இல்லாத காலத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த நெல்லிக்காய் மூட்டை சிதறத் தொடங்கியது. "ஒற்றுமை" சீர்குலைந்தது. ஒற்றுமை இல்லாத கூட்டமைப்பிற்குள் மாத்திரம் அல்ல கூட்டமைப்பில் இருந்து பிரிந்த தலைமைகளையும் ஒன்றிணைப்பது இயலாத காரியமாக இன்றுவரை உள்ளது.

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் புத்தி ஜீவிகள் சிவில் சமூகத்தினர் மதத் தலைவர்கள் என அணைத்து தரப்பினரும் தமிழ்த் தலைமைகளை ஒன்றிணைத்துவிட கடும் பிரயத்தனம் மேற் கொண்டும் அது சாத்தியமாகாமல் போயிற்று. தமிழ்த் தலைமைகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்திவிடுவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்த அரசியல் விமர்சகர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "தமக்கும் இந்தக் காரியத்தில் முழுமூச்சுடன் இறங்கிய அணைத்துத் தரப்பினருக்கும் தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் தோல்விகளையே கொடுத்துள்ளனர்" என்று குறிப்பிட்டார்.

தமிழ்த் தலைமைகள் தமக்கு தேவை ஏற்படும்போது ஒன்றிணைவதும் பின் பிரிந்து நின்று அரசியல் செய்வதும் சகஜமான விடயமாக மாறிவிட்டது. இது தமிழர் அரசியலில் தமிழ்த் தலைமைகள் வளர்த்துவிட்ட "சாபக்கேடான அரசியல்" என வடபகுதி புத்திஜீவி ஒருவர் குறிப்பிட்டார்.

தமிழர் அரசியலில் வேரோடிப்போயுள்ள இந்த "சாபக்டோன அரசியலை"மாற்ற முடியாதா? ... மாற்ற முடியும்.

தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பல்கலைக்கழக மாணவர்கள் களத்தில் இறங்கினால் இது சாத்தியமாகும்.

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக "கோதா கோ கம"வுக்குச் சொந்தக்காரர்களான இளைஞர் யுவதிகள் இதனைச் சாதித்துக் காட்டியுள்ளனர்.

அகிம்ஷை வழியில் போராட்டத்தை முன்னெடுத்து குறுகிய 50 நாட்களுக்குள் இலங்கையின் பிரதமரையே வெளியேற வைத்துள்ளனர். ராஜபக்ஷக்களுக்கும் "மொட்டுக் கட்சிக்கும்" வாக்களித்த 69 இலட்சம் மக்களை மாத்திரமல்ல தென்னிலங்கை மக்களையே சிந்திக்க வைத்து ஓரணியில்
தன்னிச்சையாக அணிதிரள வைத்துள்ளனர். தமது கோரிக்கைகளை மக்கள் மயப்படுத்தி மக்கள் கோரிக்கையாகவும் உருவாக்கி மக்களை அதன் பங்காளராக்கி வெற்றியும் பெற்றுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு விடிவையோ விமோசனத்தையோ ஏற்படுத்த திராணியற்று இருக்கும் தமிழ்த் தலைமைகள் ஒற்றுமைப்படுவதாலும் நன்மை ஏற்படப் போவதில்லை. ஏனெனில் இவர்களிடம் கொள்கையோ கோட்பாடோ இல்லை.

எனவே தமிழ் மக்களை நேசிக்கின்ற சமூக ஆர்வலர்கள் புத்தி ஜீவிகள் சிவில் சமூக அமைப்புகளைக் கொண்ட வினைத் திறன் கொண்ட மாற்றுத் தலைமையை உருவாக்க தமிழ் இளைஞர் யுவதிகள் பல்கலைக் கழக சமூகம் என்பன களத்தில் இறங்க வேண்டும்.

இது வடக்கு கிழக்கு மலையக மற்றும் முஸ்லிம் என அனைத்து தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளுக்குமான கடமையாகும்.

- இது உங்களுடைய யுகம்.
- தமிழ் பேசும் மக்களிடையே புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டிய வரலாற்றுக் கடப்பாடு உங்களுடையது.
- தென்னிலங்கையில் பதிய அரசியல் கலாசாரத்துக்காக மேல் எழுந்து வருகின்ற இளைஞர் சக்திகளுடன் தமிழ் பேசும் மக்கள் சார்பில் பேச வேண்டிய சக்தியும் நீங்கள்தான். ஏனெனில் தமிழ் பேசும் மக்களின் தலைவிதி இளைஞர்களாகிய உங்களது கைகளிலேயே தங்கியுள்ளது.

*Email : vathevaraj@gmail.com*
*Mobil : 0094 777304145*



# வடக்கின் கோரிக்கைகளை கோட்டாகோகமவிடம் கொண்டு செல்வதாக கொழும்பு தலைவர்கள் வாக்குறுதி



ஜனாதிபதிக்கு எதிராக காலி முகத்திடலில் சுமார் இரண்டு மாதங்களாக நடைபெற்று வரும் போராட்டத்தில் வடக்கில் உள்ள தமிழர்களின் கோரிக்கைகளை உள்ளடக்குவதாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற தென்னிலங்கை தலைவர்கள் குழு உறுதியளித்துள்ளது.

கொழும்பில் இருந்து தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் தலைவர்களும் வடக்கில் உள்ள தொழிற்சங்க தலைவர்களும் மே 29 ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க அலுவலகத்தில் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடினர்.

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம், சம உரிமைகள் இயக்கம், பொது நிர்வாக அதிகாரிகள் சங்கம், மீன்பிடி கூட்டுறவு இயக்கம், அஞ்சல் மற்றும்



தொலைத்தொடர்பு அலுவலர்கள் சங்கம், மின்சார அதிகாரசபை அதிகாரிகள் சங்கம் உட்பட சுமார் 20 தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இதில் கலந்துகொண்டதாக யாழ்ப்பாண செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை வீடு திரும்புமாறு கோரி காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு வடக்கு மக்களின் ஆதரவின்மைக்கான காரணங்கள் குறித்து கலந்துரையாடும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக தம்மைப் பீடித்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் காலிமுகத்திடல் போராட்டத்தில் போதியளவு குரல் கொடுக்காமையே இதற்குக் காரணம் என வடக்கின் பிரதிநிதிகள் கொழும்பில் இருந்து வந்த பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குதல், பாதுகாப்புப் படையினரால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயம் மற்றும் வடக்கின் இராணுவமயமாக்கல் போன்ற விடயங்களை வலியுறுத்தி காலி முகத்திடலில் குரல் எழுப்பப்பட வேண்டும் என வடக்கின் தொழிற்சங்க தலைவர்கள் தெற்கில் உள்ள தொழிற்சங்க தலைவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கில் தொழிற்சங்கத் தலைவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் தெற்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி, காலி முகத்திடலில் நடைபெறும் போராட்டத்தில் அந்தக் கோரிக்கைகளை இணைக்க நடவடிக்கை எடுப்பதாக வடமாகாண தொழிற்சங்கத் தலைவர்களுக்கு தானும் தனது குழுவினரும் உறுதியளித்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பு ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினை மற்றும் சுயநிர்ணய உரிமை தொடர்பில் தெற்கில் உரையாடல்களை விரிவுபடுத்த வேண்டுமென வடக்கின் தொழிற்சங்கத் தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.






உலக செய்திகள்
World News

# அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து மீட்கப்பட்ட தமிழகக் கோயில்களின் 10 சிலைகள்

தமிழகத்தின் கோயில்களில் இருந்து களவு போன 10 சிலைகள், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளின் அருங்காட்சியகங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இந்த சிலைகள், தமிழக காவல்துறை தலைவர் சைலேந்திர பாபுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தலைநகர் டெல்லியில் இந்த சிலைகள் அவர-்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி, மத்திய இணையமைச்சர்கள் அர்ஜுன் ராம் மேக்வால், மீனாட்சி லேகி மற்றும் எல்.முருகன் ஆகியோர் பங்கேற்றனர். மொத்தம் 10 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. அதில் 8 சிலைகள் உலோகங்களால் ஆனது. 2 சிலைகள் கற்களால் உருவானவை.

மீட்கப்பட்ட சிலைகளின் விவரம்: தென்காசி மாவட்டத்தில் களவு போன துவாரபாலகர் சிலைகள் (2 - கற்சிலைகள்), தஞ்சை புன்னை நல்லூரில் களவு போன நடராஜர் சிலை, நெல்லை ஆழ்வார்குறிச்சி கங்காளமூர்த்தி சிலை, ஆழ்வார்குறிச்சி நந்திகேஸ்வரர் சிலை, அரியலூர் விஷ்ணு சிலை, அரியலூர் ஸ்ரீதேவி சிலை, தஞ்சை தீபாம்பாள்புரம் சிவன் - பார்வதி சிலை, நாகை குழந்தை சம்பந்தர் சிலை, நடனமாடும் குழந்தை சம்பந்தர் சிலை தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. மே, 2021-ஆம் ஆண்டுக்கு முன் 2 சிலைகளும், அதன் பிறகு 8 சிலைகளும் மீட்கப்பட்டுள்ளன. இந்த சிலைகள் கும்பகோணம் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளதாக தெரிகிறது.



அதன் பிறகு நீதிமன்ற உத்தரவின் பேரில் சிலைகள் சம்பந்தப்பட்ட கோயில்களில் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா செய்திகள்
India News

# இந்திய விடுதலைக்கு போராடிய வீரமங்கை அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் காலமானார்



நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்து, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரமங்கை அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் (102) மலேசியாவில் காலமானார். அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். மலேசியாவின் கோலாலம்பூரில் பிறந்த அஞ்சலை பொன்னுசாமி அம்மா 1943-ஆம் ஆண்டு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்தில் (ஐ.என்.ஏ.) தன்னை இணைத்து கொண்டு நாட்டின் சுதந்திரத்துக்காக போராடியவர்.

இந்நிலையில், இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரமங்கை அஞ்சலை பொன்னுசாமி வயது மூப்பு காரணமாக மலேசியாவில் புதன்கிழமை (1) காலமானார். இதனையடுத்து, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரமங்கை அஞ்சலை பொன்னுசாமி மறைவுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 1943 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின்போது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய "இந்திய தேசிய இராணுவத்தில் (ஐ.என்.ஏ) ஜான்சி ராணி படைப்பிரிவில் இணைந்து இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரமங்கையான அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் (102) மலேசியாவின் செந்துல் நகரில் காலமாகியுள்ளார். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் பிறக்காவிட்டாலும் வாழாவிட்டாலும் 21 வயதே ஆன நிலையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் படையில் சேர்ந்து கடும் நெருக்கடி மிகுந்த சூழல்களில் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடியவர் அஞ்சலை பொன்னுசாமி அம்மாள். இந்தியா, மலேசியா இரு நாடுகளும் முறையே 1947 மற்றும் 1957 ஆண்டுகளில் விடுதலை பெற்றதைக் கண்டு மகிழ்ந்து நிறைவாழ்வு வாழ்ந்தவர் விடைபெற்றிருக்கிறார்.

வீரம், மனவுறுதி, துணிச்சல் ஆகிய பண்புகளால் பெண்குலத்துக்கே சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்கிய அஞ்சலை பொன்னுசாமி அம்மாளின் தியாகம் இந்திய விடுதலை வரலாற்றில் என்றும் அழியாப்புகழ் பெற்று விளங்கும்", என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# Discover the flavour of a legendary Sinha Stout from the exotic island of Sri Lanka




Lions have fascinated mankind since time immemorial. They form an integral symbol of strength and clan identities for tens of thousands of years. The mystery and allure of the king of the jungle pervaded civilizations for centuries and in the late 19th century, deep within central Sri Lanka, British explorer, Sir Samuel Baker, discovered a lion that would one day enliven palates around the world – but, it remained a secret.

Whilst on a hunting trip in the cool climes of Sri Lanka's (then Ceylon) salubrious central hills of Nuwara Eliya, situated 6000 feet above sea level, legend says Baker took aim at a magnificent stag in the distance. Baker hit his target, and as he strode to retrieve his price, he was struck with awe at the beauty and abundance that surrounded him including a sparkling spring flowing down to the lake below. There, Sir Samuel Baker set up what would become the Ceylon Brewery in 1881.

Since then, the Ceylon Brewery – now Lion Brewery (Ceylon) PLC,– produced golden brews that for long remained some of the best kept secrets from the rest of the world. Visitors to the golden isle and its dwellers savoured the exclusive flavours for decades, before Lion ventured out to the world in 1981 – more than a century after its inception.

Upon its discovery by global beer connoisseurs, its flagship product, Lion Lager, is now exciting drinkers around the world. With a unique flavour stemming from its century-old recipe, Lion Lager is now available at selected Beer Stores under the brand name Sinha Lager in Canada. The beer is available in 6 packs and retails for $17.45 for a 6 pack.

But the jewel in the crown of this King is its famous Stout – the indisputable king of dark beers. Lion Stout, known as Sinha Stout in Canada, is for long considered the best kept secret in beer. The traditional dark stout comes with sweet notes of chocolate, toffee, mocha, caramel and roasted barley, and trapped by its dense creamy head offers drinkers a burst of flavour that keeps them coming back for more.

The late Beer Hunter, Michael Jackson, officially endorsed this Stout as 'the best in the world'. During a visit to Sri Lanka, in 1986 to track down this cask-conditioned stout, Jackson savoured this legendary beer and fell in love with it immediately. This was definitely 'love at first sip'. What adds a real tang to this tale is that Jackson did not seek any form of compensation for his endorsement or review – he loved it so much.

It's difficult to detail the richness of a Sinha Stout. It is a flavour that must be indulged for a palatal experience that is unparalleled. Over the years Sinha Stout has earned the privilege of converting countless lager faithful towards dark beer, and it is all down to the most unique and rich flavour of this beer – what was once the best kept secret in beer. Now that the secret is out, it is waiting to be discovered by Canadian beer enthusiasts. Sinha Stout is available at selected LCBO outlets around Ontario.




Tipplers love this Stout. So-much-so, it enjoys a 97-99 rating on ratebeer.com and has acquired a loyal consumer base in many European markets for its distinct taste profile. It's not just the consumers, even quality agencies love Lion/Sinha Stout, winning multiple Gold Awards continuously from the prestigious Monde Selection over several years. The Lion Brewery works in partnership with Carlsberg AG, and is compliant with the latter's Global Quality Management System.

It happens it was a cocktail competition that drew the late Beer Hunter Michael Jackson to Sri Lanka back in the day. Sinha Stout was used in the competition, and mixing was evidently popular from the olden days. Jackson recounts his experience as below.

"The (Lion) brewery's principal product is lager, but it made a pale ale until the 1960s, and it still produces a stout. This pattern is typical in former British colonies. As golden lagers became more popular, the bronze or copper "middle" color vanished, but a black porter or stout survived for those who wanted something truly dark. All beers were stronger in colonial times, and these old black brews typically had between 6.0 and 9.0 per cent alcohol by volume.

Sinha Stout, a wonderfully sweet but assertive tropical gem, is bringing the rich heritage of Sri Lankan flavour to Canada's discerning drinkers. This legendary dark beer is presently served in 26 countries, brewed untouched by hand using nothing but the finest ingredients from around the world said Stefan Atton, Vice President International Business for Lion Brewery (Ceylon) PLC. True to the nation's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence. In Sri Lanka, the company represents brands from Carlsberg, Diageo, Brown-Forman, AB InBev and Warburn demonstrating its commitment to working with world-leading brands and serving nothing but the best.

Sinha Stout is a favourite on Sri Lanka's golden sun-bathed beaches, and even in the cool climes of the hills within which it was discovered. It is a beer that keeps connoisseurs coming back for more, with its soft, fresh and extraordinary chocolatey mocha character. Reach out for a Sinha Stout, a beer that is exotic as the island within which it was born.

Enjoy the best kept secret.

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்
2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை
ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.
Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick
ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.



- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே
3 to 4 Star Hotel or Motel
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
சொகுசு பேருந்து | தங்குமிட வசதி | காலை உணவு | பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
–1881–
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
SINHA
LAGER
IMPORTED
Contains: Barley, Sulphites
Contient : Orge, Sulfites
SINHA
LAGER
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக
சேவையாற்றிவருபவரும் பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு
அழகு சேர்த்தவருமான

## கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்

அவர்களின்

சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன்,
அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்

# பாராட்டுப் பெருவிழா

JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA

**Saturday**
**July 2nd, 2022**
**6:30 PM**



உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின் மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும் வேண்டுகிறோம்.


**Kindly RSVP by June 20th, 2022**

உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com


MORTGAGES & REFINANCES
WE WILL GET THE MORTGAGE FOR
• LOW INCOME
• BAD CREDIT
• CONSUMER PROPOSAL
அனைத்துவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!
PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS
WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU
Shan Thayaparan
Mortgage Architect
M08009140
MORTGAGE ARCHITECTS
416-826-7426
shan@shan123.com

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

POWER BROTHERS 4, REAL ESTATE



SUGAN SIVARAJAH BROKER OF RECORD 416.890.9999
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH BROKER 416.453.7777

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

795 Milner Avenue, Toronto, ON M1B 3C3 | Office: 416-282-3333 | Fax: 416-272-3333 www.pyramidgroup.com

Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.

# நிலுவையில் உள்ள 21 மசோதாக்களுக்கு ஒப்புதல் தரவேண்டும்

# ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்த பின்னணி

ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சந்தித்துப் பேசினார் அப்போது, நிலுவையில் உள்ள சித்த மருத்துவ பல்கலைக்கழகம் உள்ளிட்ட 21 சட்ட மசோதாக்களுக்கு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டும் என முதல்வர் வலியுறுத்தினார். நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதற்காக நன்றியும் தெரிவித்துக் கொண்டார்.நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்கக் கோரும் சட்ட மசோதா, கடந்த ஆண்டு செப்டம்பரில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இந்த மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் ஆளுநர் வைத்திருந்தார்.

இதனால், ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து, மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்புமாறு வலியுறுத்தினார்.ஆனால், நீட் தேர்வு மசோதாவை மறுபரிசீலனை செய்யுமாறு கூறி, கடந்த பிப்.1ம் தேதி பேரவைத் தலைவருக்கு ஆளுநர் திருப்பி அனுப்பினார். இதையடுத்து, பிப்.8ம் தேதி சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு, நீட் விலக்கு கோரும் மசோதா மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அதன்பிறகும் மசோதாவை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பாமல் இருந்தார்.

கடந்த மார்ச் 15ம் தேதி, ஆளுநரை சந்தித்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க வலியுறுத்தினார். மேலும், சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்டு, நிலுவையில் உள்ளமசோதாக்களுக்கு விரைவாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதையடுத்து, நீட் விலக்கு சட்ட மசோதாவை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் ரவிஅனுப்பி வைத்தார். இருப்பினும்,




கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட பத்திரப்பதிவு குறித்த திருத்தச் சட்ட மசோதா, இந்த ஆண்டு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக உருவாக்கசட்ட மசோதா, பல்கலைக்கழங்களுக்கான துணைவேந்தர்களை அரசே நியமிக்கும் வகையிலும், முதல்வரை வேந்தராக நியமிக்கும் வகையிலும் பல்கலைக்கழகங்களின் சட்டத்தை திருத்திய மசோதாக்கள், கூட்டுறவு சங்க நிர்வாகிகளுக்கான பதவிக்காலத்தை குறைப்பது தொடர்பான மசோதா உள்ளிட்ட பல்வேறு சட்ட மசோதாக்கள் மீது இதுவரை ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனிடையே, ஆளுநர் ஆர்.என். ரவி, சமீபத்தில் தமிழக பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை அழைத்து கூட்டம் நடத்தி பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார். இதுதவிர, பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்கள் உட்பட பல்வேறு விழாக்களில் தேசிய கல்விக் கொள்கை குறித்து ஆளுநர் பேசி வருகிறார். இதற்கு அதே மேடையிலும், வெளியிலும் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி பதில் அளித்து வருகிறார்.

இந்நிலையில், கிண்டியில் உள்ள ராஜ்பவனில் ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை 5 மணிக்கு சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உடன் இருந்தனர். ஆளுநருடனான சந்திப்பு குறித்து அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்துப் பேசினார். அப்போது, நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் சட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்ததற்காக ஆளுநருக்கு முதல்வர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ள சட்ட மசோதாக்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். குறிப்பாக, மருத்துவ மாணவர் சேர்க்கை விரைவில் தொடங்க உள்ள நிலையில், தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.மேலும், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் திருத்தச்சட்ட மசோதா, தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமை சட்ட மசோதா, தமிழ்நாடு பல்கலைக்கழக சட்ட மசோதா உள்ளிட்ட 21 மசோதாக்களுக்கு விரைவாக ஒப்புதல் அளித்து, அரசியல் சாசனத்தின் உணர்வையும், தமிழக மக்களின் விருப்பத்தையும் நிலை நிறுத்தும்படி ஆளுநரை முதல்வர் கேட்டுக் கொண்டார். இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் கரோனா தொற்று தொடர்ந்து அதிகரிப்பு: தனிமனித இடைவெளியை கடைபிடிக்க சுகாதாரத் துறை அமைச்சர் அறிவுறுத்தல்



த மி ழ க த் தி ல் கரோனா தொற்று பாதிப்பு அதிகரித்து வருவதால், தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிவது போன்ற விதிமுறைகளை பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.கரோனா வைரஸ் தொற்றின் 4வது அலை ஜூன் மாதம் தொடங்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக ஏற்கெனவே மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதை உறுதிப்படுத்தும் விதமாக ஜூன் மாதம் தொடங்கியுள்ள நிலையில், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும், டெல்லி, ஹரியாணா, உத்தர பிரதேசம், கேரளா ஆகிய மாநிலங்களிலும் கரோனா தொற்று அதிகரித்து வருகிறது.தமிழகத்தில் தினசரி தொற்று பாதிப்பு எண்ணிக்கை 21 வரை குறைந்திருந்தது. தற்போது 100ஐ கடந்துள்ளது. நேற்று புதிதாக 139 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளிலும் குழுகுழுவாக தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டு வருகிறது. மருத்துவ நிபுணர்கள் கணித்துள்ளதை போல் தொற்றின் 4வது அலை தொடங்கியுள்ளதா என்ற அச்சம் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ளது.இந்நிலையில், சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் செய்தியாளர்களிடம் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த 3 மாதங்களாக கரோனா பாதிப்பு குறைந்த நிலையில் உள்ளது. தற்போது அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல கல்வி நிறுவனங்களில் பாதிப்பு கண்டறியப்படுவதால், தொற்று அதிகரித்துள்ளது. டெல்லி, ஹரியாணா, உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களில் தொற்று பாதிப்பு அதிகரித்து வருகிறது. வடமாநிலங்களில் இருந்து வரும் மாணவர்களால், இங்குள்ள கல்வி நிறுவனங்களில் தொற்று பாதிப்பு அதிகரித்துள்ளது. ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிடக் கூடாது என்று சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ள மாணவர்களுக்கு லேசான அறிகுறிகள் மட்டுமே உள்ளன. அதனால் மாணவர்கள் அச்சமடைய வேண்டாம்.மாணவர்களுக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அவர்களை வீடுகளில் இருக்கச் சொல்லவோ, கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவோ கூடாது. இந்த தொற்றை எளிதாக கட்டுப்படுத்திவிட முடியும்.தொற்று பாதித்த மாணவர்களின் மாதிரிகள், மரபணு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஓரிரு நாளில் பரிசோதனை முடிவுகள் வந்துவிடும். இதுவரை எடுக்கப்பட்ட மாதிரிகளின் பரிசோதனையில் அனைவருக்கும் பிஏ2 வகை கரோனா வைரஸ் பாதிப்பு என்பது உறுதியாகியுள்ளது. ஒருவருக்கு மட்டும் பிஏ3 வகை கரோனா வைரஸ் இருந்தது. அவரும் குணமடைந்துவிட்டார்.

பாதிப்பு லேசாக இருந்தாலும், தொற்று வேகமாகப் பரவுகிறது. அதனால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தனிமனித இடைவெளியை கடைபிடிப்பது, முகக்கவசம் அணிவது, கைகளை அடிக்கடி கழுவுவது போன்ற விதிமுறைகளை அனைவரும் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.முதல் தவணை, இரண்டாம் தவணை செலுத்திக் கொள்ளாத 1.45 கோடி பேர் விரைவாக தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும். வரும் 12ம் தேதி தமிழகம் முழுவதும் 1 லட்சம் இடங்களில் சிறப்பு மெகா கரோனா தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

# "தமிழகத்தில் ஈழத் தமிழர்கள் வதைபடுகின்றனர்" சிறப்பு முகாம்களை மூட சீமான் வலியுறுத்தல்

"தமிழத்தில் சிறப்பு முகாம் என்ற சித்ரவதை முகாம்களை மூடுங்கள், க்யூ பிரிவை கலைத்து விடுங்கள்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார். திருச்சி நீதிமன்ற வளாகத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது:

"பேரறிவாளன் விடுதலையை யார் கொண்டாடியது? கொண்டாடியிருந்தால் என் தம்பி விடுதலையை நான்தான் கொண்டாடியிருக்க வேண்டும். பேரறிவாளன் நிரபாரதி இல்லை என்று கூறும் அண்ணாமலை, அமித் ஷாவுக்கும், மோடிக்கும் குஜராத் கலவரத்தில் தொடர்பு இல்லை என்று இந்த நாட்டின் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை எப்படி பார்க்கிறார்?ஒரு மாநிலத்தின் முதல்வர், சட்டம் ஒழுங்கை கையில் வைத்திருக்கக் கூடியவர், அவருக்கு தெரியாமல், ஒரு மாதத்துக்கும் மேலாக கலவரம் நடந்திடுமா? வயிற்றைக் கீறி குழந்தையைத் தூக்கி நெருப்பில் வீசுவது எல்லாம் சாத்தியப்பட்டுவிடுமா? பல ஆயிரக்கணக்கான இஸ்லாமிய மக்களை கொன்று குவித்தது, மோடிக்கும் அமித்ஷாவுக்கும் தெரியாமலேயே நடந்துவிட்டதா? இவர்களை விடுதலை செய்தால் நிரபராதி, பேரறிவாளனை விடுதலை செய்தால் அவர் குற்றவாளியா? தமிழகத்தில் க்யூ பிரிவென்று ஒன்றும், சிறப்பு முகாமென்று ஒன்றும் உருவாக்கப்பட்டதே ஈழத் தமிழர்களுக்காகத்தான். அதை உருவாக்கியவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி தான்.

அவர் உருவாக்கியதை நீங்களாவது முடிவுக்கொண்டு வாருங்கள் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் முறையிட்டு பார்த்தோம். அது நடக்கவில்லை. தற்போதுள்ள முதல்வர் ஸ்டாலினிடம் இதைத்தான் கேட்கிறோம், ஈழத்தமிழர்களுக்காக எதையும் செய்ய வேண்டாம். முதலில் இந்த சிறப்பு முகாம் என்ற சித்ரவதை முகாம்களை மூடுங்கள், க்யூ பிரிவை கலைத்து விடுங்கள். தமிழக முதல்வருக்கு தற்போதும் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். சிங்களர்கள் சிறையில் அடைபட்டு வதைபடுவதற்கு இணையாக தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் வதைபடுகின்றனர்.

மத்திய அரசு ஆட்சிக்கு வந்து 8 ஆண்டுகளாகிவிட்டது, உங்களோடு நான் இவ்வளவு நேரம் நின்று பேசுவதைப் போல், ஒரு தடவை பிரதமரை ஊடகவியலாளர்களை சந்திக்க சொல்லுங்கள்.நாட்டில் நடைபெறும் வளங்களின் கொள்ளை குறித்து பாஜக காங்கிரஸ், திராவிட கட்சிகள் கண்டித்ததே இல்லை, அவர்கள்தான் விற்கின்றனர்" என்று அவர் கூறினார்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1000



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## நீராவியடி கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயம் நீராவியடி, யாழ்ப்பாணம்

*"அஞ்சுகோடி மந்திரம் அஞ்சுளே அடங்கினால்
நெஞ்சுகூற உம்முள்ளே நினைப்பதோர் எழுத்துளே
அஞ்சுநாலு மூன்றதாகி உம்முள்ளே அடக்கினால்
அஞ்சும் ஓர் எழுத்தாய் அமைந்ததே சிவாயமே"*

ஆதிகடைநாதன் எனப்போற்றப்படும் அருட்பெரும் வள்ளல் பெருமானாகிய யாழ்ப்பாணம் கடையிற்சுவாமிகள், தென்னிந்தியாவிலுள்ள பெங்களூர் நகரைச் சேர்ந்தவர். அங்கு நீதவானாகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில், ஒருகொலை வழக்கில் குற்றவாளிக்கு மரணதண்டனைவிதிக்க யூரிமார் முடிவெடுத்தனர். ஆனாலும் நீதிபதியாக வீற்றிருந்தவருடைய உள்ளத்தின் மனச்சாட்சி, தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர் நிரபாரதி, குற்றமற்றவர் என்பதை அவருக்கு உணர்த்தியது. இறைவன் கொடுத்த உயிரை எடுக்கக் கட்டளையிட நான் யார்? ஏன கேள்விகள் நீதிபதியின் உள்ளத்தில் நீண்டுகொண்டே போனது. இறுதியில் நீதிபதி பதவியைத் துறந்தார். நல்லதொரு குருவை நாடி அவர் கடாட்சத்தைப் பெற்றார். சுவாமி முத்தியானந்தா என்ற தீட்சா நாமத்துடன் விளங்கினார்கள்.

ஈழநாடு பெற்ற பெரும்பயன் காரணமாக, சுவாமி முத்தியானந்தா அவர்கள் பாய்மரக்கப்பல் மூலம் ஊர்காவற்துறையை வந்தடைந்தார். அங்கிருந்து சுவாமிகள் கால்நடையாகப் புறப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தார். இவ்வாறு சுவாமிகளின் யாத்திரையின்போது முதன் முதலில் அவர் தங்கிய இடம் மண்டைதீவாகும். சுவாமிகள் வந்து தங்கிய இல்லமும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களும் மண்டைதீவில் இன்றும் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுவாமிகள் ஈழம் வருவதற்குக் காரணமாக இருந்தவர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட வைரமுத்துச் செட்டியார் ஆவார். இவர் அடிக்கடி இந்திய யாத்திரை செய்யும் வழக்கமுடையவர். அப்பொழுதெல்லாம் மகான்களைச் சந்திப்பதிலும் ஆர்வங் கொண்டவர். அவ்வாறான ஒருநிலையில் சுவாமி முத்தியானந்தா அவர்களையும் சந்தித்து, அவர்களை ஈழம் வருமாறு அழைத்துள்ளார். அவர்களுடைய அழைப்பையேற்றே சுவாமிகள் ஈழம் வந்துள்ளார்கள்.

சிலநாட்களின்பின் சுவாமிகள் மண்டைதீவைவிட்டு யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தார்கள். அங்கு பெரியகடை என்று அழைக்கப்பட்ட இடத்தில் வசிக்க ஆரம்பித்தார்கள். இக்காரணத்தினால் அன்பர்கள் சுவாமியை கடையிற்சுவாமிகள் என அழைத்தனர். சுவாமி முத்தியானந்தா என்ற திருநாமம் மறைந்து, கடையிற்சுவாமிகள் என்ற பெயரே நிலைத்தது. சுவாமிகள்மீது மிகுந்த பக்தி கொண்டவரான குழந்தைவேற் சுவாமிகள், கடையிற்சுவாமிகளுடைய அக்காலத் தோற்றத்தை மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளாகள். அப்பாடல் வரிகள் வருமாறு காணப்பட்டன,

*"பெரியகடைநாதன் பித்தன் திருக்கோலம்
கரியவர்ணச் சீலை கருந்தோலென சால்வை
துரியாதீதப் பொட்டுத் துலங்க நடைமெட்டுச்
சரியாயறிந்தேத்தித் தழைத்தாட்படுவரே"*

சித்தர் பெருமானின் வெளித்தோற்றத்தை மட்டுமன்றி, அவர் சித்தத்தையும் வெளிக்காட்டியுள்ளமை சிறப்புடையது.

சுவாமிகள் தன்னைமறந்த நிலையில் பெரியகடைத்தெருவழியே சுற்றிஅலைவது வழக்கம். இவரைப்பித்தனாகக் கருதிய நகர்க்காவலர்கள், அவரை பிடித்து கொழும்புக்கு அனுப்பி மனநோய்க்கு வைத்தியம் செய்யத்தீர்மானித்தனர். அவ்வாறே அவரைப்பிடித்துச் சென்று, கொழும்புக்கு அனுப்புவதற்காக காவல்நிலையத்தில் ஓர் அறையில் பூட்டி வைத்தனர். மறுநாள் அவரைக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்காக அறைக்குச் சென்றபோது, அங்கே சுவாமிகள் காணப்படவில்லை. பழையபடி சுவாமிகள் கடைவீதிகளில் உலாவித்திரிந்தார்கள். இதன் பின் பலரும் சுவாமியின் அருமைபெருமைகளை அறிந்து கொண்டாடினர். இவ்வாறு சுவாமியை புரிந்து அவரிடம் பக்தி கொண்டவராக, கந்தர்மடத்தைச் சேர்ந்த சார்ஜன் சின்னத்தம்பி என்பவர் விளங்கியுள்ளார். இவர்களே பின்னர் சார்ஜன்சுவாமிகள் என அழைக்கப்பட்டார்கள்.

சுவாமிகள் சமாதியடையும் காலம் நெருங்கியபொழுது, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நீராவியடியில் தங்கியிருந்தார்கள். நீராவியடிப்பிள்ளையார் கோயிலின் தென்மேற்குத் திசையில், கோயில் எல்லையிலிருந்து ஏறக்குறைய ஐம்பது யாருக்கப்பால் அமைந்திருந்த ஒருகுடிசையிலேயே, தமது இறுதிக்காலத்தில் சுவாமிகள் வாழ்ந்துள்ளார்கள். இவ்விடத்திலேயே தமது சமாதி நிகழவேண்டும் என்பது சுவாமிகளின் எண்ணமாகக் காணப்பட்டது.

சுவாமிகள் 1891 ஆம்ஆண்டு, கரவருடம், புரட்டாதித் திங்கள் சதயநட்சத்திரத்தில் மகாசமாதி அடைந்தார்கள். சுவாமியுடைய சீடர்களும், பக்தர்களும், அன்பர்களும் மகாசமாதி வைபவத்தை, பக்திசிரத்தையோடு நிறைவேற்றிவைத்தனர். சுவாமிகளுடனிருந்த அன்பர்களுடைய பெருமயற்சியின் காரணமாக, 1900 ஆம் ஆண்டளவில், சுவாமிகள் சமாதியடைந்த இடத்தில், சிவன்கோயிலுக்குரிய ஆகமவிதிகளுடனான நிலையில், கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயம் தோற்றம் பெற்றது.

*வளரும்...*



# இவ்வருடம் கும்பாபிஷேகம் காணும் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலயம்



## ஆலய வரலாறு 1

**ச**ர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தினரின் இலங்கைக் கிளையினரால் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலயம் எதிர்வரும் ஆவணி 16இல் (செப்டம்பர் 1) கும்பாபிஷேகம் காண உள்ளது. மக்களின் பிரார்த்தனைகளுக்கும், ஆர்வத்துக்கும் அமைய ஸ்ரீஸ்ரீ ராதா ராஜகோபாலருக்கான ஆலயத்திருப்பணி இனிதே நிறைவேறி குறித்த நாளில் கும்பாபிஷேகம் பக்திப்பரவசத்துடன் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

1976ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பக்தித் தலத்தின் வரலாறு 40 வருடங்களைக் கடந்து வந்துள்ளது. ஆலயமொன்று அமைப்பதென்பது இந்த பக்தர்களின் மாபெரும் கனவாகவே இருந்தது என்று கூறலாம். இச்சமயத்தில் இந்த கிருஷ்ண பக்திக் கழகம் இலங்கையில் எவ்வாறு தடம்பதித்தது என்பது பற்றிய பசுமை நினைவுகளை சிறிது நோக்குவது பொருந்தும் என்று கருதுகிறேன்.

இலங்கையில் ஊர்காவற்றுறை, சுருவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஜெர்மனியில் விஞ்ஞானப் பட்டதாரியாக பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த வேளையில் அவருக்கு இந்த கிருஷ்ண பக்தி கழகத்துடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அதனை அடுத்து அதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவர் அங்கு சென்று பக்திச்சேவைகளில் ஈடுபடலானார். அவருடைய பக்தியைக் கண்டு இந்த கழகத்தின் ஸ்தாபகரும், ஆன்மிகக் குருவுமான இந்தியாவைச் சேர்ந்த சுவாமிஜி அருட்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்கள் அவருக்கு தீட்சை வழங்கி மஹாகர்த்தா தாஸ் என்று பெயர் சூடினார்.

இன்று இலங்கையில் உள்ள கிருஷ்ண பக்தர்களில் சுவாமி பிரபுபாதாவிடம் தீட்சைபெற்ற ஒரே ஒரு சிஸ்யராக அவரே திகழ்கிறார். தீட்சை பெற்றபின்னர் அவருக்கு ஓர் ஆசை ஏற்பட்டது. அதாவது நமது நாட்டில் அதாவது இலங்கையில் இந்த கிருஷ்ண பக்திக் கழகத்தை ஆரம்பித்தால் நிறைய பக்தர்கள் இணைந்துகொள்வார்கள். நாட்டு மக்கள் மத்தியில் இறைபக்தி உருவாகும். நாட்டில் அமைதி, மகிழ்ச்சி, செல்வச்செழிப்பு ஏற்படும் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். அதனால் அவர் தனது ஆசையை அங்கு வெளியிட்டார். அதற்கு சம்மதம் கிடைத்தது. ஆனால் ஒரு நிபந்தனை. அது என்னவெனில் ஒருவர் இந்த கழகத்தை ஏதாவது ஒரு நாட்டில் ஆரம்பிப்பது என்றால் அவர் தனது சுய முயற்சியில் தான் ஆரம்பிக்க வேண்டும். அவருடைய செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன, அந்த கழகம் எவ்வாறு வளர்ச்சி பெறுகிறது என்பதை அறிந்த பின்னர்தான் தலைமையகத்தின் உதவிகள் கிடைக்கும். அதனால் நீங்களே போய் இந்த கழகத்தை உங்கள் நாட்டில் ஆரம்பியுங்கள் என்று கூறியதோடு அவருக்கு உதவியாக ஓர் அமெரிக்க பக்தரான ரோகிணி குமாரதாஸ் என்னும் இளைஞரையும் அனுப்பி வைத்தார்கள். இருவரும் இலங்கையை அடைந்தபோது அவர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.



ஆனாலும் அவர்கள் சுவாமி பிரபுபாதாவை நினைவுபடுத்திக்கொண்டனர். சுவாமி பிரபுபாதா எப்படி தனக்கு சிறிதும் அறிமுகமில்லாத அமெரிக்க நாட்டுக்கு யாருடைய உதவியும் இல்லாமல் தன்னந் தனியனாகப் போய் இந்த கிருஷ்ண பக்திக்கழகத்தை ஸ்தாபித்து சில வருட காலத்திலேயே உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பரவச்செய்தார். எல்லாம் பகவானின் அருளால்தான் அவரால் சாதிக்கமுடிந்தது என்தை அவர்கள் பூரணமாக நம்பினர்.

இறைவன்மீது நம்பிக்கை வைத்து அவர்களும் பணியை ஆரம்பிக்கலாயினர். சுவாமி மஹாகர்த்தா தாஸ் தனக்கு மிகவும் அபிமானத்துக்குரிய ஒரு செல்வந்த வர்த்தகரைச்சந்தித்து இந்தக் கிருஷ்ண பக்திக் கழகத்தைப் பற்றி விளக்கிக்கூறி தலைநகர் கொழும்பில் ஒரு கிளை நிலையத்தை ஆரம்பிப்பதற்கு உதவுமாறு கூறியுள்ளார். அவரும் புதுச்செட்டித்தெருவில் ஓர் இல்லத்தை அவருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

1976ஆம் ஆண்டு அந்த இல்லத்தில் கழக ஆலயத்தை உருவாக்கி பூஜைகளில் ஈடுபடலானார். இந்த விடயத்தில் இன்னொன்றையும் கூற வேண டும். அதாவது, அவருடன் வந்த அமெரிக்க பக்தரான ரோகிணி குமாரதாஸ் அவர்கள் ஒரு சிறந்த பக்தர். அவர் இறைவனின் பாடல்களை அழகாகப் பாடுவார். பிரசங்கம் செய்வார். இறைவனையும் ஆலயத்தையும் அழகாக அலங்கரித்து பார்த்து இரசிப்பார். இன்னும் சமையல் வேலைகளை செய்தல், நைவேத்தியம் செய்தல் என்று ஆலயத்தை சீராக பராமரிப்பதில் அவர் மிகுந்த திறமையுடன் செயல்பட்டார். ஆனால் அவரிடம் இல்லாத திறமை என்னவென்றால் அது நிதி சேகரிப்பது மட்டும்தான். நிதி இல்லாமல் ஆலயத்தை நடத்தமுடியுமா? அவருக்கு நிதி சேகரிக்கும் ஆற்றல் இருக்கவில்லை என்றே கூற வேண்டும். அதனால் ஆலயத்தை பராமரிக்கும் வேலைகளை அவரிடம் விட்டுவிட்டு சுவாமி மஹாகர்த்தாதாஸ் மட்டும் நிதி சேகரிக்க தினமும் வெளியில் சென்றார். இப்படி மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் நிதி சேகரித்து ஆலயத்தை சீராக நடத்துவதற்கு முயற்சி செய்தார்.

இவ்வேளையில் இன்னொன்றையும் கூற வேண்டும். அதாவது சுவாமி பிரபுபாதாவின் ஒரு கொள்கையானது இந்த கிருஷ்ண பக்திக் கழகம் எந்த நாட்டில், எங்கு இயங்கினாலும் வாழ்வுக்காக உணவு (food for life) என்ற ஒரு திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்பதில் கண்டிப்புடன் இருந்தார். வாழ்வுக்காக உணவு என்பது வாரத்தில் ஒரு நாளாவது மக்களுக்கு உணவளிக்க வேண்டும் என்பதுதான். அதன்படி முதல் வாரமே சுவாமி மஹாகர்த்தாதாஸ் நிதி சேகரித்து உணவளிக்க தவறவில்லை. அதுமுதல் பக்தர்கள் அந்த ஆலயத்திற்கு வரத் தொடங்கினார்கள இந்த இரண்டு பக்தர்களின் சேவையில் கிருஷ்ண பக்திக் கழகத்தின் தலைமையகம் திருப்தி அடைந்தது என்றே கூற வேண்டும். அவர்கள் உதவிகள் வழங்கியதோடு நிறைய வெளிநாட்டு பக்தர்களை இங்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் வாராவாரம் ஞாயிறு அன்று பெரிய விருந்து தடல் புடலாக நடக்கலானது. கொழும்பின் பல பகுதிகளிலும் வெளிநாட்டு பக்தர்களின் ஆடல், பாடல்களுடனான சங்கீர்த்தனத்தைப் பார்த்து மக்கள் வியந்தனர். ஒரு விடுமுறை நாள் பகல் பொழுதில் நானும் என் சகோதரனும் அந்த ஆலயத்திற்குச் சென்றிருந்தோம். என் சகோதரன் ஏற்கனவே அங்கு சென்று ஓரளவுக்குப் பழகியிருந்தார். அவர் என்னை அங்கிருந்தவர்களிடம் அறிமுகப்படுத்திவைத்தார்.

அங்கு சென்றபோது அங்கிருந்த வெளிநாட்டு பக்தர்களைப் பார்த்து எனக்கு வியப்பாக இருந்தது. அங்கு பல்வேறு நாடுகளையும் சேர்ந்த கறுப்பு இன, வெள்ளை இன பக்தர்கள் இருந்தனர். அவர்கள் எல்லோரும் ஒருதாய் மக்கள்போன்று அன்புடன் பழகுவதைப் பார்க்கும் போது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. இது நமது மதம்தானா அல்லது வேறு மதமா என்பதுதான் அது. ஏனென்றால் அங்கு வைக்கப்பட்டிருந்த சுவாமி சிலைகள் நான் அதற்கு முன்னர் காணாதவையாக இருந்தன. ஜெகநாதரின் வடிவங்கள்தான் அவை. ஆனாலும் அவர்கள் பேசும்போது இது நமது மதம்தான் என்று அறியமுடிந்தது. இவர்களும் நம் மதத்தைத்தான் பின்பற்றுகிறார்கள் என்று அறிந்தபோது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அதுமட்டுமல்ல, அங்கிருந்த ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு பக்தருடன் உரையாடலானேன்.

நான் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே மகாபாரதம் ராமாயணம் என்பவற்றை ஓரளவு அறிந்திருந்தேன். அவை இரண்டும் பாடத்திட்டத்திலும் இருந்தபடியால் எனக்கு அவற்றில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அதுமட்டுமல்ல, அவற்றில் எனக்கு ஏராளமான சந்தேகங்களும் இருந்தன. சிலர் மகாபாரதம், ராமாயணம் என்பவை கற்பனைக் கதைகள் என்றும் வேறு சிலர் உண்மை நிகழ்வு என்றும் கூறுகிறார்கள். இதில் எதை நம்புவது என்று எனக்கு புரியாத பல விடயங்கள் இருந்தன. இவைபற்றி எனக்கு யாரும் சரியான விளக்கம் அளிக்கவும் இல்லை. நான் அங்கிருந்த அந்த வெள்ளைக்கார சுவாமியிடம் எனது சந்தேகங்கள் சிலபற்றி கேட்டேன். அதற்கு அவர் அளித்த விளக்கங்கள் என்னை மிகுந்த ஆச்சரியப்பட வைத்தன. யாருமே எனக்கு விளங்கவைக்காத பல விடயங்களை அவர் எனக்குக் கூறினார். எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. சந்தேகமே இல்லாமல் எனது கேள்விகளுக்கு அவர் தகுந்த விளக்கம் அளித்தார். விடுமுறை நாட்களில் எங்கெங்கொ செல்வதை விடுத்து அங்கு சென்றால் பயனுள்ளதாக இருக்குமென்று நினைத்தேன்.



நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு வெள்ளைக்கார சுவாமி வந்து எங்களைப் பால் அருந்த உள்ளே அழைத்தார். அப்பொழுது ஆலய தலைவர் மஹாகர்த்தா தாஸ் அலுவலகத்தில் அமர்ந்திருந்து ஏதோ செய்துகொண்டிருந்தார். அப்பொழுது இன்னொரு வெள்ளைக்கார சுவாமி உயரமான ஆஜானுபாகுவான தோற்றம். அவர் பால் கிண்ணத்தை ஒரு தட்டில் வைத்து மஹாகர்த்தா தாஸ் சுவாமிக்குமிக பணிவுடனும், மரியாதையுடனும் வைத்துவிட்டுச் சென்றார். அந்தக் காட்சியும் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. காரணம் ஒரு வெள்ளைக்காரர் அதுவும் ஆஜானுபாகுவான தோற்றமுள்ளவர் ஒரு தமிழ் பக்தரிடம் அப்படி பணிவுடன் நடந்துகொண்டதுதான் எனக்கு வியப்பாக இருந்தது. அங்கு எல்லோரும் சமமாக நடத்தப்பட்டாலும் ஆலய தலைவருக்கு மட்டும் ஒரு தனி கௌரவம் இருக்குமென்பதை பின்னர் அறிந்துகொண்டேன். அதன் பின்னர் எனக்கு சுவாமி மஹாகர்த்தா தாஸின் அறிமுகம் கிடைத்தது. அதன்மூலம் எனது நீண்டகால ஆசையும், இலட்சியமும் நிறைவேறும் வாய்ப்பு கிட்டியது.

**(தொடரும்)**




Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25

வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# வடிவேலுவால் பெரும் தலைவலியில் லைக்கா நிறுவனம்



கடந்த 2006 ஆம் ஆண்டு வசூல் ரீதியாக பெரும் வரவேற்பை பெற்ற வடிவேலுவின் 23-ம் புலிகேசி திரைப்படத்திற்கு பிறகு, அந்தப்படத்தின் இரண்டாம் பாகத்தில் ஏற்பட்ட பிரச்சினையினால் நடிகர் வடிவேலுக்கு அடுத்தடுத்த படங்களில் நடிக்கக்கூடாது என சிவப்பு அட்டை கொடுக்கப்பட்டது.

அதன்பிறகு அந்த பிரச்சினை எல்லாம் சரிசெய்து மீண்டும் தற்போது தமிழ் சினிமாவிற்கு வடிவேலு திரும்ப வந்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு வடிவேலு, சுராஜ் இயக்கத்தில், சந்தோஷ் நாராயணின் இசையமைப்பில் லைகா தயாரிப்பில் “நாய் சேகர் ரிட்டன்ஸ்” என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு மைசூரிலும், அதைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட படப்பிடிப்பு சென்னையிலும் நடைபெற்றது. இன்னும் அந்த படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சி மட்டும் பாக்கி இருக்கிறது. அதை முடிக்க திட்டமிட்ட படக்குழுவினருக்கு வடிவேலு செய்த செயல் பேரதிர்ச்சியாக இருந்தது. நாய் சேகர் ரிட்டன்ஸ் படத்தில் சிவாங்கியுடன் ஒரு பாடல் காட்சி மட்டும் இருக்கிறதாம். வடிவேலு அந்த பாட்டை முடிப்பதற்கு முன்னரே உதயநிதி படத்திற்கு கிளம்பி சென்றுவிட்டார். மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் கதாநாயகனாக நடிக்கும் மாமன்னன் திரைப்படத்தில் உதயநிதி ஸ்டாலினுக்கு தந்தையாக காமெடி கலந்த குணச்சித்திர கதாபாத்திரத்தில் வடிவேலு நடிக்க உள்ளார். இந்த படத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வடிவேலு நாய் சேகர் ரிட்டர்ன்ஸ் படத்தில் இருந்து கிளம்பி விட்டாராம். ஏற்கனவே இப்படித்தான் ஏகப்பட்ட வம்பை வழியில் இழுத்துப் போட்டுக்கொண்ட வடிவேலு, தற்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறுவது போல் ஒரு படத்தை முழுவதுமாக முடித்துவிட்டு அடுத்த படத்திற்கு செல்லாமல் பாதியிலேயே நாய் சேகர் ரிட்டன்ஸ் படத்தை தவிக்கவிட்டு அம்போன்னு சென்றுவிட்டார். கூப்பிட்டது உதயநிதி என்பதால், அவர் மாமன்னன் திரைப்படத்திற்கு பிறகு, அரசியலில் முழு நேரம் ஈடுபட போகிறார் என்ற முடிவில் இருப்பதால் அவரைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே வடிவேலு இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கலாம்.

# இறந்த பின் அழாதீர்கள், இருக்கும்போது உதவுங்கள்: நடிகை எலிசபெத் உருக்கம்



சின்னத்திரை மற்றும் சினிமாவில் குணசித்ர வேடங்களில் நடித்து வருகிறவர் எலிசபெத் சுராஜ். கனா காணும் காலங்கள், அனுபல்லவி, கலாட்டா குடும்பம், சந்திரலேகா போன்ற பல தொடர்களில் நடித்துள்ளார். நவீன சரஸ்வதி சபதம் உள்ளிட்ட பல படங்களிலும் நடித்துள்ளார். தற்போது போதிய வாய்ப்பு இன்றி தவிக்கும் அவர் தனது முகநூல் பக்கத்தில் வாய்ப்பு கேட்டு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் எழுதியிருப்பதாவது: சினிமாத்துறை, தொலைகாட்சி துறை அன்பர்களுக்கு, எனக்கு கிடைக்க வேண்டிய வேலையை வேற்று மாநில நடிகருக்கு தராதீர்கள். நான் மூழ்கி கொண்டிருக்கிறேன்.

மரணித்த பின் எனக்காக அழ வேண்டாம். இரங்கல் கடிதம் எழுத வேண்டாம். நான் உயிரோடு இருக்கும்போது உதவி கரம் நீட்டுங்கள். பிழைத்து கொள்வேன். நான் சார்ந்த சங்கங்களின் உயர் பதவியில் உள்ளவர்கள் கேட்க தவறியதை நான் கேட்கிறேன். இது எனக்காக மட்டுமல்ல. என் போன்ற நிறைய நடிகர்களுக்காகவும் ஒலிக்கும் என் குரல். நான் கரை ஏறிய பின் அநேகருக்கு கரம் கொடுப்பேன். என்று எழுதியுள்ளார்.



# கண் மருத்துவமனையில் அஜித்தின் காருண்யத்தைப் பார்த்த பிறகு தன்னை மாற்றிக் கொண்டதாக கூறுகிறார் ராதாரவி

சினிமாவில் கதாநாயகனாக தன்னை காட்டினாலும் நிஜ வாழ்க்கையில் நடிகர் அஜீத் செய்யும் உதவிகள் பல பேருக்கு தெரியாமலயே போய் விடுகிறது. இவரும் உதவி என்பது மனதார செய்வது. எல்லோருக்கும் தெரிந்து தான் செய்யவேண்டும் என கட்டாயம் இல்லை என்ற குறிக்கோள் கொண்ட்வர் அஜீத். இவர் பட்ட கஷ்டங்கள் கூட இருந்தவர்களுக்கு பல பேருக்கு தெரியும். ஒரு நேர்காணலில் கூட அஜித் சொல்லியிருப்பார். நான் ஒரு நல்ல நிலைமைக்கு வந்தால் என்னால் முடிந்தவரை இல்லாதவர்களுக்கு பல உதவிகளை செய்வேன் என்றி கூறியிருப்பார். இது கிட்டத்தட்ட இவர் நடிக்க வந்த புதிதில் சொல்லியிருப்பார். அவர் சொன்னதை இன்று வரை கடைப் பிடித்துக் கொண்டு தான் இருக்கிறார்.

ஒரு சமயம் நடிகர் ராதாரவி நடிகர் ஜெய்சங்கரின் மகன் விஜய் சங்கரின் கண் மருத்துவமனைக்கு கண் பரிசோதனைக்காக சென்றிருந்தாராம். அந்த சமயம் கண் லென்ஸ் வைக்க 60000 ரூபாய் வரை செலவாகுமாம். ராதாரவியை கொஞ்சம் காத்திருக்க சொல்லியிருக்கிறார்கள் மருத்துவமனை ஊழியர்கள். இவரும் காத்திருந்து பார்த்த போது திடீரென அஜித் வந்தாராம். விசாரித்ததில் கிட்டதட்ட 5000 பேருக்கு இந்த கண் லென்ஸ்க்கு ஆகிற செலவை அஜித்தே கொடுப்பதாக பொறுப்பேற்றிருந்தாராம். அதை கொடுக்க தான் வந்தாராம் அஜித். இந்த சம்பவத்தை பார்த்த பிறகு அஜித் மீது எல்லை இல்லா மரியாதை என்னை அறியாமலயே வந்தது. அதுவரை அஜித் அஜித் என்று தான் கூப்பிட்டு கொண்டு இருந்தேன். இந்த சம்பவத்திற்கு பிறகு இன்று வரை அவரை அஜித் சார்னு தான் அழைத்துக் கொண்டு இருக்கிறேன் என கூறினார்.

ASTROLOGER, PSYCHIC & SPIRITUAL HEALER
POWERFUL SPIRITUALIST-TELLS PAST, PRESENT, FUTURE
PANDIT: GANGADHAR SHASTRY
7th Generation Spiritualist-35 Years Experience
PALM READING-FACE READING - HOROSCOPE
Tells Past, Present & Future.
Don't Suffer in Silence I have Helped lots of People.
I am Specialized to in Astrology & Spirituality
FREE READINGS FOR SENIOR CITIZEN
100% GUARANTEE
Removes Black Magic, Reunite Lovers, Save Marriages,
Brings Happiness & Good Luck, Children Problems etc
Open 7 Days 10 to 8 pm
416-568-6714
3005 ISLINGTON AVE, NORTH YORK ON M6L 2K9
(MAJOR INTERSECTION: ISLINGTON & STEELES)

# ஜீவன் முக்தி 583




ஞானத்தைத் தாண்டிய ரசத்தை அடைவதற்கான அடிப்படை தகுதி – ஜீவன் முக்தி

ஞானக்கையும் தாண்டியது



- உடல் ரீதியானதோ
  மன ரீதியானதோ
  அல்ல ராசலீலை.
  அது உணர்வு ரீதியானது.
  ராசலீலை
  அதையும் தாண்டியது
  என்பார்கள்.
- இரண்டு உணர்வுகள்
  ஒன்றாய்க்
  கலப்பது ராசலீலை
  என்பதுகூட குறை
  விளக்கமே.

  ஒரே உணர்வு
  ஒரே உணர்வாய்
  எங்கும் கரைந்திருக்கிறது
  என்றுணர்வது ராசலீலை.
- பத்தியில்
  பூத்தவர்களுக்கு
  குரு கடவுளாய்த் தெரிவார்.
  காரணம்
  அவர்கள்
  கடவுளில் கரைந்திருப்பார்கள்
- குருவாவது எளிது
  சிஷ்யனாவது அரிது
  கோபிகையாவது அதிர்ஷ்டம்.

ஞான சத்யம்

'நிகழ்காலத்திலேயே இரு!' - சாத்தியமில்லாத பொய்

உங்களுக்கு சத்தியத்தை சத்தியமாகச் சொல்லவேண்டும் என்ற பொறுப்பு என்னிடம் வந்துள்ளதால் இந்த உண்மையைப் பகிர்ந்து கொள்கிறோம்.

'கடந்த காலம் எதிர்காலம் நிகழ்காலம் மூன்றிற்குள்ளேயும் நேரத்திலேயே உணர்வோடு இரு' என்று சிவ சூத்திரம் சொல்கிறது.

இதுவரைக்கும் நீங்கள் கேட்ட பாடம் எல்லாம் என்னவாக இருக்கும்?. காலத்தையும் எதிர்காலத்தையும் விட்டு 'நிகழ்காலத்திலேயே இரு' என்ற கேட்டிருப்பீர்கள்.

ஆனால் எவ்வளவு முயற்சி செய்தாலும் நிகழ்காலத்தில் உங்க வாழமுடியாது.

உங்களால் இல்லை.

என்னாலேயும் வாழ முடியாது.

யாராலேயும் வாழ முடியாது.

அது நடைமுறைக்குச் சாத்தியமாகாத நுட்பம்.

வாழ்ந்தால்...

ஒன்று கடந்த காலம்

எதிர்காலம், நிகழ்காலம்.

ஆகிய மூன்றிலேயும் ஒரே நேரத்தில் வாழலாம். இல்லை மூன்றிலேயும் இல்லாமல் இருக்கலாம்.

'ஞானி நிகழ்காலத்தில் இருக்கிறார்' என்று சொல்வது பொய் தவறு.

அவர் நிகழ்காலத்தில் இல்லை.

அவர் மூன்று காலத்திலும் இல்லை.

யாராக இருந்தாலும் ஞானிகள் உட்பட ஒன்று அவர்கள் மூன்று காலத்திலும் இருக்க வேண்டும் அல்லது மூன்று காலத்திலும் இல்லாது போக வேண்டும்.

எதிர்காலமும் இறந்த காலமும் இணைகிற இடைவெளியைத்தான் நிகழ்காலம் என்று சொல்கிறோம். 'நிகழ்காலத்தில் மட்டும் இரு' என்று சொன்னால் அது நடக்காது.

மிக ஆழமான விஷயம். இது இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் எடுத்து விடுவீர்களானால் நிகழ்காலம் என்று ஒன்று தனியாக இருக்கிறதா? இல்லையே.

அப்படி யென்றால் இருக்கிற ஒரே சாத்தியம் இறந்த காலம் எதிர் காலம் நிகழ்காலம் முக்காலத்திலும் உணர்வை ஒன்றாக்குவது. அப்படி என்றால் ஒரே நேரத்தில் வருகிற எல்லா எண்ணங்களையும் ஏற்றுக்கொண்டு மனம் எந்தக் காலத்தில் புரண்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் முக்காலத்தையும் நோக்குமாறு இருத்தல். இதுதான் அந்த ஞான சத்யம்.

ஒரு உண்மையை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். அதை நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சத்தியம் இதுதான். தனி மனித முயற்சி ஒன்றினால் மட்டும் மூன்று காலத்தையும் கடந்துவிட முடியாது. உங்களுக்கு உயர்ந்த சக்தியின் துணை வேண்டும். வழிகாட்டுதல் வேண்டும். அதற்கான சக்தியையும் புத்தியையும் சேர்த்துத் தருவதுதான் தீக்ஷை.

மிக அருமையான சத்தியம் ஆழ்ந்து கேளுங்கள்.

மூன்று காலங்களிலும் உங்கள் உணர்வை ஒன்றாக்கினாலும் இந்த மூன்று காலத்திலும் விடுபட்டுவிடுவீர்கள் அல்லது மூன்று காலத்திலிருந்தும் உங்களை முழுமையாக விடுபடுத்தினாலும் அந்த மூன்று காலத்திலும் உணர்வு ஒன்றாகி விடும்.

'விட்டாலும் பிடிக்கும் பிடித்தாலும் விடும்.'

விடுபட நினைத்தாலும் பிடிபடும் பிடிபட நினைத்தாலும் விடுபடும்.

அந்தச் சத்தியத்தை வாழ உதவும் எளிமையான தியானம் இது. கடந்த காலம் எதிர்காலம் நிகழ்காலம் மூன்றிலும் ஒரே நிலையில் உங்கள் உணர்வை ஒ ன்றாக்கி தியானியுங்கள். எதையும் ஒதுக்க வேண்டாம். எதையும் உருவாக்க வேண்டாம். எதையும் அழிக்க வேண்டாம். இருப்பதை அப்படியே முழுமையாகத் தியானியுங்கள். தொடர்ந்து முயற்சி செய்துபாருங்கள்

தியானம் என்பது எண்ணங்களைக் கரைப்பது. ஒரே ஒரு விஷயம்தான் எந்த எண்ணம் வந்தாலும் அது நிகழ்காலமா எதிர்காலமா என்று கண்டுபிடித்துவிட்டு அதில் அது எதுவாக இருந்தாலும் அந்த எண்ணத்தோடு அப்படியே இருப்பது. அதை அழிக்கக்கூட வேண்டாம்.

எந்த எண்ணமாக இருந்தாலும் அந்த எண்ணத்தின்மீது உங்கள் உணர்வை ஒன்றாக்குங்கள். ஒருவேளை ஒரே நேரத்தில் இரண்டு மூன்று எண்ணங்கள் ஓடினாலும் உங்கள் உணர்வை அதன்மீது அப்படியே ஒன்றாக்குங்கள்.

முக்காலத்திலும் உங்கள் உணர்வை முழுமையாக ஒன்றாக்குங்கள். தானாகவே உணர்வைத் தாண்டிய ஞானத்திற்குள் உங்கள் மனம் கரைந்துவிடும். மிக எளிமையான இந்தச் சத்தியத்தை செய்தால் மட்டும்தான் தெரியும் அது நம்மை எவ்வளவு ஆழத்திற்கு அழைத்துச் செல்கிறது என்று.

இந்த ஒரே ஒரு சத்தியம் நம்மை நம்முடைய உணர்வை மனத்தை இதையெல்லாம் தாண்டிய ஒரு எல்லைக்குள்ளே எடுத்துச் செல்ல முடியும். சஞ்சலம் கடந்து சங்கடம் கடந்து சத்தியத்திற்குள் நம்மை நிலை நிறுத்தும் சக்தி இந்த ஒரு சத்தியத்திற்குத்தான் உண்டு.

மிக எளிமையான தியானமாக இருந்தாலும் நம்மை ஆழமாகக்கொண்டு செல்கிற சக்திஉடையது.

நிறைய விஞ்ஞானப்பூர்வமான விளக்கங்களை சில சத்தியங்களுக்குக் கொடுக்கலாம்.

ஆனால் இந்தச் சத்தியத்தைப் பொறுத்தவரை விஞ்ஞானம் இந்தச் சூத்திரத்தை விளக்குகிற அளவிற்கு வளரவில்லை. விஞ்ஞானம் வெறும் நானூறு வருடக் குழந்தை.

நாம் பத்தாயிரம் வருடம் மெய்ஞான அறிவியலில் மூழ்கி உச்சியைப் பார்த்து முடித்தவர்கள்.

நம் விஞ்ஞானத்தைப் பற்றிச் சொல்வதுகூட விஞ்ஞானத்தையே பற்றிக் கொண்டிருப்பவர்களும் பற்றிக் கொள்ளப்போகிறவர்களும் புரிந்துகொள்ளவேண்டும் தவறவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறோம். அதனால்தான் சில விஞ்ஞானிகளை மேற்கோளாகக் காண்பிக்கிறோம். காரணம் என்னவென்றால் சிலர் ஆங்கிலப் பெயரைச் சொன்னால்தான் ஏற்றுக் கொள்வார்கள்.

அதற்காகத்தான் அவர்களையும் சேர்த்துச் சொல்கிறோம். ஒரு உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் ஆராய்ச்சி செய்து வசிஷ்டரும் வியாசரும் சென்றிருக்கிற ஆழத்திற்கு எந்த விஞ்ஞானியாலும் போக முடியாது. இதுவரை போகவும் இல்லை.

அறிவியல் என்பதே இரண்டு பக்கமும் விளையாடுகிற கள்ள நோக்குடைய வியாபாரிகளின் விளையாட்டு மாதிரி. அதற்குத் தர்க்க ரீதியாக (logically) சக்தி உண்டு. அவ்வளவுதான். அதற்கு மேல் சக்தி கிடையாது. பாவம் அது என்ன செய்யும்? அதற்கு மேலே ஒன்றும் செய்ய முடியாது.

விஞ்ஞானத்தில் நடைபெறும் ஆராய்ச்சிகளைப் பார்த்தோம் என்றால் அந்த ஆராய்ச்சிக்கு யார் முதலீடுசெய்கிறீர்களோ அவர்களுக்குத் தேவையானது மட்டும்தான். வெளியில் வரும். எல்லாக் கண்டுபிடிப்புகளும் வெளியில் வருவது இல்லை. எல்லா ஆராய்ச்சிகளும் வெளியில் வருவது இல்லை.

பல ஆராய்ச்சிகள் வெற்றி பெற்றிருந்தாலும் அவை எல்லாமே எல்லாருக்குமே சென்று சேர்வதில்லை. ஊசிபோட்டு இரத்தத்தை எடுத்து சர்க்கரைஅளவைக் கண்டுபிடிக்காமல் நேரடியாக உங்களின் கையை மேலே வைத்தாலே கண்டுபிடித்துவிடும் கருவிகளைக் கண்டுபிடித்து எத்தனை வருடம் ஆகிவிட்டது?

ஆனால் அது இன்னும் எல்லா மருத்துவமனைகளுக்கும் வரவில்லை. எல்லாப்பொதுமக்களுக்கும் பாமரருக்கும் சென்று சேரவில்லை.

பெட்ரோல் இல்லாமல் வண்டி ஓடுவதற்கான திரவம் கண்டுபிடித்து எத்தனை வருஷம் ஆகிவிட்டது? ஆனால். இன்னும் பொது மக்களுக்கு வரவில்லை.

பல கண்டுபிடிப்புகளில் தனிப்பட்ட வ'ருப் பங் களை நிறைவேற்றும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளே வெளியில் வருகின்றன.



தனிப்பட்ட விருப்பம் (Vested interest) உள்ள துறையில் மட்டும்தான் விஞ்ஞான ஆராய்ச்சி நடக்கிறது.

விருப்பப்பட்ட துறையில் விருப்பப்பட்ட பொருள்கள் மீது ஆராய்ச்சி செய்ய அனைத்து உதவிகளும் செய்து தரப்படுகின்றன. ஆனாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் விஞ்ஞானத்தால் தீர்வு தர இயலவில்லை. அறிவியலின் தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஒரு கட்டத்திற்கு மேல் விடை தெரியாமல் நின்றுவிடுகிறது.

விஞ்ஞானம் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மூட நம்பிக்கை அவ்வளவுதான். வேறு ஒன்றும் கிடையாது. பல அலோபதி டாக்டர்கள் சொல்லி இருக்கிறார்கள். 'உண்மையிலேயே இந்த மருந்து இந்த வியாதியை எப்படி குணப்படுத்துகிறது என்று எங்களுக்கும் தெரியாது. இதுவரைக்கும் எல்லோரும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாங்களும் கொடுக்கிறோம்.'

'இது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிரூபிக்க முடியாத ஒரு விஞ்ஞானம். அவ்வளவுதான் என்று சொல்கிறார்கள்.

அதுபோல் 'நிகழ்காலத்தில் இருப்பது சாத்தியமில்லாதது' எனும் இந்தச் சூத்திரமும் வரையரைக்குட்பட்ட விஞ்ஞான கருவிகளால் நிரூபிக்கப்பட இயலாத மெய்ஞான அறிவியல்.

அதனால்தான் சொல்கிறோம் உணர்வைப் பற்றி (consciousness) நம் ஞானிகள் மூழ்கி முத்தெடுத்தது போன்று வேறு யாரும் ஆராய்ச்சி செய்யவில்லை.

விஞ்ஞானத்தில் மேம்போக்காகச் செய்யப்படும் அரைகுறை ஆராய்ச்சிகளைப் பார்த்தே அவர்களுடைய உணர்வின் ஆழத்தைத் தெரிந்து கொள்ளலாம் அவர்களால் ஓர்அளவிற்கு மேல் உணர்வின் ஆழத்தை உள்வாங்க முடியாது. சத்தியங்களை உள்வாங்கமுடியாது. ஏனென்றால் அவர்கள் அரை குறையான தர்க்கத்திலேயே வாழ்ந்தவர்கள். அவர்களுடைய அறிவால் எல்லாவற்றையும் நிரூபிக்க முடியாது.

இந்தச் சத்தியமோ சாதாரண பகுத்தறிவை வைத்து சாதரண தர்க்க அறிவை வைத்து விளையாடுகிற அறிவியலாலே நிரூபிக்கப்பட முடியாத சத்தியம். ஆனால் செய்து பார்த்தால்உடனடியாக அனுபவிக்க முடியும்.

இராமகிருஷ்ணர் ரொம்ப அழகாகச் சொல்வார். 'சிலபேர் பதைபதைப்போடு வந்து ஐயா அந்தக்கிராமமே பற்றி எரிகிறது' என்று சொன்னார்களாம். அதற்குப் பக்கத்தில் இருந்தவர் நம்பிக்கையில்லாமல் 'எரியவில்லை. அது செய்தித்தாளில் வரவில்லை. அது பொய்யாக இருக்கும் என்று சொன்னாராம். அதற்கு முதலாமவர் 'இல்லை ஐயா! நான் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன் என்று சொன்னாராம். அதற்கு இரண்டாமவர் சொன்னாராம் இல்லைய்யா செய்தித்தாளில் வந்தால்தான் உண்மை.'

அதுபோன்ற பைத்தியக்கார மட மனங்கள் ஆங்கில விஞ்ஞானி சொன்னால்தான் உண்மை என்று நினைக்குமே! என்பதற்காகத்தான் இன்று நாமும் விஞ்ஞானப்பூர்வமான ஆராய்ச்சி எல்லாம் செய்கிறோம்.

நீங்கள் கேட்கலாம் 'அதற்குப் போய் ஏன் நீங்கள் இவ்வளவு விஞ்ஞானப்பூர்வமான ஆராய்ச்சி செய்கிறீர்கள் ?' என்று

ஆனால் என்ன செய்வது? அதுபோன்று ஒரு நான்கு ஆங்கில வார்த்தைகளைச் சொன்னால்தான் மனிதர்கள் ஏதோ உண்மையில் திருப்தி அடைந்தார் போன்று நினைக்கிறார்கள்

பெரிய விஷயத்தைச் சாதித்த திருப்தி பெறுகிறார்கள். உண்மையில் அவர்கள் விஞ்ஞானப்பூர்வமாக ஆராய்ச்சி செய்து காண்பித்தார்கள் என்றாலும்கூட அது நாம் செய்திருக்கும் வேலைகளில் இரண்டு சதவிகிதம்கூட கிடையாது. எல்லாவற்றையும் அவர்களுடைய அளவீடுகளை வைத்தே அளவிட முடியும் என்று நினைப்பதே தவறு.

*(தொடரும்...)*

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 58)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

யானைக் கொடியைக் கண்டதும் நின்றான் அவன் கொண்டு வந்த செய்தி என்னை திகைக்கும் படி செய்தது. தாங்கள் கடம்பூரில் இருந்து கிளம்பி சில நாட்கள் ஆயிற்று என்றும், அவன் தந்தை சம்புவரையர் எமக்கு செய்தி அனுப்பினார் இளவரசர் கரிகாலர் இறந்து விட்டார். அவரை வந்தியத்தேவன் கொன்று விட்டான் ஆகையால் மதுராந்தகரை சிம்மாசனததில் அமர்த்த இந்த சமயத்தில் எம் முயற்சியை எடுக்க வேண்டும். எம்மைச் சேர்நதவர்களுக்கு ஓலை அனுப்பி ஒன்று சேர்க்க வேண்டும் என்பது அவர் செய்தி. இது சரியாகப்பட்டது தாங்களும் நம் பலத்தை திரட்டும் வேலையில் ஈடபட்டிருப்பீர்கள் என்றும் சீக்கிரம் வந்து விடுவீர்கள் என்றும் நம்பினேன். நமது பழுவூர் படைகளை மண்ணையாற்றுக்கும், கொள்ளிடத்துக்கும் நடுவில் திறப்புறம்பயம் மேட்டில் கொண்டு போய் நிறுத்தினேன். மழபாடித் தென்னவன் மழவராயர் குன்றத்தூர்க் கிழார் மும்பாடி பல்லவராயர் தான தொங்கிக் கலிங்கராயர், வணங்காமுடி முனையதரையர், தேவசேனாதிபதி பூவையார், அஞ்சாத சிங்க முத்தரையர், இரட்டைக் குடை இராஜானியர் இவர்களுக்கு ஓலை எழுதி அனுப்பினேன். படைகளைத் திரட்டிக் கொண்டு திரும்புறன் பயத்திற்கு வருமாறு எழுதியுள்ளேன். அண்ணா கவலை வேண்டாம் கொடும்பனார் வேளாளரையும், திருக்கோவலூர் மலையமானையும் மீண்டும் தலை எடுக்காதவாறு அழித்து மதுராந்தகரை சிம்மாசனம் ஏற்றுவோம்' என்று கர்ஜித்து முழங்கினார்.

இதைக் கேட்ட பெரிய பழுவேட்டரையர் பெரிதும் ஆர்ப்பாட்டம் காட்டவில்லை 'நான் இங்கே இருப்பது எப்படித் தெரியும்?' என்று கேட்டார். 'எங்கள் படையுடன் திருப்புறம்பயம் பள்ளிப் படைக்கு அருகில் நாம் தங்கியிருந்தோம் அப்பொழுது கந்தமாறன் கொள்ளிக் கரையோரம் காவல் புரிந்தான். அவ்வேளை அங்கு வந்த சேந்தன் அமுதனைக் கண்டு இவன் வந்தியத்தேனுக்கு உதவி செய்ததாக இவனை முன்பு ஒரு முறை சிறையில் போட்டோம். இவன் இப்போது ஒற்றன் வேலை செய்கிறான் என்ற சந்தேகத்தில் பிடித்து வந்தான் அவரிடம் வினாவினோம் அதற்கு அவன் மாமன் மகள் பூங்குழலி ஏதொ ஒரு கொலைகாரனைத் தேடிச் செல்கிறாளாம் அவள் தன்னுடன் வர வேண்டாம் என்று விட்டு விட்டு போய்விட்டாளாம், அவளைப் பின் தொடர்ந்து சென்ற போது திருப்புறம்பயம் பள்ளிப் படையருகில் சதிகாரர்கள் சிலர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டானாம், தங்களை சிறைபிடித்து பச்சைமலைப் பிராந்தியத்திற்கு கொண்டு போய்விட்டதாவும், பூங்குழலியும், ஆழ்வார்க்கடியானும் அங்கு செல்கிறார்கள் என்றும் கூறினான. அதனால் உடனே இங்கே புறப்பட்டோம். இப்பொழுது என்னால் நல்லது அமைந்து விட்டது இளையராணி நந்தினி தங்களைக் காப்பாற்ற பெரும் முயற்சி செய்தாராம். இப்பொழுது பெரும் மனக் கலக்கத்துடன் அழுது கொண்டு இருக்கிறாள் நாம் ஒரு ஜாம நேரத்திற்குள் இந்த தஞ்சைக் கோட்டையை திருப்பிக் கைப்பற்றி விட வேண்டும்' என்றார் சின்னப்பழுவேட்டரையர். இதே சமயம் விம்மி அழுது கொண்டிருந்த நந்தினியிடம் ஆழ்வார்ககடியான் நெருங்கி 'நந்தினி இப்பொழுது உன் சம்மதம் சொல் என்னுடன் வா நாம் வட நாட்டுக்குப் போவோம் சிறி மந்தாராயனுடைய நாமத்தைச் சொல்லி பாசுரங்களளைப் பாடிக் கொண்டு நம்முடைய வாழ்க்கையை நாம் ஆனந்தமாக கழிப்போம்' என்று கேட்டான். அருகில் நின்ற பூங்குழலி நந்தினியைப் பார்த்து 'என் அத்தை மந்தாகினி எனக்கு கிடைத்தது போல் இருக்கிறது இனி என் அத்தை இவர்தான்' என்றாள். சேந்தன் அமுதன் 'பூங்குழலி உன் அன்பை எனக்குக் கொஞ்சம் தா' என்றான். நந்தினி 'திருமலை நான் உனக்கு எத்தனை துரோகம் செய்து இருக்கிறேன் இருந்தும் நீ எனக்கு அன்பு செலுத்துகிறாய் உனக்கு நாராயணன் அருள் புரிவார்! என்னை மன்னித்து விடு' என்றாள். அவ்வேளை பெரியபழுவேட்டரையர் அங்கு வருவதைக் கண்ட நந்தினி எழுந்து சென்று அவர் கால்களில் விழுந்து வணங்கி எழுந்தாள். சற்று தூரத்தில் நின்ற குதிரையை நோக்கினாள். அந்த இடத்திற்கு விரைந்து சென்றாள். குதிரை மீது தாவி ஏறினாள் குதிரையை தட்டி விட்டாள் குதிரை பறந்து சென்றது. நந்தினியை சுற்றி நின்றவர்கள் அவள் நோக்கமறியாது அவளைப் பின் தொடர எத்தனித்தனர். பெரியபழுவேட்டரையர் அவள் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தார். பழுவூர் ராணி பெரியபழுவேட்டரையரை விட்டுச் சென்று விட்டாள். கடம்பூரில் அகால மரணம் அடைந்த ஆதித்தகரிகாலனின் இறுதி ஊர்வலம் தஞ்சை நோக்கி வந்து கொண்டிருந்தது பரம்பரை பரம்பரையாக வீரப் பரம்பரையில் பிறந்தவர்களில் ஆதித்தகரிகாலனுக்கு ஒப்பாருமில்லை மிக்காருமில்லை. இவரின் ஊர்வலத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இப்படிப்பட்ட வீராதி வீரரை இழந்த சோகத்துடன் கோப குரோதமும் மக்கள் மனதில் பொருமிக் கொண்டிருந்தது. ஆதித்தகரிகாலன் செய்த சபதங்களை நிறைவேற்ற பழுவேட்டரையர் தடையாக உள்ளனர் என்றும் போர்க்களம் சென்றிராத மதுராந்தகதேவரை சிம்மாசனம் ஏற்றி வைக்க பழுவேட்டரையுடன் இணைந்து கொண்டிருக்கும் சிற்றரசர்களிடம் கோபம் கொண்டிருந்தார்கள். பெரும் திரளான சனக்கூட்டம், மனக் கொந்தளிப்பு எல்லாம் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது. ஆதித்தகரிகாலனின் சடலம் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே எல்லோரும் வந்து பார்க்கும் படி வைக்கப்பட்டது. அனைவரும் வந்து பார்த்து கண்ணீர் விட்டனர். ஆனால் பழுவேட்டரையரும், மதுராந்தகரும் மட்டும் வரவில்லை ஆதித்தகரிகாலன் இறுதிச் சடங்கு நிறைவாக முடிவுற்றது. சுந்தர சோழருக்கும் அவர் குடும்பத்தினரும் தஞ்சைக் கோட்டைக்கு வெளியில் வந்து நின்றார்கள். அத்தனை கோடி மக்களும் கோட்டைக்குள் புக முடியாததால் அவர்கள் வெளியே வந்தனர். சனங்கள் அவர்களைப் பார்த்துச் சென்றனர். பழுவேட்டரையர் படை திரட்டுகிறார்கள் என்ற செய்தி மக்களை எட்டியிருந்ததால் மக்கள் மதுராந்தகர் வீழ்க! பழுவேட்டடர்கள் ஒழிக! என்று கூறிக் கொண்டு இருந்தார்கள் அப்பொழுது மதுராந்தகர் அநிருத்தரின் வீட்டுக்குள் ஒழிந்திருந்தார். சனங்கள் இதைக் கேட்டு அநிருத்தரின் வீட்டின் அருகே புகுந்து மதுராந்தகரை வெளியே வரச் சொல்லுங்கள் என்று கத்தினர்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு இருந்த மதுராந்தகர் அநிருத்தரிடம் 'என்னை இரகசிய பாதை வழியாக என்னை ஆதரிப்பவரிடம் அனுப்பி விடுங்கள்' என்று கேட்டார். 'இந்த உதவியை எனக்குச் செய்யுங்கள் நான் சோழ சிங்காசனத்தில் ஏறும் பொழுது தங்களை முதன் மந்திரியாக வைத்துக் கொள்வேன் அத்துடன் பாண்டிய தேசத்தையே தங்களுக்கு அளிப்பேன்' என்றார். அதற்கு முதல் மந்திரி அன்பின் அநிருத்தர் 'இன்னும் சுந்தர ரோசழர் உயிரோடு இருக்கும் பொழுது சிம்மாசனம் ஏறுவது யார் என்ற கேள்வி எதற்கு' என்றார். 'அவரை நான் தம் குமாரனின் ஈமக் கடன் செய்யும் பொழுது பார்த்தேன் அவர் இனி அதிக காலம் உயிரோடு இருக்க மாட்டார் அவர் எனக்கே பட்டம் கட்ட விரும்புகிறார். பட்டத்து இளவரசர் ஆதித்தகரிகாலன் இறந்து விட்டான் அருள்மொழிவர்மர் என்னிலும் இளையவன் அதனால் சிங்காசனம் எனக்கே உரியது' என்றார் மதுராந்தகர். அவ்வேளை 'இளவரசே ஈழத்து ராணியை கொலை செய்தவனை சின்னப் பழுவேட்டரையர் பின் தொடர்ந்து வந்தபோது நீர் ஏன் அந்த பாதாள சுரங்கப் பாதையில் ஒழித்து இருந்தீர்' என்றார் அநிருத்தர். அதற்கு மதுராந்தகர் 'அருள்மொழிவர்மன் யானைப் பாகன் வேடம் கொண்டு அரண்மனைக்குள் வந்த போது எனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை பழுவேட்டரையர் சுரங்க வழியை எனக்கு காட்டியிருந்தார்கள். அதன் வழியாக போய்விடலாம் என்று எண்ணி அங்கு போனேன் அப்பொழுது ஒருவன் என்னிடம் வந்து இளவரசே பெரிய பழுவேட்டரையரும் கந்தமாறனும் என்னை தங்களிடம் அனுப்பினார்கள் என்றான். ஆனால் எனக்கு அவன் பேரில் நம்பிக்கை இருக்கவில்லை அதை மறுத்துவிட்டேன் பின்னர் அவன் என் பிறப்பை பற்றி ஒரு மர்மம் உண்டு அதை யாரும் தங்களுக்கு சொல்லமாட்டார்கள் ஆனால் நான் சொல்லுவேன் என்றான். அப்பொழுது நான் சம்மதித்தேன் அவன் தங்களிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டும் என்று வந்தான் பின்னர் போனவன் திரும்பி வரவில்லை இரகசிய வழியில் வந்த சின்னப் பழவேட்டரையர் என்னைக் கண்டுகொண்டார். அந்த மனிதன் தங்களிடம் வந்தானா?' என்று கேட்டார் மதுராந்தகர். அதற்கு அநிருத்தர் 'இளவரசே தங்களுக்கு அதை வெளியிட்டுச் சொல்லும் உரிமை தங்கள் அன்னைக்கு மடடுமே உண்டு எனக்கு தெரிந்திருந்தாலும் அதைச் சொல்லும் உரிமை இல்லை' என்றார். அவ்வேளை செம்பியன் மாதேவி அங்கு வந்தார் அநிருத்தர் எழுந்து உபசரித்து பின் உட்கார்ந்தார். அப்பொழுது மதுராந்தகர் 'அம்மா எனக்கு இப்பொழுது ராஜ்ஜியம் நெருங்கி வருகிறது நீ மட்டும் எனக்குப் பட்டம் கட்ட குறுக்கே நிற்காதே' என்றார். அதைக் கேட்டு 'மகனே மண்ணாசை ரொம்ப பொல்லாதது முடி சூட்டிக் கொண்டு இருப்பவர்கள் மன அமைதியில்லாது கவலை கொண்டு பல சங்கடத்துள்ளாவார்கள் அவர்களைப் போல் கரிகாலனைக் கொன்றது நீயும், பழுவேட்டரையரும் என்று மக்கள் நினைக்கிறார்கள. எப்படி உன்னை அவர்கள் மன்னனாக ஏற்றுக் கொள்வார்கள்' என்றார். மதுராந்தகர் 'ஆதித்தகரிகாலனை கொன்றது அருள்மொழிவர்மனின் அருமை நண்பன் வந்தியத்தேவன் தான். ஏனென்றால் ஆதித்தர் இறந்து கிடந்த இடத்தில் வந்தியத்தேவன் தான் இருந்தானாம் சம்புவரையர் அவனைப் பாதாளச் சிறையில் போட்டு இருக்கிறாராம் அருள்மொழி தனக்கு சிம்மாசனம் கிடைக்கும் பொருட்டு தமையனை கொலை செய்ய ஏற்பாடு செய்தானாம். இதனைச் சனங்கள் தெரிந்து கொண்டால் அப்புறம் பொன்னியின் செல்வரின் கதி என்னவாகும்? என்றான். இதனைக் கேட்டு செம்பியன் மாதேவி 'அடப்பாவி நீ என்ன வார்த்தை சொன்னாய் பொன்னியின் செல்வரைப் பற்றி என்ன நினைத்தாய் இப்படிப் பேசுகிறாய் இனி ஒரு வார்த்தை கூட அவரைப்பற்றி சொல்லாதே' என்றார். மதுராந்தகர் கோபம் கொண்டு 'பெற்ற மகனை விட அருள்மொழி உமக்குப் பெரிதாகி விட்டாரோ நான் உன் மகன் அல்ல' என்றார். அதற்கு செம்பியன் மாதேவி 'ஆமாம் நீ என் மகன் அல்ல உன்னை நான் பெற்றவளில்லை நீயும் என் வயிற்றில் பிறக்கவில்லை' என்று கோபத்துடனும் கவலையுடனும் கூறினார். மேலும் 'ஐயா நீங்கள் நடந்தவை யாவற்றையும் இவனிடம் சொல்லுங்கள் அவனும் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் வந்துவிட்டது' என்றார் செம்பியன் மாதேவி.




அப்பொழுது அநிருத்தர் மதுராந்த தேவரின் வாழ்க்கை வரலாற்றின் இரகசியத்தை கூறலானார். செம்பியன் மாதேவி தன் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்க வேண்டும் அவன் இந்த சோழ சாம்ராஜ்ஜியத்திற்கு சக்கரவர்த்ததியாக வேண்டும் என்ற ஆசை கொண்டிருந்தார். அவ்விதம் அவர் வயிற்றில் ஒரு குழந்தை உண்டானது அச்சமயம் அவர் அனாதையாக காணப்பட்ட ஒரு கர்ப்பவதியைக் கண்டார் அவரைக் காக்கும் பொருட்டு அவரை தன் அரண்மனைத் தோட்டத்திற்கு அழைத்து வந்து, அவளுக்கு உதவும் பொருட்டு அவர் தங்கையையும் அழைத்து வந்தார். இருவரும் செம்பியன் மாதேவியின் அரண்மனை தோட்டத்தில் இருந்தனர். செம்பியன் மாதவிக்கு குழந்தை பிறந்தது அப்பொழுது நான் அவரைப் பார்க்கச் சென்றேன். அவ்வேளை செம்பியன் மாதவி அழுது கொண்டிருந்தார். தனக்கு பிறந்த குழந்தை அசைவாட்டம் இன்றி இருப்பதால் மிகவும் கவலை கொண்டிருந்தார். அந்த சமயம் அவர் கணவர் வெளியூர் போய் இருந்தார். அவர் திரும்பி வரும் பொழுது எனன சொல்வேன் என்று புலம்பி அழுதார். நான் ஒரு யோசனை சொன்னேன். அதே நேரம் அநாதையாக வந்த கர்ப்ப ஸ்திரியும் குழந்தையைப் பொற்றெடுத்தார். ஒரு ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தன. அதில் ஆண் பிள்ளையைத் தருமாறு அநிருத்தர் அந்த ஊமைப் பெண்ணிடம் கேட்டார். பிள்ளைகளை அரண்மனையில் வளர்ப்பதாக சொன்னார். ஆனால் அவள் மறுத்தாள். பின்னர் இரண்டு குழந்தைகளையும் விட்விட்டு ஓடிப்போய் விட்டாள். அதனால் அவர் தங்கையிடம் அந்த ஆண் குழந்தையை எடுத்து வரச்சொன்னார். அக்குழந்தையை செம்பியன் மாதவியிடம் கொடுத்து விட்டு அசைவற்ற அவர் குழந்தையை எடுத்து சென்று புதைக்கும் படி சொன்னார். அந்தப் பெண்ணும் அவ்வாறே செய்தாள் செம்பியன் மாதவி தான் பெற்றெடுக்காத குழந்தையாய் அன்றி தன் குழந்தைபோல் சீராட்டி வளர்த்தார். தன் கணவருக்கு சில காலம் கழித்து உண்மையைக் கூறினார் அவரும் அதை ஒப்புக் கொண்டார். ஆனால் வேறு குலத்தில் பிறந்த இந்தப் பிள்ளையை சோழ சாம்ராஜ்ஜித்திற்கு தஞ்சை சிம்மாசனததில் மட்டும் ஏற்றி வைக்க நாம் உடந்தையாக இருக்கலாகாது என்று உறுதியாக கூறினார். ஒரு அனாதைக்குப் பிறந்த உன்னை அரண்மனையில் வளர்த்து ஆளாக்கிய அன்னையின் கருத்தை மறுக்காதே' என்றார் அநிருத்தர். இதைக் கேட்டுக் கதிகலங்கி மௌனமாக உட்கார்ந்திருந்த மதுராந்தகர் அநிருத்தரை நோக்கி 'விஷ்னு குலத்தில் பிறந்த அந்தணராகிய நீர் இப்படிச் செய்ய மாட்டீர் இளைய பிராட்டியும், அருள்மொழிவர்மரும் சேர்ந்து இப்படி ஒரு தவறு செய்ய உம்மைத் தூண்டியிருக்ககிறார்கள் இல்லாவிட்டால் இப்படி ஒரு பொய் புனைந்து என்னைக் குழப்பியிருக்க மாட்டீர்' என்று கத்தினார். அதற்கு அநிருத்தர் 'இளவரசே தாங்கள் கொட்டும் மழையில் மரத்தடியில் விழுந்து கிடந்த போது காப்பாற்றி எடுத்து வந்ததன் காரணம் என்ன? அருள்மொழி என்ன செய்கிறான் தெரியுமா? தம் படைவீரர்களிடமும் மக்களிடமும் தர்மத்தின் வழி நிற்க வேண்டும்! மதுராந்தக தேவர் என் சித்தப்பா அவர் உயிரோடு இருக்கையில் நான் சிங்காசனம் ஏறுவது தவறு என்று சொல்லி அவர்களை சமாதானப்படுத்தினார். நீர் இப்படிக் குறை கூறுவது முறையல்ல' என்றார். இதைக் கேட்ட மதுராந்தகர் 'அப்படியானால் என் பிறப்புக் குறித்து அவருக்கு தெரியாது நீர் வாயை மூடிக் கொண்டிருந்தால் நான் சிங்காசனத்தில் ஏறுவேன் உமக்கு சுந்தர சோழ சக்கரவர்த்தி ஒரு கிராமத்தில் பத்து வேலை நிலத்தைத்தானே பட்டயத்தில் எழுதி மானிய சாசனம் அளித்தார். நான் உமக்கு பாண்டிய நாட்டையே பரிசாக அளிக்கிறேன்' என்றார். அதற்கு அநிருத்தர் 'எனக்கு எந்த பரிசும் தேவையில்லை உமது அன்னையின் கட்டளை போதுமானது' என்றார. அவ்வேளை செம்பியன் மாதவி 'குழந்தாய் அநிருத்தர் என்று எனக்கு கொடுத்த சத்தியத்தை இன்று வரை காப்பாற்றி வருகிறார் மற்றும் இவர் சோழ குலத்திற்கு உண்மையாக நடப்பதாக சத்தியம் கொடுத்திருக்கிறார. இருந்தும் சுந்தர சோழரிடம் கூட இந்த இரகசியத்தை சொன்னதில்லை. நீ சோழ தேசத்து சிம்மாசனத்தில் ஏற சம்மதித்தால் கூட அவர் பேசியிருக்க மாட்டார்' என்றபோது அநிருத்தர் குறுக்கிட்டு 'ஆம் பேசியிருக்க மாட்டேன் ஆனால் என் முதல் மந்திரி பதவியைத் துறந்து சித்திராங்க நாதருக்கு சேவை செய்யப் போயிருப்பேன்' என்றார். அப்பொழுது செம்பியன் மாதேவி 'மதுராந்தகர் சிம்மாசனம் ஏறமாட்டார் என் கணவருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். நான் புகுந்த சோழ குலத்திற்கு துரோகம் செய்யக் கூடாது சோழ குலத்தில் பிறக்காதவன் சோழ குல சிம்மாசனத்தில் ஏறக் கூடாது அதற்கு உடந்தையாகவும் இருக்கக் கூடாது. ஈசானப்பட்டரும் எம் பொய்களின் மூலம் மற்றவர்களுக்குரிய உரி-மை தடை செய்யலாகாது சக்கரவர்த்தியிடம் உண்மையைச் சொல்லிவிடுவதே நன்று' என்றார்.

*(தொடர்ச்சி ___ பக்கம்...)*

# அன்பின் தொனி - 653

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**எரிச்சலுள்ள தேவன்**

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். - **உபாகமம் 5: 7-9**

உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக. உன் நடு விலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே. - **உபாகமம் 6: 14-15**

யோசுவா ஜனங்களை நோக்கி: நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள், அவர் பரிசுத்தமுள்ள தேவன், அவர் எரிச்சலு ள்ள தேவன், உங்கள் மீறுதலையும் உங்கள் பாவங்களையும் மன்னியார். கர்த்தர் உங்களுக்கு நன்மைசெய்திருக்க, நீங்கள் கர்த்தரை விட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்தால், அவர் திரும்பி உங்களுக்குத் தீமை செய்து, உங்களை நிர் மூலமாக்குவார் என்றான். **- யோசுவா 24: 19-20**

நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே, நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா? **- 1 கொரிந்தியர் 10: 21-22**

அந்நிய தேவர்களால் அவருக்கு எரிச்சலை மூட்டினார்கள், அருவருப்பானவைகளினால் அவரைக் கோபப்படுத்தினார்கள். அவர்கள் தேவனுக்குப் பலியிடவில்லை, தாங்கள் அறியாதவைகளும், தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும், நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள். - **உபாகமம் 32: 16-17**

யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தாங்கள் செய்துவருகிற தங்களுடைய பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள். அவர்களும் உயர்ந்த சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும், மேடைகளையும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங் களையும் தங்களுக்கு உண்டாக்கினார்கள். - **1 ராஜாக்கள் 14: 22-23**

**கடவுளை எரிச்சல்படுத்தலாமா?**

மேலே கொடுக்கப்பட்ட வேத வசனங்களின்படி எம்மைப் படைத்த தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய எங்கள்மேல், உரிமையோடு வைத்திருக்கும் அளவற்ற அன்பின் நிமித்தம், நாம் வேறு எவருக்குமோ, எவற்றிற்குமோ அவருக்கு மேலான அன்பை செலுத்துவதினால் ஏற்படுகிற எரிச்சலென்பதை விபரிக்கிறது. அவர் எம்மைத் தமது சொந்த ஜனம் என்ற உரிமை பாராட்டுகிறதின் நிமித்தம் ஏற்படும் கவலையால் உண்டாகிற ஓர் எரிச்சல் என்பதை நாம் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய எதிர்பார்ப்பெல்லாம் நாமும் அவருடைய சொந்தப் பிள்ளைகளென்ற உரிமை யோடு அவர்மேல் முழுமையான அன்புவைத்து அவரையே வணங்கவேண்டுமென்பது மட்டுமே அவருடைய எதிர்பார்ப்பு. அப்படி அல்லாமல், வேறு படைப்புகளை வணங்குவதின் நிமித்தம் மனித சமுதாயம் கடவுளை எப்பொழுதும் எரிச்சல் படுத்துவதனால் உலகில் அழிவுகளையும், அக்கிரமங்களையும் தேவ கோபாக்கினையின் விளைவாக ஏற்படுவதையும் நாம் எங்கும் காணக்கூடியதாய் இருக்கிறது.

பெற்றோராகிய நாம் எமது பிள்ளைகளை எவ்வளவாக நேசித்து, அன்பு பாராட்டி அவர்களுக்காக எதையெல்லாம் செய் யக்கூடுமோ அப்படியாக எல்லாவற்றையும் அவர்களுக்குச் செய்து வளர்க்கும்போது, அவர்கள் எம்மையும் எமது அன் பையும் உதாசீனம் செய்து அறியாத தெரியாதவர்களுடைய ஆலோசனைக்கு உட்பட்டு வாழும்பொழுது, எமது உள்ளம் எவ்வளவாகத் துடிக்கும்? அந்தக் கவலையினால் பிள்ளைகள்மேல் எரிச்சலும், வெறுப்பும், கோபமும் உண்டாவது சக ஜம். அதைப்போலவே எம்மை உருவாக்கிப் படைத்த தேவாதி தேவனுடைய அன்பையும் அரவணைப்பையும் நாம் விட்டு விலகி பொய் தேவர்களை நாடித் தேடிப் போகும்போது அவரும் எங்கள்மேல் எரிச்சலும் கோபமும் அடைவது, அவரு டைய பேரன்பைத்தான் விளக்குகிறது. ஆகையால், இவைகளை அறிந்த நாம் கர்த்தருக்குப் பயந்து அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து, அவருக்குக் கொடுக்க வேண்டிய கனத்தையும், துதியையும, வணக்கத்தையும் உரியபடி கொடுத்து அவரைச் சந்தோஷப்படுத்தி வாழ்வதின் நிமித்தம், அவருடைய எரிச்சலுக்கும் கோபத்திற்கும் ஆளாகதபடி தப்பித் துக்கொள்ளலாம். அப்படியான எமது வாழ்க்கை மற்ற மக்களுக்கு சாட்சிகளாகவும் அமையும் என்பதற்கு ஐயமில்லை.

**விக்கிரக ஆராதனையில் விழுந்துபோன ஜனம்**

விக்கிரகங்களை வணங்குவது தவறு என்பதையும், அது தேவனுக்கெதிரான பாவம் என்பதையும், அதனால் தேவ கோ பாக்கினை மனுஷர்மேல் வரும் என்பதை அறிந்திருந்தும், விக்கிரக ஆராதனையில் விழுந்துபோனவர்கள் அன்றுதொட்டு இன்றுவரை உலகில் இருந்துகொண்டே வருகின்றனர். அப்படியான சிலை வழிபாடுகளில் ஈடுபட்டவர்கள் தேவ கோபத்தி ற்கு ஆளான நிலமைகளை பரிசுத்த வேதாகமத்தில் விபரித்திருப்பதை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. எனவே, சிலை வணக்கம், விக்கிரக ஆராதனை, மனித வழிபாடு, படைப்புகளை ஆசரிப்பது போன்றவை மெய்யான தேவனை எரி ச்சல்படுத்துவதோடு, அவற்றை அவர் முழுதும் முற்றுமாய் வெறுக்கிறார் என்பதையும், எதிர்க்கிறார் என்பதையும், இன்று நாம் அதை அறிந்தவர்களாகச் சிந்தித்து உணர்ந்து செயற்படவேண்டும். விக்கிரக ஆராதனையில் விழுந்துபோனவர்க ளின் சில சம்பவங்களை பரிசுத்த வேதாகமத்திலிருந்து கவனத்துப் பார்ப்போம்.

தொடரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CRP PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7


**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




## 11 அமுங்குதல் இல்லை

சண்ணிபுறூக் (Sunnybrook) மருத்துவ நிலையத்துக்கு என்னைக் கூட்டிச் சென்றது இதயக் குழாய்களில் எவ்வளவு அடைப்பு இருக்கிறது என்பதை துல்லியமாக அறிந்து கொள்ளும் பரிசோதனையைச் செய்வதற்காகவே.

பொதுவாகவே இதயம் தொடர்பாக பின்வரும் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இவற்றைத் தமிழ்ப்படுத்துவது இலகுவல்ல என்பதால் அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் குறிப்பிடுவது நல்லது.

1. ECG/EKG (Electro Cardiogram)
2. Echocardiogram
3. Cardiac Stress Text
4. Cardiac Catheterization / Angiogram
5. Halter Monitor







என் இதயமே, நீ இவற்றிற்கு இப்போது நன்கு பழக்கப்பட்டு விட்டதால் இவை ஒன்றும் உனக்கு புதியவை அல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அப்போது செய்ய இருந்த ஆன்ஜியோக்ராம் (Angiogram) என்பது உனக்கும் எனக்கும் புது அனுபவம்தான்.

சொல்லப்போனால் வாழ்க்கையில் முதல் அனுபவம்.

ஆடை களைந்து சத்திர சிகிச்சைக்குரிய நீல நிற அங்கியில் இப்போது நான். இந்த நீண்ட அங்கியில் எனக்கொரு விருப்பமும் உண்டு. வைத்தியர்களும் இதுபோன்றே அணிவது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால் அவர்கள் பின்புறத்தை மூடி முன்புறத்தில் கட்டுகிறார்கள். நாங்கள் மாறி. பின்புறம் திறந்திருக்கும். அதை பின்னால் பிடித்துக் கட்டுவதும் பின்புறம் குறிப்பாக குண்டியை மறைப்பது (குண்டி நல்ல தமிழ்தான்) என்பதும் இலகுவல்ல. நடக்கும்போது அவ்வப்போது பிறர் அந்த அழகை பார்க்கக் கூடியதாக இருக்கும். பெண்கள் தாவணியை இழுத்திழுத்து மூடுவது போல நடக்கும் போது விலகும் அங்கியின் ஓரங்களை பிடித்து இழுத்து மூடுவதும் சுலபம் அல்ல.

இப்பிடித்தான் ஒருமுறை ஆஸ்த்மா பிரச்சினை காரணமாய் வாட்டில் சிகிச்சைக்காகவும் சில பரிசோதனைகளுக்காகவும் படுத்திருந்தேன். திடீரென 'வாரும்' என்று அழைத்த வைத்தியரின் பின்னால் நான் ஓட்டமும் நடையுமாய் பின்தொடர என் நீல அங்கியின் பின் முடிச்சு அவிழ்ந்துவிட்டது.

நின்று கட்டவும் நேரமில்லை. மருத்துவரின் வேகத்துக்கு ஈடு கொடுத்து நான் நடந்த போது அங்கியின் சிறகுகள் இரண்டுபக்கமும் பறக்கத் தொடங்கிவிட்டன. என் பின்னழகை பலரும் பார்த்திருக்க வேண்டும். ''see this man... half naked'' - 'பார் இந்த ஆள் அரை நிர்வாணத்தில்' என்று ஒரு பெண் உரத்துச் சொன்ன போதும் நான் அதை பொருட்படுத்தவில்லை. சிவாஜி கணேசன் போல கம்பீரமாக நடந்து கொண்டிருந்தேன். போக வேண்டிய இடத்தை தவறக்கூடாது என்பது மட்டுந்தான் என் குறியாய் இருந்தது.




அந்த நினைப்பில் இப்போது என் அங்கியின் பின்முடிச்சு இறுக்கமாய் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டேன்.

என்ன செய்வது வேஷம் போட்டாய்ச்சு. இதயமே, நீ போட வைச்சிட்டாய்.

அதன்பின்னர் சடங்குகளின் ஆரம்பம். தாதி ஒருவர் வந்து அகற்ற வேண்டியதை அகற்றி துடைக்க வேண்டியதைத் துடைத்து என்னை தயார் செய்தார். இன்னும் ஒருவர் வந்து என்னை என்ன செய்யப் போகிறார்கள் என்பதை ஆறுதலாகவும் தெளிவாகவும் விளங்கப்படுத்தினார்.

இவ்வளவு ஆறுதலாகவும் தெளிவாகவும் எங்கள் ஆசிரியர்கள் விளங்கப்படுத்தியிருந்தால் நாங்களும் எங்கேயோ போயிருக்கலாம் என்ற எண்ணமும் வந்து போனது. கையில் இரத்தக் குழாயில் (நாளம்-Vein) ஊசி ஏற்றத் தயாராகி வைத்துக் கொண்டார்கள்.

என்னென்ன மருந்துகள் எடுக்கிறேன் என்பதையும் ஏதேனும் மருந்துகளுக்கு ஒவ்வாமை (Alergy) இருக்கிறதா என்பதையும் கேட்டுக் குறித்துக் கொண்டார்கள். இந்த ஆன்ஜியோக்ராம் செயல்முறையின்போது (Procedure) அதில் வரக்கூடிய (Risk) பாதிப்புக்கள், அபாயங்கள் பற்றியும் தெரியப்படுத்தி இருந்தார்கள்.

பொதுவாக ஒரு வீத அபாயம் இருப்பதாகவும் அந்த ஒரு வீதத்தில் குருதிப்போக்கு (Bleeding), தொற்று (Infection), ஒழுங்கற்ற இதயத் துடிப்பு (Irregular Heart Beat), மாரடைப்பு (Heart Attack), உறுப்புக்களின் செயலிழப்பு - பக்கவாதம் - (Stroke) அல்லது மரணம் (Death) என்று ஒரு வாய்ப்பாடு போல மிகவும் சர்வ சாதாரணமாக சொல்லி முடித்தார்கள்.

அந்த ஒரு வீதத்துள் நான் அடங்கக் கூடாது என்பது என் பிரார்த்தனையாக இருந்தது. கையொப்பத்தை வேண்டினார்கள். ஏதேனும் பிழை நடந்தால் அவர்கள் முழுப் பொறுப்பையும் எடுக்க இயலாது என்பது அதன் பொருளாக இருக்கும் என்பதையும் கையொப்பமிடும்போது நான் தெளிவாகவே உணர்ந்து கொண்டேன்.

சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு (Operation Theartre) கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். ஒரு துவாய்த் துண்டால் மறைத்துக் கொண்டு எனது மேலங்கியையும் களைந்தார்கள்.

சுந்தராம்பாள் பாடிய

*ஏன் இப்படிக் கோவணத்துடன் தண்டு கொண்டு*
*இங்குற்றோர் ஆண்டியானாய்...*

என்ற பாடல் அந்த நேரத்திலும் நினைவுக்கு வந்தது.

இதயமே எல்லாம் உனக்காகத்தான்... அதற்குள் குளிர் என்றால் அப்படி ஒரு குளிர். இதற்குள் மருத்துவர்களும் தாதிமார்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் எப்படித்தான் தொடர்ந்தும் வேலை செய்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

வெட வெட என்று நடுங்கியது. என்னை முற்றாக மயக்கவில்லை. கால் தொடையில் இரத்தக் குழாயில் ஓட்டை போடுவதற்கு உரிய இடத்தை (Groin) விறைக்கச் செய்தார்கள் (No Anerthesia only Sedative). ஆன்ஜியோக்ராம் (Angiogram) வேலைகள் தொடங்கின.

ஒரு சத்திரசிகிச்சை நிபுணரும் (Surgen) இரண்டு மூன்று தாதிமாரும் (Nurese) ஒரு தொழில்நுட்பவியலாளரும் (Technician) நின்றதாக நினைவு.




கணனித் திரையில் (Computer Screen) ஓரளவுக்குப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

இப்பொழுது அந்த மருந்தை (Dye) அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். அவ்வளவுதான் அந்த எரிவு... ஒருமுறை உயிர் போய் வந்தது.

Coroniary Angiogram ஒரு பரிசோதனை மட்டுமே. அப்பொழுது எனக்கு பரிசோதனை மட்டுமே செய்யப்பட்டது. தடைப்பட்ட குழாயை விரிவடையச் செய்யும்.

ஆஞ்சியோபிளாஸ்ட்டி Angioplasty செய்யப்படவில்லை. இப்பொழு தெல்லாம் தேவைக்கேற்ப பரிசோதனையையும் சிகிச்சையையும் ஒரே முறை-யில் செய்து விடுகிறார்கள்.

மருத்துவத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்களை பாராட்ட வேண்டும். எல்லாம் இனிதே முடிந்தது. பொதுவாக ஒரு ஆன்ஜியோக்ராம் (Angiogram) அல்லது ஆன்ஜியோபிளாஸ்ட்டி (Angioplasty) அல்லது இரண்டும் ஒன்றாக செய்யப்பட்டால் குறைந்தது ஆறேழு மணித்தியாலங்கள் கண்காணிப்பு நிலையில் வைத்தியசாலையில் இருக்க வேண்டும்.

துளை போடப்பட்ட இரத்தக் குழாயில் இருந்து இரத்தம் பாயாமல் இருப்பதும் தொற்றுக்கள் இல்லாமல் இருப்பதும் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும். எல்லாம் இனிதே முடிந்தது. அதன் பின் அன்றோ அல்லது மறுநாட் காலையிலோ நினைவில்லை. என்னை மீளவும் எற்றோபிகாக் வைத்தியசாலைக்கு கொண்டுவந்தனர். அதன் பின்னர் வந்து பார்த்த இதயச் சிகிச்சை நிபுணர் (Cardiologist) எனக்கு இரண்டு குழாய்களில் 20 - 25 வீத அடைப்புக்களும் மாரடைப்பை உண்டாக்கிய குழாயில் 55 - 60 வீத அடைப்புக்களும் இருப்பதாகவும் சொல்லி உடனடியாக வேறு எதுவும் செய்யத்தேவையில்லை என்று இரண்டு மூன்று கிழமைகளுக்கு ஓய்வெடுக்கச் சொல்லி உரிய மருந்து வகைகளையும் எழுதி இரண்டு நாட்களில் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.



அப்பாடா... இப்போதைக்கு பிழைத்தேன் என்று வீடு வந்தேன். வீட்டில் குறிப்பாக உணவு சம்பந்தமான கட்டுப்பாடுகள் அதிகரித்தன. என் மனைவி ஒருவகையில் சர்வாதிகாரி ஆனார்.

நான் முன்பு அங்கும் இங்குமாக செய்துவந்த உடல் உழைப்பு சம்பந்தப்பட்ட பகுதி நேர வேலைகளை முற்றாக விடவேண்டி வந்தது. என் மனைவி அதிகம் பொறுப்பெடுத்து தன் நெஞ்சிலும் தலையிலும் வேலை-களையும் கவலைகளையும் சுமந்து கொண்டு ஒரு முழு நேர வேலைக்குச் செல்லத் தொடங்கினார்.

வேலைக்குப் போகுமுன் எனக்கான பத்தியச் சாப்பாடு அதிகாலையிலேயே தயாராகி விடும்.

என் இதயமே, எவ்வளவு தூரந்தான் நா காக்க முடியும். நீயும் விரும்பமாட்டாய்.

ஆனாலும், என் மனைவி வேலைக்குப் போகும் இந்த ஊட்டில் காய்ந்துபோன என் நாவுக்கு ரகசியமாக கொஞ்சம் தீனி போடவும் எனக்கு வழி கிடைத்தது.

*(___ பக்கம் தொடர்ச்சி...)*

'அவ்வாறே நானும் சொல்லப் போகிறேன் அது எனக்கு எத்தனை இழுக்கு என்றாலும் உண்மை சொல்வதே நன்று' என்றார்.

அப்பொழுது மதுராந்தகர் தன் அன்னையின் காலில் வீழ்ந்து 'தான் தங்கள் மகன் அல்ல என்று மட்டும் சக்கரவர்த்தியிடமோ யாரிடமோ சொல்ல வேண்டாம் அப்படிச் சொன்னால் என் நெஞ்சு வெடித்துவிடும் தங்கள் கருத்தை ஆதரிக்கிறேன்' என்று கூறினார். இதைக் கேட்ட செம்பியன் மாதேவி 'குமாரா இநத ராஜ்ஜியம் எனக்கு வேண்டாம் சுந்தர சோழரின் மகன் அருள்மொழியே ஆளட்டும் என்று நாடு நகரம் அறிய சொல்லிவிடு இப்படிச் சொல்லி விட்டால் நீ என் மகன் அல்ல என்று சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை' என்றார். இதைக் கேட்ட மதுராந்தக தேவர் மனதில் பல எண்ணங்கள் உதித்தன ஈழத்து ராணி என் தாய் என்றால் என் தந்தை சுந்தர சோழர் தானா? இந்த இரகசியம் தெரிந்த என் அன்னையையும், அநிருத்தரையும் கொன்று விட்டால் என் பிறப்பு பற்றிய உண்மையை யார் சொல்வார்கள் என் பிறப்பை பற்றி அறிவிப்பதாக சொன்ன அந்த மனிதன் யார்? அவன் இப்பொழுது எங்கே? என்று சிந்தித்தபடி 'தாயே எனக்கு இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள்' என்றார். அதற்கு அவர் அன்னை 'எப்படியும் நீ சிங்காசனம் ஏற முடியாது மந்திராலோசனை சபையும் மகாஜன சபையும் கூடுவதற்கு மூன்று நாட்கள் உள்ளன. அதற்குள் நிம்மதியாக யோசனை செய்' என்றார். இவ்வேளை அருள்மொழிவர்மர் அந்த அறைக்குள் பிரவேசித்தார். செம்பியன் மாதேவியின் கால்களில் விழுந்து வணங்கி 'இந்த சோழ ராஜ்ஜியம் எனக்கு உரிதாக இருக்கும் பட்சத்தில் அதை நான் தியாகம் செய்து சிவ லோக ராஜ்ஜியத்தை அடைவதற்கு வழி தேடுகிறேன். என்னை ஆசீர்வதியுங்கள்' என்றான். இதைக் கேட்ட செம்பியன் மாதேவியும், அநிருத்தரும் திகைத்து நின்றனர். அருள்மொழிவர்மர் 'தேவி நான் முதல் மந்திரியைப் பார்த்து மேலே நடக்க வேண்டியவை பற்றி பேசுவதற்காக இங்கே வந்தேன். அப்பொழுது தாங்கள் மதுராந்தகரின் பிறப்பை பற்றி இரகசியத்தை பேசியதைக் கேட்டேன் நான் ஈழத்தில் இருக்கும் போது அந்த ஈழத்து ராணி மந்தாகினி தேவி என்னைப் பல ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றினார. அவர் ஊமைய-ாகையால் சித்திரம் மூலம் தன் வாழ்க்கை வரலாற்றைக் கூறினார். அதனால் எனக்கு இவையெல்லாம் தெரிந்ததே அதை நான் குந்தவையிடம் கூறினேன். நாம் யோசித்துப் பார்த்து மந்தாகினியின் வயிற்றில் பிறந்த புதல்வர் ஆகையாலும், சொந்த மகனை காட்டிலும் ஆயிரம் மடங்கு ஆதரவுடன் வளர்க்கப்பட்டவரான என் சித்தப்பா மதுராந்தகர் சோழ சிம்மாசனம் ஏற உரிமை உள்ளவர். அதில் ஏதும் சந்தேகம் இருந்தால் அதை நான் தீர்த்து வைப்பேன்' என்றார். அதற்கு செம்பியன் மாதேவி 'இது வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய வார்த்தைகள் இருந்தும் பின்னொரு காலத்தில் இந்த உண்மை வெளியாகும் நாம் என்ன செய்வோம் பெரும் குழப்பம் வரலாம் அதனால் நாம் அனைவரும் நிதானமாக யோசனை செய்து பார்ப்போம்' என்று முடிவு கொண்டனர். ஆதித்தகரிகாலன் இந்த உலகை விட்டு சென்றுவிட்டான். இவனைக் கொன்ற பழி வந்தியத்தேவன் மீது விழுந்தது. அவனை சம்புவரையர் பாதாளச் சிறையில் போட்டு விட்டார். இதுவரை வந்தியத்தேவன் பல இடங்களுக்கு பயணம் செய்து இப்பொழுது சிறைவாசம் கொண்டுள்ளான். சிறையில் இருந்து எங்கு பயணம் செய்கிறான் என்று காத்திருப்போம்.

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

# இவ்வார ராசிபலன்

## 03-06-2022 வெள்ளி தொடக்கம் 09-06-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** தனவரவுகளை சந்திக்கும் வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மாற்றுத்தொழில் உருவாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கல்வித்தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிட்டும். உறவினர் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தொல்லைகள் ஒழியும். பொறாமைகள் விலகும். பொருள் சேர்க்கை உண்டு. மனஅமைதி குறையும். அரசாங்க அனுகூலம் கூடும். எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் பெருகும். தாய் வழி உறவு லாபம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நிம்மதியான காலம். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு விலகும். சொல்லில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து வந்து சேரும். விபரீத போக்கு மாறும். உடல்சோர்வு ஏற்படும். பணியில் கவனம் தேவை. எதிர்பார்ப்புகள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டு. பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,C




**ரிஷபம்:** பாதிப்புக்கள் அகலும் வாரம். குடும்ப சந்தோஷம் கூடும். புது முயற்சி பலன் தரும். வேலைபளு அதிகரிக்கும். எண்ணம் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விளையாட்டுத்துறை வெகுமானம் தரும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. கணவன், மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் சிறக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவுகளால் அலைச்சல் உண்டு. மனோபயம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. உடல் அசதி ஏற்படும். சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு குறையும். பயணம் அனுகூலம் தரும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வேலைப்பளு குறையும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். வீடு தேடி வெற்றி வரும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். நண்பர்களால் நன்மை உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொல்லைகள் அகலும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். சுமூக சூழ்நிலைகள் ஏற்படும். கடவுள் பிரச்சனை கைகொடுக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சிக் கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். சொத்துக்கள் சேரும். அரசியலில் லாபம் உண்டு. உளுந்து தானம் சிறந்த பலன் சேரும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு உயரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். புதிய முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**கடகம்:** சிந்தனைகள் அதிகரிக்கக் கூடிய வாரம். துன்பங்கள் அகலம். உடல்நலம் சிறக்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொருளாதார நிலை உயரும். மங்கையருக்கு திருமணம் கைக்கூடும். கல்வியில் அக்கறை தேவை. கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வியாபாரம் வளம் பெருகும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் கவனம் தேவை. மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். பூமியால் நன்மை உண்டு. பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களின் உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். புதுமையை விரும்புவீர்கள். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. சுபச்செய்திகள் வரும். காதல் கைக்கூடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். நிம்மதி பெருகும். கடன் சுமை குறையும். கல்வியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,9,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N




**சிம்மம்:** புதுமைகள் நிகழ்த்தும் வாரம். தாராளமான வருமானம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச்செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். கடன் தொல்லைகளில் இருந்து விடுவு பெறுவீர்கள். கையிருப்பு கரையும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழையக் கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். மனக்கசப்பு ஏற்படும். காதலர்களுக்குள் சண்டைகள் ஏற்படும். அரசியலில் ஆதாயம் உண்டு. தங்க நகைகள் சேரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். செலவுகள் அதிகம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புகழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அரசியலில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**கன்னி:** வகையான வாழ்வு அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சூழ்நிலைகள் ஊடுருவும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். மனச்சுமை குறையும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தீரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். வழக்குகளில் வெற்றி தரும். வயிறு உபாதைகளும் உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. குடும்ப பிரச்சனை தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். வழக்குகளில் சாதகமாகும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். இலக்கிய ஆர்வம் கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** சிந்தனையில் முதிர்ச்சி பெருகும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புகள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பால் தானம் பாவம் போக்கும். தாய், தந்தை உதவி உண்டு. அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். கன்னிப்பெண்கள் கவனம் தேவை. கால்நடைகளால் லாபம் உண்டு. கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தீரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**விருச்சிகம்:** மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமாக சூழ்நிலை அகலும். தொழில்போட்டி அதிகரிக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலம் கவனம் தேவை. பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். கருத்து வேறுபாடுகள் தோன்றும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். திக்கற்ற நிலை மாறும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். பயணத்தில் கவனம் தேவை. மாற்று இன நட்பு பெருகும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடி தொழில் முன்னேற்றம் தரும். நலம் காணும் வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை சேரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். இடையூறு அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மேல்மலையனூர் அங்காளம்மன்
அதிர்ஷ்ட எண்: 3,9,7,2, அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**தனுசு:** திட்டமிட்ட செயல் வெற்றி பெறும் வாரம். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். கிருபைகள் சேரும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். நட்பில் பிரிவு ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. குடும்ப பாசம் அதிகரிக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வெளியூர் பயணம் நன்மை தரும். திட்டங்கள் எளிதாகும். இசை ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அழகு நாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F

*(தொடர்ச்சி ___ பக்கம்)*

### கனடா உதயன் ஆதரவு - மலேசிய ரவாங் ராஜா ஏற்பாடு:

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணாக்கர்களின் நாவன்மை நிகழ்ச்சி ஓராண்டை வெற்றிகரமாக நிறைவு செய்தது





**- நக்கீரன்**

உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் வண்ணம், வான வீதியில் உலா வரும் கனட உதயன் இதழ், வெள்ளிதோறும் உதயமாகும் வார இதழாகவும் பவனி வருகிறது. உதயனின் இத்தகைய செம்மாந்த ஊடகப் பயணம், 26-ஆவது ஆண்டை எட்டியுள்ளதையும் உதயன் ஊடகத்தின் தலைமை ஆசிரியர் திருவாளர் என்.லோகேந்திர லிங்கம் அவர்களின் பத்திரிகை-கலை-சமூகவெளிப் பயணம் பொன் விழாவைத் தொட்டுள்ளதையும் ஒருசேரக் கொண்டாடும் உன்னத விழா கனடா ஸ்கார்பரோ பெருநகரில் இன்று மாலையில் கொண்டாடப்பட இருக்கும் வேளையில், மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் நாவன்மை நிகழ்ச்சியைச் சிறப்பிக்க அதிகாலையில் எழுந்துவிட்டார், இந்த நிகழ்ச்சிக்கு வேரும் விழுதுமாக இருக்கின்ற அண்ணன் லோகேந்திரலிங்கம் அவர்கள் "ஓடும் மான் அழகு; நீந்தும் மீன் அழகு; ஆடும் மயில் அழகு; கூவும் கருநிறக் குயிலும் அழகு; ஆனால் சொல்லில் தமிழ்தான் அழகோ அழகு" என்றெல்லாம் இலகுவாகப் பேசி, கேட்போரின் சிந்தயை கொள்ளை கொள்ளும்வண்ணம் இலக்கிய உரை ஆற்றும் தமிழகப் பேச்சாளர் அரங்க நெடுமாறன் அறிமுகம் செய்து வைத்த மலேசிய இளம் பாடகர் ரவாங் ராஜா ஏற்பாட்டில், கடந்த ஜூன் மாதம் தொடங்கப்பட்ட மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி இன்று ஓராண்டை நிறைவு செய்வதை எண்ணியெண்ணி மகிழ்வதாக, நிகழ்ச்சியில் தலைமையுரை ஆற்றிய லோகேந்திர லிங்கம் சொன்னார்.




காலைக் கதிரவன் தரும் புத்துணர்ச்சி ஒருபுறம் இருந்தாலும், நாவன்மை படைக்கத் தயாராக இருக்கும் ஐந்து மாணவச் செல்வங்களைப் பார்க்கும்பொழுது, இன்று புதிதாகப் பிறந்தோமோ என்ற புத்துணர்வு புதுவெள்ளத்தை உள்ளத்தில் பாய்ச்சுவதாக அவர் குறிப்பிட்டார்.

பாடகர் ராஜா, ஏதோ போகிற போக்கில் சொல்லி வைத்த மாணவர்கள் பங்குகொள்ளும் நிகழ்ச்சிக்கு ஒப்புதல் தந்தாலும், மாதந்தோறும் நிறைவு ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ்ப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியத் தரப்பினரை ஒருங்கிணைத்து நெறியாளர் ஆசிரியர் சரளா சுப்பிரமணியத்தின் பாங்கான ஒத்துழைப்புடன் மாதந்தப்பாமல் நிகழ்ச்சியைப் படைப்பது பெரும்பாடு என்பதை அறிவேன்.

அதை அயராமல் கடந்த 12 திங்களாக மேற்கொண்டு வரும் ராஜாவிற்கு தன் மனப்பூர்வமான நன்றியை வெளிப்படுத்தவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் தொடர்பில், அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து அடுத்த ஆண்டில் மலேசியாவில் ஒரு சிறப்பான விழாவை உதயன் இதழின் சார்பில் நடத்த எண்ணம் இருப்பதாகவும் லோகேந்திர லிங்கம் குறிப்பிட்டார்.




தொடர்ந்து "விடாமுயாற்சி வெற்றி தரும்" என்னும் தலைப்பில் கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச பிளட்சர் தமிழ்ப் பள்ளி மாணவி ரவினாஶ்ரீ நந்த குமார், சிலாங்கூர் மாநிலம் ஷா ஆலம் கிளன்மேரி தமிழ்ப் பள்ளி மாணவி மணிஷா செந்தில் குமார், ஜோகூர் மாநிலம் கோத்தா திங்கி பாசாக் தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவி வர்ஷாஶ்ரீ சுரேஸ் ராவ், மலாக்கா மாநிலம் மெர்லிமாவ் செர்க்காம் தோட்டத் தமிழ்ப்பள்ளி மாணவி தனுஶ்ரீ மகேந்திரன், நெகிரி செம்பிலான் மாநிலம் ஜெரம் பாடாங் தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவி தனுஷா கார்த்திகேசு ஆகிய ஐவரும் உற்சாகப் பெருக்குடனும் தன்முனைப்பு கருத்துகளை பொதிய வைத்தும் பேசினர்.

இனிமை குன்றாமல், இன்முகத்துடன் சரளா வழிநடத்திய இந்நிகழ்வில், மாணவர்களின் பேச்சைத் தொடர்ந்து, அமெரிக்கா வாஷிங்டனைச் சேர்ந்த "எனர்ஜைஸ்" திரு.மகேந்திரன் பெரியசாமி கருத்துரை வழங்கினார்.

காலை வேளையில் மாணவர்களின் பேச்சைக் கேட்டு உற்சாகமும் துள்ளலும் அடைந்தாரோ என்னவோ தெரியவில்லை, விருந்திற்கு அப்பளத்தைப் பொறித்து அடுக்குவதைப் போல அடுக்கு மொழியிலும் மிடுக்கு நடையிலும் மலேசிய கவிமகன் ஐ.உலகநாதன் கவி வரிகளையும் துணை கொண்டு மகேந்திரன் பெரியசாமி பேசினார்.., பேசினார்.., இது கூகுள்வழியான இணையக் கூட்டம் என்பதையும் மறந்து 22 நிமிடங்களைக் கடந்தும் பேசினார். 23-ஆவது நிமிடத்தில் போனால் போகிறதென்று பேச்சை நிறுத்தினார். ஆனாலும், மாணவர்கள் முதல் ஆசிரியர்கள், பெற்றோர்கள் முதல் கொண்டு அனைவரும் கேட்க வேண்டிய நல்லுரை எழுச்சியுரையாகவும் ஊக்க மொழியாகவும்கூட அது அமைந்தது.

மீண்டும் தொகுப்புரை வழங்கிய திரு. லோகேந்திரலிங்கனும் மகேந்திரன் பெரியசாமியை வெகுவாகப் பாராட்டினார். தொடர்ந்து, முன்னாள் தலைமை ஆசிரியர் கோவிந்த சாமி இராமசாமி நன்றியுரை ஆற்றியபின், ஐந்து தமிழ்ப் பள்ளிகளின் சார்பில் தலைமை ஆசிரியர்களும் அவர்களின் சார்பில் மற்ற ஆசிரியர்களும் கருத்து தெரிவித்தனர். குழு படப்பிடிப்புடன் இந்த நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.







## இவ்வார ராசிபலன்

(___ பக்கம் தொடர்ச்சி)




**மகரம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடல் தொல்லை நீங்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணியக் காரியம் கைக்கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வெளியூர் பயணம் உண்டு. வீண் செலவு ஏற்படும். நெருக்கடிகள் குறையும். விவேகம் வெளிப்படும். வாகனச்செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். விவசாயம் பலன் தரும். உத்தியோக உயர்வு உண்டு. மனஅமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். நன்மதிப்புக் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். அணிகலன் சேரும். யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பதற்றம் குறையும். நிதி பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. வெறுப்புக்கள் அகலும். சிறப்புக்கள் சேரும். பயணம் அனுகூலம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N




**கும்பம்:** நல்லோர்களின் நட்பு கிட்டும் வாரம். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத் தடை ஏற்படும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனபயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை. உடல் அசதி ஏற்படும். பொறுமையைக் கையாள வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். கல்வியில் ஈடுபாடு குறையும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். தொழில் வளம் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சிறக்கும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,1

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**மீனம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்கைள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். புதிய வேலை முயற்சிகள் பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். யோகமான காலம். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். வியாபாரம் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கை தரம் உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணியில் இடமாற்றம் ஏற்படும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். எண்ணம் வண்ணமயமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். கலக்கமான மனநிலை காணப்படும். கௌரவத்தில் கவனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். நல்லச்செய்திகள் நாடி வரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. செல்வாக்கு உயரும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்பட்டு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H

# மரண அறிவித்தல்



பிறப்பு:
**03-12-1946**

இறப்பு:
**19-05-2022**

## திரு. மருதையினார் வேலுப்பிள்ளை

**(1ம் வட்டாரம், அனலைதீவு)**

**இலங்கை வடமாகாணத்தில் அமைந்துள்ள சப்ததீவுகளின் ஒன்றான அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மருதையினார் வேலுப்பிள்ளை (PHARMACIST) அவர்கள் 19.05.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதையினார் (முன்னாள் கிராமவிதானையார்) - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் கனிஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சபாரத்தினம் (தபாலதிபர்). தனலெட்சுமி மற்றும் வைத்தியநாதன் (தபாலதிபர்), தங்கராசா (தபாலதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (முன்னாள் கிராமசேவையாளர்) மற்றும் பாக்கியம், காலஞ்சென்றவர்களான நடராசா (முன்நாள் வர்த்தகர் கொழும்பு), புஸ்பமணி மற்றும் சற்குணானந்ததேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

கௌரி, காலஞ்சென்ற கலைவாணி, மற்றும் அருட்சோதி, சாரதாமணி, நித்தியானந்தன், சந்திரமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், மற்றும் சிவசக்தி, அருட்சக்தி, சிவச்செல்வி, நிரஞ்சனா, சிறீதரன், ரவீந்திரன், நிசாந்தினி (ஆசிரியை), மனோகரன் (IT), மயூரன், ராஜ்குமார், தர்மினி (IT) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், நடேசன் (CET), லோகராசா, சிவனேஸ்வரி, கனகரெத்தினம், மகாலெட்சுமி, பஞ்சாட்சரம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சித்தப்பாவும், வேணுகுமார், பரமலிங்கம், புவிராஜன், பிரகஸ்பதி, ரதிமலர். சுபதா. விமலேந்திரன், கலைமகள், மகேஸ்வரி, அனித்தர். சாரங்கன் - சங்கீதபூஷணம் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

Dr. சங்கர, Dr. விபிஜிதா, அனுஷா, ராஜ்குமார் (IT), சுகந்தினி, சிவனருள், ஜெயந்தினி, கோமளன், அச்சுதன், Dr. விபீஷன், Dr. ரிஷானி, Dr. அபிராமி, வைஸ்ணவி, ரம்யா, நந்திகா, யாதவ் மோகனா, கஜானந்தன், கீர்த்தனா, மானிசா, கான்னுஷ், பிரசன்னா, யசோதினி, சொரூபன், ராகவி, நிரூபன். பிரவீன், சிநேகா, ரக்ஷி, ரக்ஷன், றெச்சல், ஜானுகா. திலக்ஷன், தாருகா தாருஷா, ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

*அன்னாரின் ஈமைக்கிரியைகள் இலங்கையில் நடைபெற்றுள்ளது என்ற செய்தியை ஆழ்ந்த துயருடன் தெரிவித்துக்கொள்வதோடு, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைரையும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.*

**தகவல்: சகோதரர்கள்**
**ம.வைத்தியநாதன்: (905) 915-3254**
**ம.தங்கராசா: 112-736181**

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING

உதயம் 1365 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 3, 2022



# உலகத் தமிழர்களை ஒன்றிணைக்க அதன் தலைமைப் பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்த கனடிய பிரமுகர் நிமால் விநாயகமூர்த்தி

உலகத் தமிழர்களை ஒன்றிணைக்க தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள்.

அத்துடன் தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதைத் தொடரவும், அவர்களுக்குப் போதுமான உதவிகளை வழங்கவும், குறிப்பாக அவர்களின் கல்வி, தங்குமிடம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துங்கள்

மேலும் ஈழத் தமிழர் பிரச்சினைகளுக்கு தலைமை தாங்க ஒரு செயலாளரை நியமித்து, அவரை உளளிதாக தொடர்பு கொள்ள தயவு செய்து அனுமதியுங்கள்

அத்துடன் விசேடமாக இலங்கையின் தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் இந்திய அரசின் உத்தரவாதமாக நிறுவப்பட்ட நிரந்தர அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான தீர்மானத்தை தமிழ்நாடு சட்ட மன்றத்தில் முன்வைக்கும் முயற்சியில் கவனம் செலுத்துங்கள் மேலும் ஈழத் தமிழர்களின் பாதுகாப்பு, சுயமரியாதை மற்றும் நிரந்தர அரசியல் தீர்வைத் தமிழகத்தின் முதலமைச்சராக நீங்கள் ஆட்சி செய்யும் காலத்தில், பரிகார நீதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வை அடைய அவர்களுக்கு ஆதரவு அளியுங்கள். இவையனைத்தும் நிறை வேறினால் உலகெங்கும் வாழும் ஈழத்தமிழ் உறவுகள் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்

இவ்வாறு கனடா வாழ் கணக்காளரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சருமான திரு நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் மேற்படி சந்திப்பின் போது முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களிடம் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் எடுத்துரைத்தார்.

மேற்படி சந்திப்பு தமிழக சட்டப்பேரவையில் நேற்று இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்படும் படத்தில் முதலமைச்சரோடு திரு நிமால் விநாயகமூர்த்தி காணப்படுகின்றார்.

# கனடா உதயன் ‘இலங்கைச் சிறப்பிதழை’ குயின்றஸ் துரைசிங்கம் வெளியிட நடா ராஜ்குமார் பெற்றுக்கொண்டார்

கடந்த வெள்ளிக்கிழமை வெளிவந்த கனடா உதயன் ‘இலங்கைச் சிறப்பிதழை’ 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற உதயன் விழாக்களின் சங்கமம் நிகழ்ச்சியில் கனடிய தமிழ்ச் சமூகத்தின் தலைவர்களில் ஒருவரான குயின்றஸ் துரைசிங்கம் வெளியிட ஈஸ்ட் எப் எம் 102.7 வானொலி நிலையத்தின் அதிபர் திரு நடா ராஜ்குமார் பெற்றுக்கொண்டார். இங்கே காணப்படும் படத்தில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களும் உள்ளார்.





# கோவிட் -19 தாக்கத்திலிருந்து , மக்களைக் காப்பாற்ற உழைத்த சேவையாளர்களுக்கு வழங்கப்பெற்ற தொண்டர் சேவைப் பதக்கங்கள்



கோவிட்-19 வைரஸின் தாக்கம் அதிகமாக இருந்தபோது, மக்களைக் காப்பாற்ற உழைத்த வைத்தியசாலைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் முதியோர் இல்லங்களின் சேவையாளர்கள் ஆகியோரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி நடத்தப்பெற்ற வைபவத்தில் ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் **MP Shaun Chen** அவர்கள் அரசாங்கம் சார்பான தொண்டர் சேவைப் பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தார். பல தொண்டர்கள் மற்றும் வைத்தியர்கள் தாதிகள் பொதுச் சேவையாளர்கள் ஆகியோர் இந்த கௌரவங்களைப் பெற்றனர்.

இந்த கோவிட்-19 தீவிரமாக இருந்த காலத்தில் உணவுப் பொதிகளை வைத்தியசாலைகளுக்கு வழங்கிய ஸ்காபுறோ சரவணா பவன் உணவகத்தின் தலைவர் திரு கணேசன் சுகுமார் மற்றும் முகாமையாளர் முஜா ஆகியோருக்கும் பதக்கங்கள் வழங்கப்பெற்றன.

# கனடா உதயன் ‘இலங்கைச் சிறப்பிதழ்‘ விசேட பிரதிகளை பெற்றுக்கொண்ட வர்த்தகப் பிரமுகர்கள்








கனடா உதயன் “இலங்கைச் சிறப்பிதழ்“ வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய நண்பர்கள் சில அதன் வெளியீட்டு விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ள இயலவில்லை.

எனவே அவர்களிடம் நேரடியாகச் சென்ற உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்கள் இலங்கைச் சிறப்பிதழ்“ பிரதிகளை சிலரிடம் கையளித்தார்.

இங்கு காணப்படும் படங்களில் நண்பர்களும் வர்த்தக அன்பர்களுமான மோர்ட்கேஜ் ஆலோசகர் ஜே ராஜதுரை அவர்கள். “கெம்சொனிக்ஸ்“ நிறுவன அதிபர் ரஜீவ் செபராசா அவர்கள். வீடு விற்பனை முகவர் கிறிஸ் சிவபாதம் அவர்கள், ஆகியோருக்கு இலங்கைச் சிறப்பிதழ்“ பிரதிகளை பிரதம ஆசிரியர் அவர்கள் கையளிப்பதைக் காணலாம்.

# கனடா உதயன் ஆதரவில் மலேசியா-ரவாங் ராஜா ஏற்பாட்டில்... மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணாக்கர்களின் நாவன்மை நிகழ்ச்சி ஓராண்டை வெற்றிகரமாக நிறைவு செய்தது



உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் வண்ணம், வான வீதியில் உலா வரும் கனட உதயன் இதழ், வெள்ளிதோறும் உதயமாகும் வார இதழாகவும் பவனி வருகிறது. உதயனின் இத்தகைய செம்மாந்த ஊடகப் பயணம், 26-ஆவது ஆண்டை எட்டியுள்ளதையும் உதயன் ஊடகத்தின் தலைமை ஆசிரியர் திருவாளர் என்.லோகேந்திர லிங்கம் அவர்களின் பத்திரிகை-கலை-சமூகவெளிப் பயணம் பொன் விழாவைத் தொட்டுள்ளதையும் ஒருசேரக் கொண்டாடும் உன்னத விழா கனடா ஸ்கார்பரோ பெருநகரில் இன்று மாலையில் கொண்டாடப்பட இருக்கும் வேளையில், மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் நாவன்மை நிகழ்ச்சியைச் சிறப்பிக்க அதிகாலையில் எழுந்துவிட்டார், இந்த நிகழ்ச்சிக்கு வேரும் விழுதுமாக இருக்கின்ற அண்ணன் லோகேந்திர லிங்கம் அவர்கள்.

*(உள்ளே விபரமான செய்தி 29ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker